
# 'நீட்' நுழைவுத்தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் !

## கல்வி மீண்டும் மாநில அதிகாரப் பட்டியலுக்கு வர வேண்டும் !
## 100 விழுக்காட்டையும் நான்கு வகுப்புகளுக்கும் பிரித்துத்தரப்பட அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் !

சுவடி : 41
ஏடு : 4
அக்டோபர் 2017
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ.முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

**National Eligibility cum Entrance Test (NEET)**
**தேசியத் தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு**



மேற்கண்ட தொடரில் உள்ள எல்லாமே சிந்தனைக்கு உரியவை. "இந்திய தேசம்" என்ற ஒன்று வெள்ளையர் வருவதற்கு முன்பு இல்லை. தகுதி, திறமை என்கிற சொற்கோவைகள் ஏமாற்றுத்தனமானவை. "தேசியத்தகுதி" என்பது அதைவிட மோசடியானது. ஏன்?

இந்தியச் சமூகத்தில் வெகுமக்களாக இருக்கிற சூத்திரர்களும் தீண்டப்படாதவர்களும் தொடர்ந்து 2000 ஆண்டுகளாகக் கல்வி பெறும் உரிமை மறுக்கப்பட்டார்கள்.

பார்ப்பனர், சத்திரியர், வைசியர் மற்றும் சற்சூத்திரர் என்கிற மேல்சாதி சூத்திரர்கள் உள்ளிட்ட 17 விழுக்காடு மக்களே கல்வி உரிமை பெற்றிருந்தனர். மீதி 83 விழுக்காடு மக்கள் கல்வி மறுக்கப்பட்ட நிலையில், 17 விழுக்காடு மேல்சாதி மாணவர்கள் தேர்வில் பெறுகின்ற மதிப்பெண்களை அடிப்படையாக வைத்து அவர்கள் மட்டுமே இத்தேசத்தில் தகுதி பெற்றவர்கள் - திறமையானவர்கள் என்று இந்திய அரசு முடிவெடுப்பது வெகு மக்களுக்கு எதிரானதாகும்.

இந்தியக் கிறித்தவர்களும், இந்திய இசுலாமியர்களும் இந்நாட்டுக்கு அந்நியர்கள் அல்லர். இந்து மதத்தில் கீழ்ச்சாதியாக இருந்து துன்பப்படாமலிருக்க வேண்டி மதமாற்றம் பெற்றவர்களே ஆவர்.

தென்னாட்டுப் பார்ப்பனர் அல்லாத மக்கள் - தகுதி, திறமை என்கிற பேரால் மாகாண அரசின் வேலைகளிலும், மாகாண அரசின் உயர் படிப்பிலும் 1920 வரை பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுக் கிடந்தார்கள். 1927க்குப் பிறகுதான் தந்தை பெரியார், முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன், பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் எஸ்.முத்தைய முதலியார் ஆகியோரின் முயற்சியால், 1928 முதல் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார், இசுலாமியர், கிறித்துவர், ஆதித் திராவிடர் ஆகிய 5 வகுப்புகளுக்கும் மாகாண அரசின் வேலையில் பங்கீடு தரப்பட்டது. 1940 முதல் கல்வியிலும் இந்த 5 வகுப்புகளுக்கும் இடப்பங்கீடு தரப்பட்டது.

கடந்த 90 ஆண்டுகளாகத்தான் பழைய சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாதாரின் நிலை இந்த இரண்டு துறைகளிலும் சொல்லும்படியான நிலையில் ஓரளவு முன்னேறி உள்ளது. இதற்கு ஒரே காரணம் நுழைவுத்தேர்வு என்கிற பேரால் தகுதி, திறமை பார்த்து மாணவர்களையும் அலுவலர்களையும் தேர்ந்தெடுக்காமல், வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுத்ததுதான். வடநாட்டுப் பார்ப்பனரல்லாதார் அல்லது பிற்படுத்தப்பட்டோரின் நிலை மிகவும் பின்தங்கி இருப்பதற்குக் காரணம், வெள்ளையன் வெளியேறிய பிறகும், இந்திய அரசமைப்புச் சட்டம் 1950இல் நடப்புக்கு வந்த பிறகும், 1978 வரை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு விழுக்காடு இடஒதுக்கீடு கூட வழங்கப்படாததே ஆகும்.

இந்தியா முழுவதிலும் உள்ள பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் அரசியல் சட்டப்படி 1950இல்தான் வேலையில் இடஒதுக்கீடு தரப்பட்டது. இருப்பினும் மொத்தம் 25.5 விழுக்காடு மக்கள் தொகையுள்ள பட்டியல் வகுப்பினரும் பழங்குடியினரும் முதல்நிலைப் பதவிகளில், 2017இல், 17.4 விழுக்காட்டுக்கு மேல் இத்தனை ஆண்டுகளாக இன்னமும் பங்குபெற முடியவில்லை. அதேபோல் பிற்படுத்தப்பட்டவர்கள் மய்ய அரசின் கல்வியிலும்

வேலையிலும் 1994 இல்தான் இடஒதுக்கீடு பெற்றனர். எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப் பட்டோரும் 2017இல் 5.4 விழுக்காடு அளவுக்கே மய்ய அரசின் முதல்நிலைப் பதவிகளில் பங்கு பெற்று உள்ளனர். ஆனால், அவர்களின் மக்கள் தொகை 57 விழுக்காடு ஆகும்.

அதாவது, கல்வியில் சமத்துவம் அற்ற நிலை, வேலை வாய்ப்பில் சமத்துவம் அற்ற - சமச்சீர் அற்ற சமூக நிலை இன்று வரை இங்கு நிலவுகிறது. சமூகத்தில் சமத்துவமும், கல்வியில் சமத்துவ நிலையும் அடையாத வெகுமக்களான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடியின மக்களையும், சிற்றூர்ப்புற ஏழை மக்களையும் தகுதியற்றவர்களாக ஆக்கிட ஒரு கருவியாகத்தான் நீட் தேர்வு உள்ளது என்பதை நாம் எல்லோரும் உணரவேண்டும். இதை அடியோடு ஒழிக்காமல் தேசியத் தகுதிகாண் நுழைவுத் தேர்வு நடத்துவது அரசமைப்புச் சட்டத்துக்கும் சமூக நீதிக்கும் வேண்டுமென்றே இந்திய அரசு இழைக்கும் அநீதியாகும். எனவே, நீட் நுழைவுத்தேர்வு ஒழிக் கப்பட வேண்டும்.

மேலும், 3.1.1977இல் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி, பொதுப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விரைவில் மாநில அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். இது அரசியல் சட்டத் திருத்தப்பாடு வழியேதான் முடியக் கூடியதாகும்.

**இந்தப் புரிதலுடன்தான், நாம் எல்லோரும் கருத்து வேறுபாடுகளை மறந்து தேசியத் தகுதி காண் நுழைவுத் தேர்வுத் திட்டத்தை முழுமூச்சுடன் எதிர்த்து ஒழிக்க வேண்டும். இதில் தமிழக அரசு உறுதியாக இருக்க வேண்டும்; எல்லாக் கட்சிகளும் நீட் நுழைவுத்தேர்வுத் திட்டத்தை ஒழிக்கப் போராடுவதிலும், கல்வியை மாநிலப்பட்டியலில் சேர்க்கக் கோருவதிலும் ஒன்றுபட்டே செயல்பட வேண்டும். நிற்க.**

அரசமைப்புச் சட்டம் விதி 15(4) மற்றும் 16(4) இவற்றில் கையாளப்பட்டுள்ள சொற்கோவைகளை நாம் கவனமாக ஆய்வு செய்து, பின்கண்ட கோரிக்கைகளை இந்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் வைக்க வேண்டும்.

விதி 16(4), 1950இலேயே டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரால் உருவாக்கப்பட்டது. அதில் உள்ள சொற்கோவை யான “from making any provision” அரசு, அரசின் வேலையில் இடஒதுக்கீடு தர **“எந்த ஏற்பாட்டையும் செய்யலாம்”** என்று உள்ளது. **‘‘எந்த ஏற்பாடு’’** என்பதற்கு **மக்கள் தொகை விகிதாசாரம்** என்பதே பொருள் என்ற அடிப்படையில்தான் பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் மய்ய அரசின் வேலையிலும் மாநில அரசின் வேலையிலும் விகிதாசாரப் பங்கீடு அளிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், தந்தை பெரியாரின் 1950ஆம் ஆண்டையப் போராட்டத்தால், சமூகத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கும், பட்டியல் வகுப்புகளுக்கும், பழங்குடிகளுக்கும் அரசமைப்புச் சட்டத்தில், 2.6.1951இல், விதி 15(4) என்பது சேர்க்கப்பட்டது. அதில் உள்ள சொற் கோவையான “from making any provision” என்பது, அரசின் உயர்கல்வியில் இடஒதுக்கீடு செய்ய **‘‘எந்தச் சிறப்பு ஏற்பாட்டையும்’’** செய்யலாம் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இதுவும் விகிதா சார இடப்பங்கீடு பெற வழியைக் கொண்டிருப்பதே ஆகும். எனவே, விதிகள் 15(4), 16(4), 29(2) ஆகியவற்றை - எல்லா மதங்களையும் சார்ந்த முற்பட்டோர், எல்லா மதங்களையும் சார்ந்த பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங் குடியினர் ஆகிய நான்கு வகுப்பினருக்கும் அரசுக் கல்வியிலும், வேலையிலும் அவரவர் மக்கள்தொகை விகிதாசாரப்படி இட ஒதுக்கீடு தர ஏற்றபடி திருத்தம் செய்ய வேண்டும். இது நிறை வேறிட ஏற்ற எல்லா முயற்சிகளும் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

அத்துடன், இந்த அரசமைப்புச் சட்டம் எழுதப்படு வதற்கு முன்னமேயே, 1946இல் பட்டியல் வகுப்பினருக்கு மட்டும் 12.5 விழுக்காடு விகிதாசாரப்படி மத்திய அரசு வேலையில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பெற்றுத்தந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்து-பிற்படுத்தப்பட்டோருக்கு, சென்னை மாகாணத்தில், பெரியாரின் கோரிக்கையை ஏற்று 1947 நவம்பரில் 14 விழுக்காடு இடஒதுக்கீடு கல்வியிலும் வேலையிலும் ஓமாந்தூரார் அரசு அளித்தது. அந்த விழுக்காட்டை 1954இல் கு.காமராசர் எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோருக்குமாக 25 விழுக்காடாக உயர்த்தினார்.

தி.மு.க ஆட்சிக்காலத்தில் தந்தை பெரியாரின் கோரிக் கையை ஏற்று எல்லா மதங்களையும் சேர்ந்த பிற்படுத்தப்பட் டோருக்கு 31 விழுக்காடாக கலைஞர் மு.கருணாநிதி உயர்த்தினார்.

தந்தை பெரியாரின் மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.க ஆட்சியிடம் 19.8.1979இல் தமிழ்நாட்டுப் பிற்படுத்தப்பட் டோருக்கு உள்ள இடஒதுக்கீட்டினை 60 விழுக்காடாக உயர்த்திடக் கோரிக்கை வைத்து, அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் பெரியார் சமஉரிமைக் கழகமும் (மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சி), அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் முயன்று, 1.2.1980இல் 50 விழுக்காடு பெற்றன. அதாவது, சென்னை மாகாணத்தில், அல்லது தமிழ்நாட்டில் 1928 முதல் 1979 வரை போராடித்தான்-இன்று உள்ள நிலையை- அதாவது பிற்படுத்தப்பட்டோருக்கு 50 விழுக்காடும், பட்டியல் வகுப்பினருக்கு 18 விழுக்காடும், பழங்குடியினருக்கு 1 விழுக் காடும் பெற முடிந்தது. இது காங்கிரசு, தி.மு.க., அ.தி.மு.க., ஆகிய கட்சி களின் ஆட்சியைக் கருவியாகக் கொண்டு பெறப்பட்ட சாதனையாகும்.

இப்படி ஒரு இயக்கம், மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் தலைமையில் 1978இல் தொடங்கி 1991 வரையில் அனைத்திந்திய அளவில் செயல்பட்டது போல், நீட் எதிர்ப்பு இயக்கமும், விகிதாசார இடஒதுக்கீடு போராட்டமும் அனைத்திந்திய அளவில் நடத்தப்பட வேண்டும் என விரும்பு கிறோம்.

1-10-2017 **வே. ஆனைமுத்து**

# சென்னை, அம்பத்தூரில்
# பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையில்
# பெரியார் 139ஆவது பிறந்த நாள் விழா




மா.பெ.பொ.க துணை பொதுச் செயலாளர்
சி.பெரியசாமி உரையாற்றுகிறார்




அறக்கட்டளை செயலாளர் துரை கலையரசு
உரையாற்றுகிறார்

சென்னை, அம்பத்தூரில் இயங்கி வரும் பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையில் பெரியார் 139ஆவது பிறந்த நாள் விழா 24.9.2017 ஞாயிறு காலை 10 மணிக்கு தொடங்கியது. பகுத்தறிவாளன் வரவேற்புரையாற்றினார். துரை. கலையரசு தலைமை தாங்கினார். சி. பெரியசாமி, துரை. சித்தார்த்தன், ஆ. முத்தமிழ்ச்செல்வன், வாலாசா வல்லவன், காஞ்சி சி.நடராசன், ஆகியோர் உரையாற்றினர். பெண்ணியச் செயற்பாட்டாளர் ஓவியா சிறப்புரையாற்றினார். அய்யா வே.ஆனைமுத்து அவர்கள் நிறைவுரையாற்றினார். ப.வடிவேலு நன்றி கூறினார்.

# சாதி ஒழிப்புக்குத் தந்தை பெரியாரின் தற்காலத் தேவை
## உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரியில்
# தமிழியல் ஆய்வு மன்றக் கருத்தரங்கம்



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி, உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரியில், 22-09-2017 வெள்ளிக் கிழமை அன்று, காலை 10 மணிக்கு, தமிழியல் ஆய்வு மன்றத்தின் சார்பில், **“சாதி ஒழிப்புக்குத் தந்தை பெரியாரின் தற்காலத் தேவை”** என்கிற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ஏ. கருப்பன் தலைமை வகித்தார். முனைவர் சிவ. முருகேசன் வரவேற்புரை நிகழ்த்திட, தமிழ்த் துறைத் தலைவர் பேரா. ச. அந்தோணி டேவிட்நாதன் அறிமுகவுரை வழங்கினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து அவர்கள், பிறவி அடிப்படையில் உயர்வு - தாழ்வுகளுக்கும், வருண - சாதி அமைப்புகளுக்கும், தீண்டாமைக்கும், மத மூட நம்பிக்கைகளுக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் என்னென்ன பாதுகாப்புகள் உள்ளன; அவற்றை ஒழித்திடத் தந்தை பெரியார், மாமேதை அம்பேத்கர் போன்றோரின் பங்களிப்புகள் என்னென்ன; இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நீக்கப்பட - திருத்தப்பட வேண்டிய விதிகள் யாவை என்பன குறித்து தெளிவான கருத்துரை வழங்கினார்.

பேரா. த. குளோரி நிகழ்ச்சியை நிரல்படுத்தி வழங்கிட, தமிழியல் ஆய்வு மன்றப் பொறுப்பாளர் முனைவர் து. பார்த்திபன் நன்றியுரையாற்றினார். பெருந்திரளான மாணவர் கூட்டத்தினர் விழாவில் கலந்துகொண்டு தெளிவு பெற்றதுடன், தந்தை பெரியாரின் இன்றையத் தேவையை நெஞ்சில் ஏந்தி விடைபெற்றனர்.

# கடவுளைச் சுட்டுப் பொசுக்க வேண்டாமா?

**ஒரு** மனிதனைப் பறையனாகவிருக்க ஒரு மதம் சொன்னால், அந்த மதம் வேண்டுமா? ஒரு வனுக்குச் சூத்திரப் பட்டம் கொடுக்கவும் ஒரு மதம் இருப்பின், அந்த மதம் வேண்டுமா? என்று கேட்டால் இந்தச் சூத்திரப் பட்டம் ஒழிய வேண்டும். இப்படிப்பட்ட இந்து மதம் வேண்டாம் என்றே சுயமரியாதையுள்ள ஒவ்வொருவனும் சொல்லுவான். இப்போது ஒருவன் தன்னை இந்து என்று சொல்லிக் கொள்ள வேண்டு மானால், அவன் கண்டிப்பாக சூத்திரப்பட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அப்படிப்பட்ட மதம் எனக்கும் வேண்டாம்; உங் களுக்கும் வேண்டாம்; இந்த மாதிரியான இந்து மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று சொல்லப் படுவதினால் அந்தக் கடவுளும் வேண்டாம்.

எனக்குக் கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ, சாஸ்திரத்தைப் பற்றியோ அக்கறையில்லை. ஆனால் கெடுதியை நீக்கவும், கொடுமைகளைப் போக்கவும் முயற்சிக்கிற போது கடவுள்தான் சாதிகளை ஏற்படுத்தினார். அதன்படி நடக்கத்தான் வேண்டுமென் றால், அந்தக் கடவுள் எத்துணைப் பெரிய கடவுளா யிருந்தாலும், அதைச் சுட்டுப் பொசுக்க வேண்டாமா? அதைப் புதைக்க வேண்டாமா? என்றே உங்களைக் கேட்கிறேன். இந்த நிலைமையிலேயே நாம் எல்லா வற்றையும் தாக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட் டால் எங்கட்கு அவற்றில் என்ன வேலை? எவன் அவற்றை வைத்துக் கொண்டு பிழைத்தால் என்ன? நம்மைத் தாழ்த்தி அமுக்கிக் கொடுமைப்படுத்த அந்த மதம், சாஸ்திரம், கடவுள் ஆகிய மூன்றையும் கொண்டு வந்தால், நான் ஏன் சம்மதிப்பேன்? இதனாலேயே நாம் எல்லோருக்கும் அதிலும் பார்ப்பாருக்கும் விரோதி களாய்ப் போய்விட்டோம்.

இவற்றால் ஏமாற்றிக் கொண்டு வந்த கூட்டத் தாருக்கு விரோதிகளானோம். பிறப்பில் வித்தியாசம் பாராட்டக்கூடாது. ஒருவனையொருவன் அடக்கியாளக் கூடாது என்று சொல்வதால், ஒன்றும் முழுகிப்போய் விடாது. யோக்கியமான மதமும், யோக்கியமான கடவுளுமாயிருந்தால் இதனாலெல்லாம் போய்விடாது. அப்படியே போய்விடக்கூடிய கடவுளால், என்ன நஷ்டம் வந்துவிடும்.

### ஒரு கதை

ஒரு வேடுவனையும் ஒரு வேளாளனையும் பற்றி ஒரு கதை சொல்லுகிறேன். அதாவது ஒரு வேளாளன் ஒரு பிள்ளையாரைப் பக்தியாகப் பூசை செய்து கொண்டு வந்தான். ஒருநாள் ஒரு வேடுவன் அந்தப் பிள்ளை யாருக்கு நேராய்க் கால்நீட்டிப் படுத்துக் கொண்டி ருந்தான்.

உடனே அந்தப் பிள்ளையார் வேடுவனை ஒன்றும் செய்ய முடியாமல், வேளாளனிடம் போய் அந்த வேடு வனைக் காலை எடுக்கச் சொல்லுகிறாயா அல்லது உன் கண்ணைக் குத்தட்டுமா என்றதாம். ஏன்! அந்தப் பிள்ளையார் கோபம் அந்த வேடனிடம் செல்லவில்லை? இதே மாதிரிதான் கடவுள்கள் எல்லாவிடத்தும் செய்வ தாயிருக்கிறது.

ஒரு கூட்டத்தில் மனுஸ்மிருதி நெருப்பில் கொளுத் தப்பட்டது. ஏனெனில் அதில் நமக்குச் சகிக்க முடியாத இழிவு கூறப்பட்டிருப்பதால், "ஒரு சூத்திரனுடைய பணத் தைப் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொள்ளலாமென்றும், இதுதான் இந்துமத ஆதாரம் என்றும், இது கடவுள் சொன்னதென்றும்" சொல்லப்படுவதை எண்ணி, அந்த மனுஸ்மிருதி நெருப்பு வைக்கப்பட்டது.

அப்பொழுது தற்போதைய தேசபக்தர்கள் திரு. இராஜகோபலாச்சாரியார் உட்பட பலர் ஆட்சேபித்தார் கள். இதற்குச் சர்க்காரையும் உதவிக்குக் கூப்பிட்டார்கள்.

நீங்கள் சம்பாதித்து ஒரு கூட்டத்தாருக்குக் கொடுப் பதும், சூத்திரர் முதலியோர் படிக்கக்கூடாது; அவர்கட்குச் சுயேச்சைக் கொடுக்கக்கூடாது என்றால், அந்த மனு நூலைக் கொளுத்தி, உங்களது இழிவைப் போக்கிக் கொள்வதா அல்லது அதை ஒப்புக்கொள்வதா? ஆகை யாலேயே, இந்த இயக்கத்தை விடாதீர்கள் என்று சொல்லுகிறோம்.

இன்றைய நிலையில் சுயேச்சையும், சுயாதீனமும் பெறப் பாடுபடுவது என்னமாய் முடியும்? இந்தத் தடைகளைப் போக்குங்கள். மற்ற மற்ற தேசத்தார்கள் தங்கள் நாட்டுக் குற்றம் நீங்கிய பிறகே, சுயேச்சை யடைய என்ன செய்தார்கள் என்பதையும், எப்படி யடைந்தார்களென்பதையும் நினையுங்கள்.

நம் குற்றம் நீங்க வேண்டியதற்காக நாமும் அவர் களைப் போலச் செய்வதா? இல்லையா? அவர்களது வழியை விட்டுவிட்டால் வேறு வழியில்லை. வெறும் வாய் வார்த்தையால் ஒன்றும் முடிந்துவிடாது.

**பெரியோர் போன வழியில் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் நடக்காது.**

- **ஈ.வெ.ரா.**

("குடிஅரசு", 15.6.1930)

# அரசமைப்புச் சட்டத்தில் "மதச்சார்பற்ற கல்வி" உண்டா?

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் "கல்வியும், மதச்சார்பின்மையும்" என்பதைப் பற்றி உள்ளதை விளக்கமாகக் காண்போம்.

"கல்வி நிலையங்கள்", "மதபோதனை" என்ற இரண்டு அம்சங்களைப் பற்றி இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதி 28, பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**விதி 28 :**

1. "முழுவதுமாக அரசாங்க நிதியினைக் கொண்டு நடத்தப்படும் எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் மதபோதனை அளிக்கப்படுதல் கூடாது."
2. "அரசாங்க நிர்வாகத்தின்கீழ் உள்ளதும், ஆனால் அதே சமயத்தில் மதபோதனை அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே ஓர் அறக்கட்டளையின் மூலம் நிறுவப்பட்டதுமான ஒரு கல்வி நிலையத்தைப் பொறுத்தவரையில், மேலே விதி 28(1)இல் காணப்பட்டது பொருந்தாது."
3. "அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசாங்க நிதி உதவியைப் பெறுகிற ஒரு கல்வி நிலையத்தில் பயிலும் எவருக்கும்-அவர் விரும்பினாலன்றி அல்லது அவர் மைனராக இருந்தால் அவருடைய பாதுகாவலர் ஒப்புதல் கொடுத்தாலன்றி - அந்த நிறுவனத்தில் அளிக்கப்படும் மத போதனையில் பங்குகொள்ளும்படிக்கோ, அல்லது அங்கு நடைபெறும் ஒரு மதவழிபாட்டுக்கு வர வேண்டும் என்றோ அக்கல்வி நிறுவனம் கட்டளை இடக்கூடாது."

**Article 28 :**

1. No religious instruction shall be provided in any educational institution wholly maintained out of State funds.
2. Nothing in clause (1) shall apply to an educational institution which is administrated by the State but has been established under any endowment or trust which requires that religious instruction shall be imparted in such institution.
3. No person attending any educational institution recognised by the State or receiving aid out of State funds shall be required to take part in any religious instruction that may be imparted in such institution or to attend any religious worship that may be conducted in such institution or in any premises attached thereto unless such person or if such person is a minor, his guardian has given his consent thereto.

இங்கு விதி 28(1)இல் சொல்லப்பட்டுள்ளவற்றைக் கொண்டு "இந்தியாவில் மதச்சார்பற்ற கல்வி" அளிக்கப்பட வேண்டும் என்பதே அரசமைப்புச் சட்டத்தின் இலட்சியம் என்பதாகப் பலரும் கூறுகின்றனர்.

இவ்வாறு கொள்ளப்படுவது சரிதானா என்பதை இங்கு நாம் ஆராய வேண்டும்.

இதற்கு, "கல்வி நிறுவனங்கள்" என்றால் என்ன, என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு - முழுவதுமாக அல்லது பகுதி அளவில் அரசாங்க நிதியைப் பெற்றுக் கொண்டு-அரசாங்கப் பாடத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு நடைபெற்று வருகின்ற தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் முதலானவைதாம் மேலே குறிக்கப்பட்ட "கல்வி நிறுவனங்கள்" என்பவையாகும்.

விதி 28(1), (2), (3) ஆகியவற்றில் குறிப்பிடப்படும் கல்வி நிறுவனங்கள் இவையேயாகும்.

இந்த விதியின்படி பூரணமாக அரசாங்கத்தின் நிதியைக் கொண்டு நடத்தப்படுகிற பள்ளிகளில் மத போதனை கூடாது என்பதாகவும், அறக்கட்டளைகள் மூலம் நிறுவப்பட்ட - ஆனால் அரசாங்க அங்கீகாரமும், நிதி உதவியும் பெற்று வருகிற தனியார் பள்ளிகளில் மதபோதனை செய்யப்பட எந்தத் தடையும் இல்லை என்றும் சொல்லப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

இந்த நிலைமையில், "மதபோதனை" செய்வது என்றால் என்ன? என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**மதபோதனை என்பது ஓர் இஸ்லாமிய மௌலவியை அல்லது ஒரு கிறித்துவப்பாதிரியை அல்லது ஓர் இந்துமத ஆச்சாரியாரை அல்லது மதகுருவை ஆசிரியராக வைத்துப் பள்ளிகளில் "மதபோதனை" செய்யப்படவில்லை என்பது ஒன்று.**

**ஆனால். அதே சமயத்தில் எல்லா மதங்களின் தத்துவங்களும், எல்லா மதக்கர்த்தாக்களின் வரலாறுகளும், எல்லா மத சாஸ்திரங்களிலும் உள்ள அடிப்ப**

**டைக் கொள்கைகளைப் பற்றிய காவியங்களும், கட்டுரை களும், விளக்கங்களும் - எல்லாக் கல்வி நிலையங் களிலும் வேறு பாடப் பெயர்களால் போதிக்கப்பட்டே வருகின்றன என்பது இன்னொன்று.**

இப்படிப்பட்ட ‘மதக்கருத்துக்களைப்’ போதிப்பதற்கு என்பதாக ஒரு மதகுரு ஆசிரியராக இல்லை - ஒரு தனிப் பாடவேளை (Period) ஒதுக்கப்படவில்லை என்பது உண்மையே ஆனாலும் - இந்தக் காரணங்களைக் கொண்டு நம் நாட்டில் ‘‘மதச்சார்பற்றக் கல்வி’’ அளிக் கப்படுவதாகக் கூறமுடியாது.

ஏனென்றால் நமது கல்வி நிலையங்களுக்கான பாடத் திட்டங்களை (Curriculum) அமைத்துள்ளவர்கள் - கடவுள் வணக்கம், புராண நெறிகள், இதிகாசக் கோட் பாடுகள் முதலானவற்றை - ‘‘ஒழுக்க போதனை’’ அல்லது ‘‘இலக்கிய அறிவு வழங்கல்’’ என்கின்ற பெயர் களால் கல்வித் திட்டத்தில் இணைத்தே அளித்துள்ளனர்.

**எனவே மதபோதனை என்பதற்காக ஒரு தனிப் பாடவேளை இல்லை என்றாலும் இவற்றைக் கற்பிப்ப தற்காக ஒரு மதகுருவை ஆசிரியராக நியமிக்கவில்லை என்றாலும், ‘‘மதம்’’ என்பது வேறு பெயர்களில் கல்வி நிலையங்களில் போதிக்கப்பட்டே வருகிறது.**

அடுத்து இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும்.

அதாவது அறக்கட்டளையின்மூலம் தனியார் நிர்வகிக்கும் பள்ளிகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன; அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியைப் பெறுகின்றன.

இந்த முறையில் எல்லோருடைய வரிப்பணத்தி லிருந்தும் நிதி உதவி (Grand-in-Aid)யைப் பெற்று நடைபெறும் தனியார் பள்ளிகள் என்பவை - அர சாங்கம் நிர்வகிக்கும் பள்ளிகளைப் போலவே பாடத் திட்டங்களைப் பின்பற்றி வருகின்றனவே அல்லாமல் - ஒரு பாதிரியை, ஒரு மௌல்வியை, ஓர் இந்துமத குருவை ஆசிரியராக நியமித்து மதபோதனை செய்வது என்பது அங்குப் பெரும்பாலும் இல்லை.

**ஆனால் இந்தத் தனியார் பள்ளிகள் மதகுருமார் களை ஆசிரியராக நியமித்து மதபோதனை செய்ய முழு உரிமை அளிக்கப்பட்டிருக்கின்றன.**

அப்படி இருந்தும் அவர்கள் எல்லோரும் அவ்வாறு செய்யாமல் இருப்பதற்குக் காரணம், அரசாங்கம் ஏற்று வெளியிடக்கூடிய பாடத் திட்டத்திலேயே மதபோத னைக்குப் போதுமான பாடப் பகுதிகள் அடங்கி இருக் கின்றன என்பதுவே ஆகும்.

இங்கு இன்னொரு நிலைமை பற்றியும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

இந்தத் தனியார் கல்வி நிலையங்கள் சில இடங் களில் மத குருமார்களைக் கொண்டு, ஒழுக்கபோத னை என்கிற பெயரால் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்வது அல்லது பாடங்களைப் போதிக்கச் செய்வது என்கிற காரியங்களை அரசமைப்புச் சட்டம் அனுமதிக் கிறது என்றால் அதன்பொருள் என்ன?

அரசாங்க நிதி உதவிபெறும் பள்ளிகளில், மத போதனை உண்டு என்பதுதானே அதன்பொருள்?

இதற்கு அப்படி அர்த்தமாகாது என்றால், விதி 28(2) இன்படி தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அளிக்கப் பட்டுள்ள உரிமைக்கு வேறு என்ன பொருள்?

அடுதிது விதி 28(3)இல் கண்டுள்ளதானது, ஒரு பள்ளியில் இந்து மதபோதனை செய்யப்பட்டால், அதற்கு அங்குப் படிக்கும் ஓர் இஸ்லாமியக் குழந்தை அல்லது ஒரு கிறித்துவக் குழந்தை வரவேண்டும் என்று கட்டளை இடமுடியாது என்பதே ஆகும்.

‘‘மதபோதனை அளிக்கப்படவில்லை’’ என்பதா இதற்குப் பெயர்?

அதற்குப் பதிலாக ஒரு கல்வி நிலையம் எந்த மதத்தைச் சார்ந்தவர்களுடையதோ, அந்த மதத்தை அந்தப் பள்ளியில் தாராளமாகப் போதிக்கலாம்; அந்த மதவழிபாட்டை அங்கே நடத்தலாம், ஆனால் அந்தப் போதனை வகுப்புக்கு அல்லது வழிபாட்டுக்கு இன் னொரு மதத்தைச் சார்ந்த குழந்தையை அழைக்கக் கூடாது - அத்தகைய பள்ளிகளுக்கு அரசாங்க அங்கீ காரமும், நிதி உதவியும் உண்டு என்பதுதானே பொருள்?

இந்தியாவில், அரசமைப்புச் சட்டப்படி உள்ள இந்தத் தன்மைக்கு, ‘‘மதச்சார்பற்றக் கல்வி’’ என்பது எப்படிப் பொருந்தும்?

‘‘கல்வி என்பது வேறு; மதம் என்பது வேறு; பொதுக் கல்வித் திட்டத்தில் - பொதுக் கல்வி நிலையங்களில் மதம் என்பதற்கு இடமே இல்லை’’ என்பதாக ஆகும்.

அந்தத் தன்மை விதி 28(1)இல் இருப்பதாக மேல் தோற்றத்தில் காணப்பட்டாலும், நடைமுறையில் இந்தியா வில் பின்பற்றப்பட்டுவரும் பாடத்திட்ட முறைகளின் படியும், அரசமைப்புச் சட்டவிதி 28(2), (3)இன்படியும் - எல்லாக் கல்வி நிலையங்களிலும் மதபோதனை தடையின்றி அளிக்கப்பட்டே வருகிறது என்பதை நாம் அறிதல் வேண்டும்.

கடைசியாக இன்னொரு நிலைமை இருப்பதை நாம் உணர்தல் வேண்டும்.

இந்தியா முழுவதிலும் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்தவர்களும், தங்கள், தங்கள் மதத்திற்கு உரிய மதக்கல்வியை அளிப்பதற்காகவும் மதகுருமார்களை உருவாக்குவதற்கான பயிற்சியை அளிப்பதற்காகவும்

தனித்தனிக் கல்வி நிறுவனங்கள் பலவற்றை நடத்தி வருகின்றனர்.

அப்பள்ளிகளுக்கு அரசாங்க அங்கீகாரம் தேவை இல்லை; அரசாங்க நிதி உதவி அளிக்கப்படுவதில்லை; அரசாங்கப் பாடத்திட்டம் அங்கு அமல்படுத்தப்பட வேண்டியதில்லை.

இந்த நிறுவனங்கள் எல்லாம் அறக்கட்டளைகள் மூலம் நிறுவப்பட்டு, முழுவதும் அறக்கட்டளையின் நிதிகளைக் கொண்டு, முற்றிலும் அறக்கட்டளையின் நேரடி நிருவாகத்தில் நடைபெற்று வருகிற தனியார் கல்வி நிறுவனங்களே ஆகும்.

இத்தகைய கல்வி நிறுவனங்கள் உலகெங்கும் அந்தந்த நாட்டுச் சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள உரிமையின்படி நடைபெற்றே வருகின்றன.

ஆனால் தனியுடைமை நாடுகளில் இத்தகைய நிறுவனங்களுக்கு, அளவுகடந்த மதிப்புள்ள சொத்துக்கள் இருக்க சட்டப்படி உரிமை வழங்கப்பட்டிருப்பதுபோல் சமதர்ம நாடுகளில் உரிமை வழங்கப்படவில்லை.

அத்துடன் சமதர்ம நாடுகளில், பொதுக்கல்வி நிறு வனங்களில் மதஎதிர்ப்புக் கோட்பாடுகள் கல்வித் திட்டத் தின் ஓர் அங்கமாக அமைக்கப்பட்டுக் கற்பிக்கப்படு கின்றன.

**இந்தியா ஒரு தனியுடைமை நாடு என்கிற தன்மையில் அமைந்துவிட்டதால், இங்குள்ள எல்லா மதங்களைச் சார்ந்த நிறுவனங்களுக்கும் எவ்வளவு வேண்டுமானாலும் சொத்துக்கள் வைத்துக்கொள்ள சட்டப்படி உரிமை வழங்கப்பட்டுள்ளது.**

**எனவேதான் இந்தியாவில் எந்தத் துறையிலும் மத ஆதிக்கம் குலைவதற்கு இடமில்லாமல் நல்ல வலிமையோடு அது திகழ்கிறது.**

**இந்த ஆதிக்கம் கல்வித் துறையிலும் பெரிய அளவில் பரவியுள்ளது.**

**வருங்காலத் தலைமுறைகளை உருவாக்குகின்ற பல்லாயிரக்கணக்கான கல்வி நிலையங்களில் பயிலும் கோடிக்கணக்கான ஆண்களையும், பெண்களையும் அவர்கள் கல்வி கற்கும் காலமான சுமார் 20 ஆண்டு களுக்கு அதிகமாக, அவர்களுக்கு மதபோதனை அளிக் கக்கூடிய கல்வித்திட்டத்தின் ஆதிக்கத்தின்கீழ் விடப் பட்டுக் கொண்டே வந்தால் - ஒவ்வொரு தலைமுறை யும் அந்தப்படியே மதபோதனை தோய்ந்த கல்வி யையே பெற்று, அதன் காரணமாக மதநம்பிக்கை உள்ள மக்களாகவே அவர்கள் உருவாக முடியும். இதில் அய்யம் இல்லை.**

**ஒவ்வொரு "20 ஆண்டுக்காலக் கட்டத்திலும்" இப்படி உருவாக்கப்படும் இளந்தலைமுறையினர் மத நம்பிக்கை காரணமாக சமூக முன்னேற்றத்திற்குப் பெருந்தடைச்சுவர்களாக உருவாகிக் கொண்டே இருப்பார்கள்.**

**இப்படிப்பட்ட ஒரு மூடநம்பிக்கைச் சமுதாய வட்டம் வளர்ந்து விரிந்துகொண்டே செல்லுவதை ஒரு பக்கம் அனுமதித்துக் கொண்டு, அதேசமயம் மதஎதிர்ப்புப் பிரச்சாரத்தை மேடைகளிலும், ஏடுகளிலும் இன்னொரு பக்கம் எவ்வளவு தீவிரமாக முடுக்கிவிட்டாலும் அதனால் கிடைக்கிற பயன் மிகக் கொஞ்சமாகவே இருக்கும்.**

விஞ்ஞான வளர்ச்சியில் - புதிய பொருளாதாரக் கோட்பாடுகளால்-வளரும் உலகத்தோடு நாமும் போட்டி போட்டுக் கொண்டு வளர வேண்டும் என்ற இயல்பான மனித உணர்ச்சியால் உந்தப்பட்டு, அவற்றின் காரண மாக மனித சமுதாயம் நாள்தோறும் முன்னேறி வருவது உண்மைதான்.

ஆனால் பெரும்பாலான மக்கள் எந்த வேகத்தில் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமோ, அந்த வேகத்தில் செல்லாமல் இருப்பதற்குக் காரணங்கள் இரண்டேயாம்.

**ஒன்று முதிய தலைமுறையினர் மூடநம்பிக்கை, பழக்கவழக்கங்கள் காரணமாக பழமையைக் கைவிட மறுப்பதாகும்.**

**இரண்டு, இளைய தலைமுறையினர் அவர்கள் உருவாக்கப்படும் குடும்பப் பழக்கம், கல்வித் திட்டம் ஆகிய சூழல்களால் பழைய எண்ணங்கள் தோய்ந் தவர்களாகவே தொடர்ந்து உருவாக்கப்படுவதாகும்.**

**எனவே, வருங்கால சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல விரும்பும் எவரும், மற்றெந்தத் துறைகளில் அறிவுப் பிரச்சாரம் மேற் கொண்டாலும் கல்வித் துறையில் உள்ள மத ஆதிக்கம் பூரணமாக ஒழிக்கப்படாத வரையில், அவர்கள் கோரிய பலன் விளையாது என்பது உறுதி.**

**- வே.ஆனைமுத்து**

("இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு மோசடி" என்ற நூலிலிருந்து)

## காஞ்சிபுரத்தில் விழா

காஞ்சிபுரத்தில் வசிக்கும் பொறியியல் கல்லூரி பேராசிரியர் தோழர் ப. பகலவன், M.E., (Ph.D.), அவர் தம் துணைவியார் வேளாண்மை அலுவலர் தோழியர் திருமதி. ச. சிந்துஜா பகலவன், M.Sc., (Agri) அவர் களும் இணைந்து காஞ்சிபுரம் செவிலிமேடு பகுதி யில் உள்ள P.S.K. நகர், எண்.60, விவேகானந்தர் விழா 4.9.2017 திங்கள்கிழமை காலை மிகச் சிறப்பாக நடத்தினர். புதிய வீடு வாங்கியதன் மகிழ் வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- கொடுத்து மகிழ்ந்தனர்.

# வகுப்புவாத அரசியலும் பெரியாரின் தொலைநோக்குச் சிந்தனையும்

குட்டுவன்

21ஆம் நூற்றாண்டிலும் கூட இந்திய அரசியலில் மதவாத சக்திகள் வெற்றி பெற்று, சமூக பொருளாதாரச் சரிவுகளை ஏற்படுத்தி வருவதைக் கண்டு உலகில் பலர் கவலை தெரிவிக்கின்றனர். அறிவியல் பயன்பாடும் தகவல் தொழில்நுட்பமும் மேலோங்கி நிற்கும் இக்காலக் கட்டத்தில், ஒரு சிறிய கைப்பேசியில் உலகத்தின் அன்றாட நிகழ்வுகளைப் பார்க்கிற வாய்ப்பு சாதாரணக் குடிமகனுக்கும் கிட்டியுள்ள நிலையில் மதவாதம் ஏன் ஓங்கிவருகிறது என்ற கேள்விக்கு விடை காண்பது காலத்தின் கட்டாயமாகிறது.

பல வரலாற்று ஆய்வாளர்கள் சேஷயங்கார் தொடங்கி கிருத்துவப் பாதிரியார் ஹிராஸ் வரை தங்களின் வரலாற்றுப் படைப்புகளில் ஆரிய திராவிடப் போராட்டம் என்பது தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்து வந்ததைச் சுட்டியுள்ளனர். இன்றைக்கு தமிழகத்தின் பல பகுதிகளில் கிடைக்கின்ற தொல்பொருள் அகழ்வாராய்ச்சியில் காணப்படும் தரவுகள் தமிழர் நாகரிகத்தின் தனித்தன்மையை எடுத்து இயம்புகின்றன.

ஆரியர்கள் திராவிடர் போராட்டத்தை எதிரொலிக்கும் வகையிலும் ஆரியர்களின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துகிற வகையிலும் பல இதிகாசங்களும் காப்பியங்களும் தோன்றின. வேத காலத்தில் தொடங்கப்பட்ட இந்த கருத்து மோதல்கள் புத்தர், மகாவீரர் ஆகியோர் காலத்தில் ஓரளவிற்குத் தற்காலிகமாக முடிவுற்றது. பின்பு மௌரியர்கள் ஆட்சியில் குறிப்பாக அசோகர் காலத்தில் சீனா, தாய்லாந்து, பர்மா, ஜப்பான், இலங்கை ஆகிய நாடுகளில் பௌத்தத்தின் செல்வாக்கு தழைத்தோங்கியது. மீண்டும் குப்தர் ஆட்சிக்காலத்தில் சனாதனம் கோலோச்சியது.

இந்தியத் துணைக்கண்டத்தை பல்வேறு இனக்குழுக்களும் மத குழுக்களும் கைப்பற்றி ஆட்சி செய்தன. பாபருக்குப் பின் முகலாயர் ஆட்சி 300 ஆண்டுகளும், கிழக்கிந்தியக் குழுமங்களான பிரெஞ்சு டச்சு போர்ச்சுக்கீசிய ஆங்கிலேயே ஆட்சிகள் ஏறக்குறைய நூறாண்டுகளும், பிரித்தானிய அரசின் நேரடி ஆட்சி 89 ஆண்டுகளும் நடைபெற்றன. இக்காலக்கட்டத்தில்தான் இந்தியாவில் ஆங்கில மொழிக்கல்வியும் நிர்வாகமும் நிலை பெற்றது. ஆங்கில வழிக்கல்வியின் சாதக பாதகங்கள் பற்றிப் பல ஆய்வுகள் உள்ளன. ஆனால் ஆங்கில வழிக் கல்வி வந்த பிறகுதான் அறிவியல் வளர்ச்சியும் மதவாத சக்திகளை அடையாளம் காணுகின்ற ஆய்வுகளும் வெளிவரத்தொடங்கின. சனாதனமும் அடக்கு முறை சாதியக் கட்டமைப்பும் மிகச் சிலர் சமுதாய பொருளாதார அரசியலில் ஓங்கியிருந்ததையும் காண முடிந்தது. இன்றைய ஆர்.எஸ்.எஸ். சக்திகளால் மிகவும் கடுமையாகத் தாக்கப்படுகிற மெக்காலேதான் தொடர்ந்து போராடி பார்ப்பனர்களின் கல்வி மேலாதிக்கத்தை முறியடித்தார் என்று பல ஆய்வுகளும் நூல்களும் குறிப்பிடுகின்றன.

இந்து தர்மத்தின் சாதியத் தாக்கம் கொடுமையானது. கொடைத்தன்மையை சாதி தகர்த்துவிட்டது. சாதி பொதுக்கருத்து ஒன்று தேவையில்லை என்ற நிலையை உருவாக்கிவிட்டது. இந்துவினுடைய பொதுத்தன்மை என்பதே அவனது சாதிதான். அவனுடைய பொறுப்பும் சாதியைச் சார்ந்தது. அவனுடைய பற்றும் சாதியைச் சார்ந்ததே. ஒழுக்கமும் நன்மையும் சாதியைச் சார்ந்ததாக மாறிவிட்டது. தகுதிக்கும் திறமைக்கும் சாதி இரக்கத்தையும் பாராட்டையும் அளிக்காது. தேவையானவர்களுககு அருளிரக்கம் சாதியில் கிடையாது. இவ்வாறு டாக்டர் அம்பேத்கர் தனது ‘‘சாதியை முற்றிலும் ஒழித்துக்கட்டு (Annihilation of Caste)” நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக, புரையோடிய சாதியையும் சாதியைப் பாதுகாக்கின்ற மதத்தையும் தந்தை பெரியாரும் டாக்டர் அம்பேத்கரும்தான் சரியான வகையில் இனம் கண்டு தங்கள் வாழ்நாள் இறுதிவரை போராடினர். ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராகக் களம் கண்ட காங்கிரசு பேரியக்கம் சனாதனவாதிகளின் ஆதிக்கத்தில் இருந்ததால்தான் தந்தை பெரியார் காந்தியிடம் இருந்து வேறுபட்டு விலகினார். காந்தியிடமே சனாதனத்தின் கொடும் விளைவுகளை நேருக்கு நேர் சுட்டினார். ஆனால் எந்த அரசியல் கட்சியும் விடுதலைக்குப் பிறகு இதனை முழுமையாக ஆய்ந்து தெளிந்து அரசியல் களத்தை அமைக்கவில்லை. இதன் காரணமாகத்தான் இன்றைக்கு பாஜகவின் தனித்த ஆட்சி ஒன்றிய அரசில் இடம் பெற்று இந்துமத சர்வாதிகாரமாக மாறிவரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில்தான் அறிஞர்கள் எழுத்தாளர்கள் சிந்தனையாளர்கள் ஏட்டாளர்களான 2013இல் நரேந்திர தபோல்கர், 2015இல் பன்சாரே, கல்புர்கி, 2017இல் கௌரி லங்கேஷ் ஆகியோரின் படுகொலைகளைப் பற்றி ஆய்தல் அவசியமாகிறது.

இந்திய மண்ணில் மதவாதமும் சாதியவாதமும் மனுதர்மும் முற்றிய நோயாக இருந்ததால்தான் நூற்றாண்டிற்கு நூற்றாண்டு பல வடிவங்களில் மானுடம் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றது. நெறிகள் சிதைக்கப்படுகின்றன. நீதி வளைக்கப்படுகிறது. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சமணர்கள் கழுவேற்றப் பட்டனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் வலிமை பெற்ற பசவர் இயக்கம் வீரசைவத்தைப் போற்றினாலும் சனாதன தர்மத்தை ஏற்காத காரணத்தினால்

17ஆம் நூற்றாண்டில் நஞ்சன்கோடு பகுதியில் பல்லா யிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர். சமூக ஆய்வாளர் மேக்சு வெப்பர் பசவர் இயக்கத்தினரை சமத்துவப் பிரிவினர் பார்ப்பனியத்திற்கு எதிராகக் கொள்கை அடிப்படையில் புரட்சி செய்தவர்கள் என்று குறிப்பிட்டுள் ளார். இது போன்ற அடிப்படை உண்மைகளை கல்புர்கி, கௌரி லங்கே போன்ற சிந்தனையாளர்கள் தங்களின் கட்டுரைகளிலும் உரைகளிலும் வெளியிட்டு வந்தனர். சிலர் மேலோட்டமாக நினைப்பது போல பின்னிப் பிணைந்த சாதியமும் மதவாதமும் பிரித்தானிய ஏகாதி பத்திய காலத்தில் கடுமையான கொடுமையான நிர்வாக அமைப்பு முறை இருந்த போதும் மதவாத்தின் அடிப்படை யில்தான் சிப்பாய் கலகம் 1857இல் வெடித்தது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இந்தியா விடுதலை பெற்ற விறகு 1948இல் காந்தியின் படுகொலை 1993இல் பாபர் மசூதி இடிப்பு, 2002இல் குஜராத் கோத்ரா கலவரம் எனப் பல்வேறு வடிவங்களில் இந்த சனாதன அமைப்புகள் இந்து மதம் என்கிற பெயரால் முற்போக்கு எண்ணத்தையும் சமூகத்தின் அமைதியையும் கெடுத்து மக்களைப் பிளவுப்படுத்தி அரசியல் வெற்றிகளையும் ஈட்டி வருவதை முழுமையான முறையில் இந்திய அரசியல் கட்சிகள் காணத் தவறிவிட்டன.

குறிப்பாக 1947இல் நேரு காலத்திலேயே இந்து சட்டத்தை டாக்டர் அம்பேத்கர் முற்போக்கான வடிவில் அரசமைப்புச் சட்ட அவையில் முன்மொழிந்த போது, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரும் புரி சங்கராச்சாரியரும் புதுதில்லியில் தொடர்ந்து நேரு அம்பேத்கர்ன் உருவ பொம்மைகளை பல நாட்கள் எரித்தனர். இந்து சட்டத்தை எழுத ஒரு பஞ்சமனுக்கு உரிமையும் தகுதியும் இல்லை என்று வெளிப்படையாகவே அறிவித்தனர். இவற்றை வரலாற்று ஆய்வாளர் இராமசந்திர குகா தனது (Makers of Modern India) ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். மீண்டும் 1951இல் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்து சட்டத்தை முற்போக்கான வடிவில் சட்ட அமைச்சராக இருந்து மீண்டும் முன்மொழிந்தார். துணைப் பிரத மராகவும் உள்துறை அமைச்சராகவும் இருந்த வல்லபாய் பட்டேல் இந்த சட்டத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டு, நாடாளுமன்றத்தில் சட்டவடிவை முன்மொழிந்த போது பட்டேல் உட்பட பல காங்கிரசு தலைவர்கள் எதிர்த்த காரணத்தினால்தான் டாக்டர் அம்பேத்கார் நேரு அமைச்சரவையில் இருந்து 1951இல் விலகினார். இதுவும் சாதியமும் சனாதனமும் மதவாத மும் ஒன்றாக இணைந்து கைகோர்த்ததனால் தான் பின்பு டாக்டர் அம்பேத்கர் இந்து மதத்திலிருந்து விலகி பௌத்தத்தைத் தழுவினார்.

தமிழ்நாட்டில் தந்தை பெரியார் காங்கிரசிலிருந்து விலகிய காலத்திலிருந்து தொடர்ந்து பல களங்களை அமைத்து சாதிய மதவாத சக்திகளுக்கு எதிராக போராடியதன் விளைவாகத்தான் தமிழகத்தில் இந்த மதவாத சக்திகள் தனது வாலை முழுமையாக நீட்ட முடியவில்லை. பொருளாதார நூல்களில் விளம்பர நட வடிக்கையின் விளைவு (Demonstration Effect) என்ற கருத்துரு முன்மொழியப்படுகிறது. ஒரு புதிய கண்டு பிடிப்பு வழியாக புதிய பொருள் சந்தையில் வந்தால் அதை ஒருவர் வாங்கினால் அதனைப் பின்பற்றி அந்த பொருளை பல ஆயிரக்கணக்கான பேர் வாங்கிப் பயன் படுத்துவார்கள். சான்றாக, கைப்பேசி ஒருவரின் பணிக்கு முழுமையாகப் பயன்படுகிறதோ இல்லையோ அதை விலை கொடுத்து வாங்கி கையில் வைத்திருப்பது மனிதர் களின் இயல்பாகிவிட்டது. இதுதான் விளப்பர நடவடிக் கையின் விளைவு என்று சுட்டப்படுகிறது. சமூகத்திலும் ஒருவர் பின்பற்றியதை மற்றவர் பின்பற்றுகின்ற சூழல் இருந்த நேரத்தில் பெரியார் இதே கருத்துரையைப் பயன் படுத்தி தன்னுடைய நடவடிக்கைகளின் வழியாக சமுதாய சீர்த்திருத்தத்திற்கு வழிகண்டார்.

சான்றாக திராவிடர் கழக ஊர்வலங்களில் தீச்சட்டியை ஏந்திச் செல்லும் போது இது கடவுளின் சக்தியாலோ அல்லது மதத்தின் சக்தியாலோ அல்ல என்று மெய்ப்பிக்கப்பட்டது. இதே நிலையில்தான் தந்தை பெரியார் 1953இல் பிள்ளையார் சிலை உடைப்பை நிகழ்த்தினார். அப்போது பலர் கடுமையான விமர்சனங்களை திராவிடர் கழகத்தின் மீதும் பெரியார் மீதும் வைத்தனர். இந்தியக் கம்யுனிஸ்ட் கட்சியில் இருந்து சில தலைவர்கள் பெரியாரின் பிள்ளை யார் சிலை உடைப்பை எதிர்மறையாக எடுத்துக் கொண்டு விமர்சனம் செய்தனர். **ஆனால் சில ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடைமை கட்சியிலிருந்து இந்தியக் கம்யுனிஸ்ட் கட்சிக்கு ஒரு கருத்துரை வந்தது. அதில் உங்களுடன் பயணம் செய்யும் சக பயணி (Fellow Traveller) ஒருவரை உணர முடியவில்லையா? என்று குறிப்பிடப்பட்டிருந்தது.**

இக்கருத்தை இந்தியக் கம்யுனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் கட்டுரையாசிரியரிடம் ஒரு உரையாடலில் தெரிவித்தார். இன்றைய நிலைமை என்ன? இதே பாஜகவும், சங் பரிவாரங்களும், இந்து முன்னணியிரும் பிள்ளையார் சிலைகளை வைத்துக் கொண்டு தமிழ் நாட்டிலேயே அரசியல் சமூகச் சூழலை மாற்ற முயலு கிறார்கள். ஆனால் வெற்றி பெற முடியவில்லை.

அரசியலில் மதவாதத்தை பிள்ளையார் வழியாக வடநாட்டிலும் குறிப்பாக மராட்டிய மண்ணிலும் தொடர்ந்து பரப்பி வருகிறார்கள். 1973இல் தந்தை பெரியார் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு பசுக் கறி பன்றிக் கறி போன்ற உணவுகள் சமைத்து பல மதத்தினரும் பகுத்தறிவாளர்களும் பங்கேற்ற உணவுத் திருவிழா தந்தை பெரியார் ஆந்திர நாத்தீகச் சங்கத் தலைவர் கோரா முன்னிலையில் நடைபெற்றது. இன்றைக்கு இந்திய மாநிலங்கள் அனைத்திலும் பசுப் பாதுகாவலர்கள் என்ற பெயரில், ஒடுக்கப்பட்டவர்களும் சிறுபான்மையினரும் தாக்கப்படுகிறார்கள்; கொலை செய்யப்படுகிறார்கள்.

அண்மையில் உச்சநீதிமன்றம் இந்த பசுப் பாதுகாவலர்கள் எல்லை மீறும் போது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் மாநில அரசுகள்தான் என்று கூறி ஒன்றிய அரசு தனது பொறுப்பை தட்டிக்கழிக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. தந்தை பெரியார் தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் சுட்டப்படுகிற விளம்பர நடவடிக்கை விளைவை தனக்கு சாதகமாக பயன் படுத்திய மாபெரும் புரட்சியாளராக, மறைந்தும் மறையாமல் கொள்கை உருவில் இன்றும் இளைஞர்கள் இடத்தில் வலம் வருகிறார்.

தமிழ்நாட்டில்தான் பகுத்தறிவுக் கருத்துகளையும் நாத்திக கருத்துகளையும் சமதர்ம கருத்துகளையும் ஊரெங்கும் நகரெங்கும் எடுத்துச் சொல்ல முடிகிறது. ஆனால் மராட்டிய மண்ணிலும் கர்நாடக மண்ணிலும் இந்து மத சக்திகள் எதிர்ப்பாளர்களை துப்பாக்கி முனையில் படுகொலை செய்கிறது; மிரட்டிவருகின்றன. கௌரி லங்கேஷ் ஒரு பெரும் சமூகப் போராளியாக-பகுத்தறிவுவாதியாக எதிர்ப்புக்கு அஞ்சாத வீராங்கனையாக வலம் வந்துள்ளார். அவரைப் பற்றிய குறிப்புகள் தற்போது வெளிவந்துள்ளன. கௌரியின் தந்தை லங்கேஷ் ஆரம்ப காலத்தில் ஆங்கில விரிவுரையாளராகப் பணிபுரிந்துள்ளார். பெங்களூரில் காந்தி வணிகத் தெருவிற்கு அருகே ஒரு சாதாரணக் குடியிருப்பில் வாழ்க்கையைத் தொடங்கியுள்ளார். இரண்டு மகன்கள் மகள்களை படிக்க வைக்கப் போதிய வருமானம் இல்லாததால் கன்னட பத்திரிக்கைகளிலும் கட்டுரைகளை எழுதினார். பின்பு அவரது கட்டுரைகளில் முன்மொழிந்த கருத்துகள் பெருமளவில் இளைஞர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தின. அரசிற்கு எதிராக கட்டுரை எழுதக் கூடாது என்று கூறப்பட்டதால் லங்கே‘ ஏடு என்று ஒன்றை, தொடங்கி சமூக முற்போக்கான கருத்துகளை எழுதி ஒரு சிறந்த பத்திரிக்கையாளராகவும் வலம் வந்தார். கௌரி லங்கேஷ் கல்லூரி படிப்பை தேசியக் கல்லூரியில் மேற்கொண்டார். அப்போது சித்தானந்த் ராஜ்கட்டாவை சந்தித்து காதலிக்க தொடங்கினார். இருவரும் தேசியக் கல்லூரியின் முதல்வரான-சிறந்த பகுத்தறிவாளரான நரசிம்மையாவின் நாத்தீகக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார்கள். இலங்கையைச் சேர்ந்த பகுத்தறிவாளரான அப்ரகாம் கோவூரும் இவர்களுக்கு பகுத்தறிவு நெறியை ஊட்டினார். இந்த இரு சிறந்த பகுத்தறிவாளர்களால் வடிவமைக்கப்பட்ட கௌரி லங்கேஷ் சித்தானந்த் ராஜ்கட்டாவை சாதி மறுப்புத் திருமணம் செய்தார். சில ஆண்டு காலத்தில் இவர்கள் திருமண உறவிலிருந்து விலகிவிட்டாலும் இறுதி வரை நண்பர்களாகவே இருந்தார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் சித்தானந்த் ராஜ்கட்டாவை சந்தித்த போது கௌரி தனது கொள்கையைப் பற்றி விளக்கியிருக்கிறார். அவரது தந்தை 2000இல் மறைந்த பிறகு லங்கேஷ் நடத்திய பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்து முற்போக்கான கருத்துகளை முன்மொழிந்தார். சாதிய மதவாதக் கருத்துகளுக்கு எதிராகப் பல கட்டுரைகளைத் தீட்டினார். மறைந்த வீரப்பனை வேட்டையாடுவதாகக் கூறி பழங்குடியினரைத் தாக்குவதைக் கண்டித்தார். தனது முன்னாள் கணவரிடம் இனிமேல் இந்தியாவில் வலதுசாரி சக்திகளுக்கு எதிராகவும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும் இடது சாரிகளை ஒன்றிணைத்து கருத்துகளை வெளியிடுவேன். தேவையென்றால் களம் அமைத்துப் போராடுவேன் என்றும் குறிப்பிட்டார். சில மாதங்களுக்கு முன்பு கர்நாடக முதல்வர் சித்தராமைய்யா மூட நம்பிக்கையின் காரணமாக தனது மகிழுந்தை மாற்றினார் என்ற செய்தி வெளி வந்தவுடன், கௌரி அவர்கள் உடனடியாக முதல்வரைச் சந்தித்து விளக்கம் கேட்டுள்ளார். சித்தராமைய்யா தான் அது போன்று எந்த மகிழுந்தையும் மாற்றவில்லை-தனக்கு பகுத்தறிவின் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளது என்று கூறிய போது. உடனே கௌரி எதிரிகளின் விஷம பிரச்சாரத்தை எதிர்த்து சித்தராமைய்யாவை ஆதரித்துக் கட்டுரை வெளியிட்டார். இது போன்ற எண்ணற்ற பகுத்தறிவு சார்ந்த பணிகளை மேற்கொண்ட காரணத்தினால் மதவாத சக்திகள் இவரைச் சுட்டு வீழ்த்தினர். இந்தப் படுகொலைக்குப் பிறகு இந்தியா முழுவதும் ஒரு அதிர்ச்சி அலை உருவாகியது. தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கரின் தன்னலமற்ற பணிகளை தொண்டினை மீண்டும் புதிய எழுச்சியோடு இளைஞர்கள் ஏற்றுக்கொண்டு வலைதளங்களில் சனாதனத்திற்கு எதிராக களம் கண்டு வருகின்றனர். தந்தை பெரியாரின் 139ஆம் பிறந்த நாளில், காங்கிரசு தலைவர் ராகுல் பீகாரின் லாலு பிரசாத், சரத் யாதவ், சித்தராமைய்யா போன்ற தலைவர்கள் தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வையை உணர்ந்து பெரியாரின் கருத்துகளை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.

## பொன்னேரி அரசினர் கல்லூரியில் பெரியார் பிறந்த நாள் விழா

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரியில் கருத்தரங்க அறையில் தமிழியல் ஆய்வு மன்றத்தின் சார்பில் 22.9.2017 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பெரியார் பிறந்த நாள் விழா நடைபெற்றது. முனைவர் சிவ. முருகேசன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் A. கருப்பன் தலைமைத் தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் பேரா. ச. அந்தோணி டேவிட்நாதன் அறிமுக உரையாற்றினார். ‘‘சாதி ஒழிப்புக்குத் தந்தை பெரியாரின் தற்காலத் தேவை’’ என்ற தலைப்பில் அய்யா வே.ஆனைமுத்து அவர்கள் சிறப்புரையாற்றினார். முனைவர் தா. குளோரி நிரலுரை ஆற்றினார். முனைவர் து. பார்த்திபன் நன்றியுரையாற்றினார்.

# பகுத்தறிவாளர்களும், படுகொலைகளும்

- உதயை மு. வீரையன்

எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் இப்படி நடந்து கொண்டுதான் இருக்கிறது. சமூக சீர்திருத்த வாதிகளும், பகுத்தறிவாளர்களும் அடிக்கடி படுகொலை செய்யப்படுகின்றனர். இந்தியா மட்டும் அதற்கு விதி விலக்கா? தேசத்தந்தை எனப்படும் மகாத்மா காந்தியையே சுட்டுக்கொன்ற நாடுதானே இது.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் ஒரு பத்திரிகையாளர் கொலை செய்யப்பட்டுள்ளார். கடந்த செப்டம்பர் 5 அன்று மூத்த பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ் அவர் வீட்டருகே இரவு 8 மணியளவில் சுடப்பட்டுள்ளார். நிகழ்விடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். மர்ம மனிதர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டனர்.

சமூகச் சிந்தனையாளர்கள் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளனர். இடதுசாரி சிந்தனை கொண்ட அவர், இந்துத்துவா கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்து வந்தார். கர்நாடக மாநிலத்தில் மூடநம்பிக்கைகளை எதிர்த்து வந்ததோடு அதற்கென ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்றும் வலியுறுத்தி வந்தார்.

மத்தியில் பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு அவரது அரசியலைக் கடுமையாகச் சாடி வந்தார். ஆர்.எஸ்.எஸ்., விசுவஇந்து பரிஷத், பஜ்ரங்தள் ஆகிய இந்துத்துவ அமைப்புகளின் செயல்பாடுகளை விமர்சித்து வந்தார். அவர்களின் எதிர்ப்புக்கு ஆளானார்.

இதுபற்றி மாநில உள்துறை அமைச்சர் இராமலிங்க ரெட்டி, 'இலக்கியவாதி கல்புர்கியைக் கொலை செய்தது போலவே கவுரி லங்கேசும் கொலை செய்யப்பட்டுள்ளார். கொலைக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. விரைவில் கொலையாளிகளைக் கைது செய்வோம்' என்று கூறியுள்ளார்.

கல்வியாளரும், பகுத்தறிவாளருமான கல்புர்கி கொலை செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளானாலும் இன்னும் கொலையாளிகளை கைது செய்யவில்லை. அந்தத் துணிச்சலில்தான் கொலையாளிகள் அதே முறையில் கொடூரமாகக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அரசும், காவல்துறையும் வெறும் பேச்சுப் பேசாமல் கொலையாளிகளைக் கைது செய்து மக்கள் மன்றத்தில் நிறுத்த வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும். பாதிக்கப்பட்ட தலித்தியர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்ததால் இந்துத்துவ சக்திகளால் அச்சுறுத்தப்பட்டார், கொலை மிரட்டல்களுக்கும் ஆளானார்.

2000ஆம் ஆண்டில் கர்நாடகாவில் 'பசுமை வேட்டை' என்ற பெயரால் நக்சலைட்டுகளுக்கு எதிராகத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. இதனால் அப்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியின மக்களும், தலித்தியர்களும் வாழ்ந்த பகுதிகளில் சூரையாடப்பட்டனர்.



கவுரி லங்கேஷ்

அப்போது அரசாங்கம் விதித்திருந்த அத்தனைத் தடைகளையும் தாண்டி வனப்பகுதிக்குள் நுழைந்த கவுரி லங்கேஷ் உண்மைகளை வெளியுலகத்துக்குக் கொண்டுவந்தார். அரச பயங்கரவாதத்தை அம்பலப் படுத்தினார்.

கர்நாடக அரசுடன் பேசி, நக்சலைட் மறுவாழ்வுத் திட்டம் உருவாகக் காரணமாக இருந்தார், இதனால் மேற்குத் தொடர்ச்சி மலை மக்கள் நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழ வழி ஏற்படுத்தித் தந்தார். இதனால் அவர் 'தீவிரவாதி' என்று அநியாயமாக முத்திரை குத்தப்பெற்றார்.

மத்தியில் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு இந்துத்துவக் கொள்கையை விரைவுபடுத்தினார். 'பசுவதை' என்ற பெயரால் இசுலாமியர்களும், தலித்தியர்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். மத நல்லிணக்கத்துக்கு எதிரான சாமியார்களிடம் உ.பி. போன்ற பெரிய மாநிலங்களை ஆளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு தேசிய இன மக்களின் தனித்தன்மைகளை அழித்து ஒற்றை மொழி, ஒற்றைப் பண்பாடு என ஓலம் இடப்படுகிறது. அதனை நடைமுறைப்படுத்தும் முகமாக, சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சார்பில் பசு, காளை, எருமை, ஒட்டகம் உள்ளிட்ட கால்நடைகளை இறைச்சிக்காக விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் இவற்றையெல்லாம் எதிர்த்து நிற்பது தமது கடமை என்று கவுரி லங்கேஷ் கருதினார்; பத்திரிகைகளில் எழுதியதோடு, மேடைகளிலும் முழங்கினார், தமக்கு எதிராகக் கொலை மிரட்டல் இருந்தபோதும், பாதுகாப்புக் கருதி காவல் துறையை அணுகவில்லை. 'நடப்பது நடக்கட்டும்'

என்றும், 'நாளை நடப்பது இன்றே நடக்கட்டும்' என்றும் ஓங்கிக் குரல் கொடுத்தார்.

"ஒரு குடிமகளாக பா.ச.க.வின் பாசிச மற்றும் இனவாத அரசியலை ஒருபோதும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்து அமைப்பில் உள்ள சாதிய அமைப்பை நான் தொடர்ந்து எதிர்ப்பேன். நம் அரசியல் அமைப்புச் சட்டம் எனக்கு மதச்சார்பின்மையைக் கற்றுக்கொடுத்தது. எனவே மதவாதத்துக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுப்பது என்னுடைய அடிப்படை உரிமையாகும்" என்று இவர் தொடர்ந்து துணிந்து குரல் கொடுத்து வந்தார்.

'நீ உன் குரலை நிறுத்தாவிட்டால் நாங்கள் நிறுத்தி விடுவோம்' என்று கொலையாளிகள் கூறாமல் கூறு கின்றனர். இந்தக் கொலையின் மூலம் மற்றவர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கின்றனர், இனிமேல் இந்துத்துவாவை எதிர்க்கும் துணிவு எவருக்கும் வரக்கூடாது என்று மிரட்டுகின்றனர் என்பதைத் தவிர வேறு என்ன?

கடந்த 2015 ஆகஸ்டு 30 அன்று ஹூப்ளியில் எம்.எம். கல்புர்கி என்ற பேராசிரியர் இதே முறையில் கொலை செய்யப்பட்டார். இரண்டு ஆண்டுகளாகியும் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதே கொலையாளிகள்தாம் தொடர்ந்து அச்சமின்றி இக்கொலையை அரங்கேற்றியுள்ளனர்.

கர்நாடக அரசும், காவல் துறையும், உளவுத் துறையும் இதனைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யவில்லையா, கண்டுபிடிக்க முடியவில்லையா என்ற கேள்வி எழுகிறது. இந்த நீண்ட இடைவெளியின் காரணமாகவே இந்தக் கொலையும் அரங்கேறியுள்ளது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

'சமூக நீதிக்காகப் போராடுகிறர்களை நாட்டில் நடமாட விடமாட்டோம்' என்று ஓர் அநியாயக் கும்பல் அறைகூவல் விடுக்கிறது என்பதுதானே பொருள். இந்த வெறியர்களின் நெறிகெட்ட போக்கை இன்னும் எத்தனை காலம் அனுமதிக்கப் போகிறோம்?

2016 பிப்ரவரி 16 அன்று கோலாப்பூரில் கோவிந்த் பன்சாரே கொலை செய்யப்பட்டார். 2013 ஆகஸ்ட் 20 அன்று புனேயில் நரேந்திர தபோல்கர் படுகொலை செய்யப்பட்டார். என்ன நடந்தது? அரசியல் தலைவர்கள் கண்டித்தனர். பத்திரிகைகள் கண்டித்து எழுதின. பத்திரிகையாளர் சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களும், இரங்கல் கூட்டங்களும் நடத்தின. போதுமா?

மனிதன் எப்படி படிப்படியாய் வளர்ச்சியடைந்தான் என்பதை டார்வின் கண்டுபிடித்தார். மானிட சாதியின் வரலாறு எப்படி படிப்படியாய் வளர்ச்சியடைந்தது என்பதை கார்ல்மார்க்ஸ் கண்டுபிடித்தார். இதற்கு இடைவிடாத சிந்தனையின் உழைப்பே முதலீடாகும்; மூலதனமாகும்.

**கார்ல்மார்க்ஸ் இறந்து போனதை, 'அவர் சிந்திப்பதை நிறுத்திவிட்டார்' என்று அவர் தோழர் ஏங்கல்ஸ் குறிப்பிட்டார். டெஸ்கார்ட்டே என்ற தத்துவஞானி, 'நான் சிந்திக்கிறேன்; எனவே உயிரோடு இருக்கிறேன்' என்று கூறினார்.**

எனவே சிந்திப்பதும், செயல்படுவதும் சமுதாய மாற்றத்தை விரும்பும் மேதைகளின் செயல்பாடுகளாகும். எழுத்துக்கு எழுத்தும், பேச்சுக்குப் பேச்சுமே பதில்களாக இருக்க வேண்டும், அதுவே ஆக்கப்பூர்வமான வளர்ச்சி யாகும்.

**அதைவிடுத்து தனிமனிதர்களைத் தாக்குவதும், கொலை செய்வதும் கோழைகளின் எதிர்நடவடிக் கைகளாகும். இதன்மூலம் சிந்தனையையும், செயல்பாட்டையும் தடுத்து நிறுத்த முடியாது. அவர் விட்டுச்சென்ற பணியை வேறொருவர் தொடர்வார். இதற்கு முடிவு கிடையாது.**

"அரசியல் கொடுமைகளை விட சமூகக் கொடு மைகளே மிகப் பயங்கரமானவை. எனவே சாதிக் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்த வாதியே அரசியல்வாதியைவிட அதிக வலிமை மிக்கவன்" என்றார், டாக்டர் அம்பேத்கர்.

உலக வாழ்வில் சாதி, சமயம் என்பவை தவிர்க்க முடியாத - தடுக்க முடியாத அம்சமாக இருக்கும் வரை மூடநம்பிக்கைகளும் வளர்ந்து கொண்டேயிருக்கும். தலைவிதியைக் காரணம் காட்டி உழைக்க மறுக்கும் இளைஞர்களின் எதிர்காலம் வீணாவதை யாரால் தடுக்க முடியும்?

உண்மைகளை ஏற்க மறுக்கும் மனிதர்கள் மூடநம்பிக்கைகளின் பின்னே ஓடுகின்றனர், 'இது என் நம்பிக்கை' என்று சொல்கிறவர்களை எப்படித் திருத்த முடியும்? படிப்பறிவில்லாத பாமர மக்களுக்கும், இவர் களுக்கும் வேறுபாடு இல்லை.

"கிறித்து பிறப்பதற்கு முந்தைய காலத்துப் புத்த கங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு இன்றைய பிரச்சனைகளைத் தீர்க்க முனைவது அறியாமையாகும். நிகழ்காலம் என்பது ஓடுகிற ஆற்று வெள்ளத்தைப் போன்றது. கடந்த காலமாகிய மலையிலிருந்துதான் அது உதிர்ந்தது என்றாலும், எதிர்காலமாகிய கடலை நோக்கியே அது ஓட வேண்டும்" என்றார், காண்டேகர்.

"சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் உயர்வென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்"

என்று பாரதி பாடுகிறார்.

"மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்"

என்று பாரதிதாசன் தன் ஆற்றாமையை வெளிப்படுத்து கிறார்.

**தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து கொஞ்சம் வேறுபட்டு உள்ளது. இங்கும் இப்படிப்பட்ட சமூகச் சீர்திருத்தவாதிகள் தோன்றாமல் இல்லை. பெரிய பூகம்பம் போல் எழுந்த பெரியார் தனி மனிதராகப் போராடவில்லை. ஓர் இயக்கமாகச்**

**செயல்பட்டார். அதனால் அவர் எல்லாத் தாக்கு தல்களிலிருந்தும் தப்பிப் பிழைத்தார்.**

கல்லடியும், சொல்லடியும் தொடர்ந்துவந்த போதிலும் துவண்டுபோகாமல் வீறுகொண்டு எழுந்தார். அவரது தொண்டர் படை அவரைக் காப்பாற்றியது. எதிரிகள் அவருடன் எதிர்த்து நிற்க முடியாமல் ஓடி ஒளிந்தனர்.

''சமூகச் சீர்திருத்தம் என்ற பெயரால் இங்கும் அங்கும் ஏதோ மாறுதல்களைச் செய்வதோ, ஒட்டு வேலை-மேல்பூச்சு வேலை செய்வதோ பயன்தராது. இன்றைய சமுதாய அமைப்பையே அடியோடு ஒழித்து விட்டுப் புதியதொரு சமுதாய அமைப்பை - சாதியற்ற, உயர்வு தாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்'' என்பது அவர் கொள்கை.

இப்படிப்பட்ட பகுத்தறிவாளர்கள் இந்தியாவில் மட்டும் அல்ல, உலகெங்கும் தோன்றி படாதபாடு பட்டுள்ளனர். அரசு அவர்களை வேட்டையாடியுள்ளது. நாடு கடத்தல், சிறை, மரண தண்டனை என அவர்களை ஓட, ஓட விரட்டியது. ஆனால் அவர்களது கொள்கைகளே இப்போதும் உலகை ஆளுகின்றன.

பத்திரிகையாளர் கவுரி லங்கேஷ் கொலை என்பதும் அதன் தொடர்ச்சியே! காந்தியைப் போல, கல்புர்கியைப் போல இவரும் கொலை செய்யப்பட்டுள்ளார். இதனால் கர்நாடகத்தில் மட்டுமே தெரிந்தவராக இருந்த இவர் உலகமே தெரிந்தவராக மாறியிருக்கிறார்.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடி வந்த பகுத்தறிவாளர் நரேந்திர தபோல்கர் புனே நகர வீதியில் காலையில் நடைபயணத்தில் ஈடுபட்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் மிக நெருக்கத்தில் அவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடியுள்ளனர்.

இவ்வாறு இந்துத்துவாவை எதிர்க்கும் எல்லோ ரையும் திட்டமிட்டுக் கொலை செய்கின்றனர். இவை தனிநபர்களால் செய்யப்படுபவை அல்ல. தேர்ந்த அமைப்பினர் செய்யும் திட்டமிட்ட செயலாகவே தெரி கிறது. இவர்களைக் கைது செய்து மக்கள் மன்றத்தில் நிறுத்தினால் மட்டுமே உண்மை உலகுக்குத் தெரியும்.

**இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 295-ஏ சட்டப் பிரிவு 'மத உணர்வுகளை அவமதிக்கும் நோக் கத்துடன் வேண்டும் என்றே செய்யப்படுகின்ற விசமத்தனமான செயல்கள் தண்டனைக்குரியவை' என்று கூறுகிறது. இது நீக்கப்பட வேண்டிய சட்டப் பிரிவு என்று அவர்கள் கூறுகின்றனர்.**

ஆக்கபூர்வமான, பகுத்தறிவுடன் கூடிய விமர்சனங் களுக்கு இடமில்லையென்றால், பிற்போக்குத்தன மான, மோசமான பழக்கவழக்கங்களை ஒழித்துக்கட்ட முடியாமல் போய்விடும். அரசியல் ஆதாயங்களுக்காக மதவாத அடையாளங்களைப் பயன்படுத்தும் போக்கு அண்மையில் அதிகரித்துள்ளது அதனால்தான்.

நரேந்திர தபோல்கரின் படுகொலையால் மகாராஷ்டிர மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன. மக்களின் கொந்தளிப்பைக் கண்ட மாநில அரசு அவசரம் அவசரமாக மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது.

'நரபலி மற்றும் இதர மனிதநேயமற்ற கொடுமை யான பழக்கங்கள், பில்லி சூனியத்திற்கு எதிராகச் சட்ட முன்வரைவு' என்பதன் அடிப்படையில் இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆண்டுக்கணக்காக சட்ட மன்றத்தில் முடங்கிக் கிடந்த இச்சட்ட முன்வரைவை நிறைவேற்ற வேண்டும் என இவர் பலகாலமாக வலி யுறுத்தி வந்தார்.

இவ்வாறு சமூகப் போராளிகள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்தே சமுதாயத் தேரை இவ்வளவு தொலைவு நகர்த்தி வந்துள்ளனர். அவர்கள் தொகை கொஞ்சமாக இருக்கலாம். ஆனால் அவர்களே வெகு மக்களின் பிரதிநிதிகள். மனிதநேயத்தின் மறு உருவங்கள்.

அவர்கள் இல்லாமல் தேசமும் இல்லை; தேச முன்னேற்றமும் இல்லை. இந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம் செய்வோம்.

## டாக்டர் சேப்பன் மறைவு



இந்தியக் குடியரசுக் கட்சி யின் (கவாய் பிரிவு) மூத்தத் தலைவரும், மருத்துவருமான சேப்பன் (80) சென்னை ஆயிரம் விளக்கு அஜீஸ் முல்க் தெரு வில் வசித்து வந்தார். அவர் மாரடைப்பு காரணமாக வியாழக்கிழமை (ஆகஸ்ட் 31) காலமானார்.

டாக்டர் சேப்பன், எம்.பி.பி.எஸ்., டி.ஜி.ஓ. (மகப்பேறு மருத்துவம்) எம்.ஏ. (அரசியல்) படித்தவர். இந்தியக் குடியரசுக் கட்சியின் (கவாய் பிரிவு) மாநிலத் தலைவராக 5 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்தவர். அதே கட்சியின் அகில இந்திய இணைப் பொதுச் செயலாளராகவும் இருந்துள்ளார்.

அரசியலில் இருந்து விலகிய பிறகு, முழுமையாக மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு வந்தார். ஏழை நோயாளியிடம் பணத்தைக் கேட்டுப் பெறாமல் அவர்களுக்கு மருத்துவம் அளித்து வந்தவர். டாக்டர் சேப்பனுக்கு மனைவி, ஒரு மகன், மகள் உள்ளனர். அவரது இறுதிச் சடங்கு மந்தைவெளியில் உள்ள மயானத்தில் செப்டம்பர் 1வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

மறைந்த மருத்துவர் அ.சேப்பன் அவர்கள் இட ஒதுக் கீட்டுப் போராளி ஆவார். அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

வாழ்க அ.சேப்பன் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# விடுதலைக்கு வித்திட்ட நாத்திக வீர இளைஞன்

- மருத்துவர் **க. சோமாஸ்கந்தன்**

**கொ**ள்கைக்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்தவர் பலர். நானும் தூக்குக் கயிற்றை முத்தமிடும் நாளை நெருங்கிக் கொண்டு இருக்கிறேன். கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, தங்களின் செயலுக்கு மறுபிறப்பில் நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும். இந்தப் பிறவியில் மோட்சம் கிடைக்கும் என்று நம்பியும் தங்கள் உயிரைத் தர முன்வருவார்கள். நான் முழு நாத்திகன். கடவுள் நம்பிக்கையற்றவன், என் கழுத்தை தூக்குக் கயிறு இறுக்கியதும் என் உயிர் பிரிந்துவிடும் என்று எனக்குத் தெரிந்தே இருக்கிறது. என் மரணம், நாட்டின் விடுதலை உணர்வை உயிர்ப்பிக்கு மெனில், அதைவிட எனக்கு வேறென்ன பெருமை வேண்டும், என்றார். மரணதண்டனையை எதிர் நோக்கியிருந்த, விடுதலை வேட்கை கொண்ட 23 வயது நிரம்பிய இளைஞனின் புரட்சிக் குரல். இது!

பஞ்சாபில், லாகூர் நகருக்கு அருகில் லாயல்பூர் மாவட்டத்தில் பங்கா என்ற கிராமத்தில் சர்தார் கிஷன்சிங்-வித்யாவதி இணையருக்கு இரண்டாவது மகனாக அந்தப் புரட்சியாளன் பகத்சிங், 1907 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27ஆம் நாள்,பிறந்தார்

அவன் பிறந்த போது அவன் தந்தை கிஷன்சிங், சிற்றப்பாக்கள் அஜித்சிங், ஸ்வரண்சிங் ஆகிய மூவரும் விடுதலைப் போரில் ஈடுபட்டார்கள் என்று, ஆங்கிலேய அரசு அவர்களைக் கைது செய்து பர்மாவின் மாண்டலே சிறையில் அடைத்து வைத்திருந்தது. மகன் பிறந்த சில தினங்களில், கிஷன்சிங் பிணையில் (ஜாமினில்) விடுதலையாகி இல்லம் வந்து தன் மகனைப் பார்த்தார்; பகத்சிங் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்;


கிஷன்சிங் சகோதரர், அஜீத்சிங் விடுதலைபெற்ற பின் மாண்டலே சிறையிலிருந்து ஜெர்மனி சென்று விடுதலை இயக்கத்திற்கு ஆக்கம் தேடினார். அஜீத்சிங், பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதிராயுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். மற்றொரு சகோதரர் சுவரண்சிங்க் 1907 ஆம் ஆண்டிலே சிறையிலேயே இறந்து போய்விட்டார்.

இத்தகைய நாட்டுப் பற்று மிக்க குடும்பத்தில் பிறந்த பகத்சிங்கின் குருதியிலேயே நாட்டுப் பற்று விதை விதைக்கப்பட்டிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

**இளம் வயதில்**

அவர் பிறந்த கிராமத்தில் இருந்த கால்ஸா பள்ளியில் தான் சீக்கியர்கள் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பது வழக்கம். ஆனால் அந்தப் பள்ளி வெள்ளையருக்கு அடிபணிந்து கிடப்பதால், நாட்டுப்பற்றும் முற்போக்கு எண்ணங்களும் கொண்டிருந்த பகத்சிங் தந்தை கிஷன்சிங், பகத்சிங்கை லாகூரில் உள்ள தயானந்தா பள்ளியில் கல்விகற்கச் சேர்த்து விட்டார்

**லாகூர் சதி வழக்கு**



**இந்தப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் லாகூர் சதி வழக்கு நடந்து கொண்டிருந்தது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட இயக்கம் கத்தார் இயக்கம். கத்தார் என்றால் அநீதியை எதிர்த்துப் போரிடுதல் என்று பொருளாகும். மதச்சார்பின்மை, தீண்டாமை ஒழிப்பு ஆகிய நோக்கங்களைக் கொண்டு இயங்கியது. கத்தார் இயக்கம் தொழிலாளர்களையும், விவசாயிகளையும், பொது மக்களையும் ஒன்று திரட்டி ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடியது.** அவ்வியக்கத்தின் தலைவர்கள் சர்தார்சிங் சாராபா, விஷ்ணுகணேஷ் பிங்களே ஆகியோர் ஆவர். அந்த இயக்கத்தினர் ஆங்கில ஆட்சியருக்கு எதிராகச் சதிவேலைகளில் ஈடுபட்டார்கள் என்று அரசு வழக்குத் தொடர்ந்தது. வழக்கின் இறுதித் தீர்ப்பில் 100 பேருக்குத் தூக்குத்தண்டனையும், 100 பேருக்கு அந்தமான் சிறையில் ஆயுள் தண்டனையும் வழங்கியது. அந்த இயக்கத்தின் தலைவர்களை 16-11-1915 இல் தூக்கிலிட்டனர் இந்த வழக்கை எதிர்த்து, சாராபா உயர் நீதிமன்றத்தில் வழக்காட மறுத்துவிட்டார்; தனக்கு ஒன்றிற்கு மேற்பட்ட உயிர்கள் இருந்திருக்குமானால் அவற்றையும் இந்த நாட்டின் விடுதலைக்காகத் தியாகம் செய்வதற்கே விரும்பினார் என அறிந்து வியக்கின்றோம்.

சர்தார்சிங்கின் துணிவும் தியாகமும் சிறுவன் பகத்சிங் உள்ளத்தில் நாட்டுப்பற்றை ஆழ விதைத்தது. அவரது புகைப்படத்தைத் தன் சட்டைப் பையில் எபொழுதும் வைத்துக் கொண்டிருப்பார்.

ஜாலியன்வாலாபாக் படுகொலை:- சீக்கியரின் புனித நகரத்தில், ஜாலியன்வாலாபாக் என்னுமிடத்தில் 13-4-1919 இல் ரௌலட் சட்டத்தை எதிர்த்து, மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கூடியவர்களைக் கொன்று குவித்திட வேண்டுமென்று ஜெனரல் டயர் எண்ணி, காவலர் படையை அனுப்பினான். அவர்கள் எந்த முன்னறிவிப்பும் இன்றி அங்குக் குழுமியிருந்த மக்களை நோக்கி பல சுற்றுகள் தோட்டாக்கள் தீரும் வரை சுட்டனர். அப்பாவிமக்கள் அஞ்சிச் சிதறி ஓடினர். 379 பேர் உயிர் இழந்தனர், 1137 பேர் காயமுற்றனர். அந்தப் பூமியே இரத்தம் தோய்ந்து சிவப்பாயிற்று.

12 வயதான, பள்ளிமாணவன் பகத்சிங், இந்தப் படுகொலையைக் கேள்வியுற்று முகம் சிவந்தான்;

எவரிடமும் பேசாது புகைவண்டி ஏறி அமிர்தசரஸ் சென்றான்; அந்தக் கோரக் காட்சியைக் கண்டான்; மனம் நெகிழ்ந்தான்; சீற்றம் கொண்டான். குருதிகலந்த மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டான். சிறிது மண்ணை கண்ணாடி புட்டியில் எடுத்துக் கொண்டான்;. இல்லம் திரும்பினான். மௌனமாகக் கண்ணீர் விட்டான். அன்று இரவு முழுதும் உறங்கவில்லை உணவும் உண்ணவில்லை. ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடவும் உறுதி கொண்டான். தினம் தினம் பூத்த மலர்களை அந்த மண்ணில் வைத்து வணங்கி ''எழுச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தான். இந்நிலையில் ''வந்தே மாதரம்'' என்ற சுதந்திர முழக்கத்தை எழுப்புவதற்கு ஆங்கிலேய அரசு தடை விதித்திருந்தது. இதை எதிர்த்துப் பொது இடங்களிலும் காவலர்கள் முன்பும் வந்தே மாதரம் என்று முழக்கமிடுவதை விடுதலை வீரர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். தாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்று பகத்சிங் நினைத்தார். இரவோடு இரவாக காகிதங்களில் ''வந்தே மாதரம்'' என்று எழுதி வீதிகளில் உள்ள சுவர்களில் ஒட்டி வைத்து விட்டார். பொழுது விடிந்ததும் அதை பார்த்துப் பதறிய காவல்துறையினர் பரபரவென கிழித்து எறிந்தனர். அவற்றை ஒட்டியவர் பகத்சிங் என்பதைக் கண்டறிந்து காவல்நிலையத்திற்கு இழுத்து போய் அடித்து உதைத்தனர். சிறுவனாக இருந்ததால் எச்சரித்து அனுப்பிவிட்டனர். இந்த சம்பவம் பகத்சிங்கை பயமுறுத்தவில்லை. மாறாக அவரது நாட்டுப் பற்றை இன்னும் கிளர்ந்தெழ வைத்தது. இந்நிகழ்வும் அச் சிறுவனின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. அரசியல் களத்தில் செயல்பட ஆர்வம் கொண்டான். கல்வியில் நாட்டமில்லை என்ற போதிலும் மெட்ரிகுலேசன் வகுப்பில் தேர்வு பெற்றான்.

### காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம்

ரௌலட் சட்டம் மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுக்கவும், 1919 இந்திய அரசுச் சட்டத்தில் இந்தியருக்கு வழங்கப்பட்டிருந்த குறைவான அதிகாரங்களை ஏற்க மறுப்புத் தெரிவிக்கவும் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார். இவ்வியக்கத்தைக் காங்கிரசின் பல மூத்த தலைவர்கள் ஆதரிக்கவில்லை. எனினும் இளைய தலைமுறை தேசியவாதிகளிடையே இது பெரும் ஆதரவைப் பெற்றிருந்தது.

பள்ளியில் பயிலுங்காலத்தில் அவரைக் கவர்ந்த தலைவர் மகாத்மா காந்தி ஆவார். இயல்பாகவே நாட்டுப்பற்று மிக்கவராக இருந்ததால் காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

ஒத்துழையாமை இயக்கம் உச்சத்தில் இருந்த போதே காந்தி திடீரென்று இயக்கத்தை நிறுத்திவிட்டார்..பிப்ரவரி 5, 1922ல் உத்திரப் பிரதேசத்தில் சௌரி சௌரா என்ற இடத்தில் விடுதலை இயக்கத்தினருக்கும் காவல்துறையினருக்கும் மோதல்கள் ஏற்பட்டன. காவல்துறையினரின் செயல்பாட்டால் சில விடுதலை இயக்கத்தினர் மரணமடைந்தனர். இதனால் கோபம் கொண்ட மக்கள் காவல் நிலையத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவல்துறையினர் கொல்லப்பட்டனர். வன்முறை இந்தியாவின் வேறு சில பகுதிகளுக்கும் பரவியது. அறவழியில் நடந்து வந்த இயக்கம் வன்முறைப் பாதையில் செல்வதைக் கண்ட காந்தி அதிர்ச்சியடைந்தார். ஒத்துழையாமை இயக்கம் வன்முறை இயக்கமாக மாறுவதைத் தடுக்க, அதனை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தார். வன்முறை ஓயும் வரை மூன்று வாரங்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை நடத்தினார்

**காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் திடீரென நிறுத்திய போது பகத்சிங் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார். வன்முறைச் செயல்களில் ஈடுபடக்கூடாது என்பதில் காந்தியடிகள் உறுதியாக இருந்தபோது, நாங்கள் வன்முறையில் ஈடுபடவில்லை; அரசின் வன்முறைக்கு எதிரான நடவடிக்கை என்று கருதினார் பகத்சிங். அகிம்சை வழியில் சென்றால் விடுதலை பெறமுடியாது.ஆயுதம் தாங்கிப் போராடினால் மட்டுமே விடுதலை பெறமுடியும் என்று முடிவு செய்தார்.**

### லாகூர் தேசியக்கல்லூரியில்

பின் லாகூர் தேசியக்கல்லூரியில் 1924 இல் இளங்கலை பட்டப் படிப்பில் சேர்ந்தார். பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராயால் தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரி விடுதலைப் போராளிகளின் பாடி வீடாக அமைந்திருந்தது இக்கல்லூரியில்தான் சுகதேவ், பகவதிசரண் வோரா, யஷ்பால் ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. பாட நூல்களைத்தாண்டி பகத்சிங் படித்த வரலாறு, அரசியல்,, பொருளாதார நூல்கள் அவரது அறிவை விரிவாக்கின. முற்போக்குச் சிந்தனைகளும் ஏற்பட்டன. நூல்கள் வாயிலாக அவருக்கு வெளிநாட்டுப் புரட்சியாளர்கள் அறிமுகம் ஆனார்கள்.

ரஷ்ய நாட்டில் 1917 சோசலிச புரட்சிக்குப் பின்னர் அனைத்து மக்களும் அனைத்து வளங்களையும் சரி சமமாகப் பகிர்ந்து கொண்டு வாழ்வதைப் பற்றி அறிந்தார். அதற்குக் காரணமான தலைவர் லெனின் பற்றியும் அறிந்தார். 1925க்குப் பின் தான் மார்க்சியம் இந்தியவுக்கு அறிமுகமானது. அதுவும் தலைமறைவு இயக்கமாக இருந்த காலகட்டத்தில் பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் தேர்ந்திருந்தார் பகத்சிங். சோஷலிச தத்துவத்தைத் தன் இலட்சியமாக ஏற்றார்.

பள்ளி, கல்லூரிகளில் இந்தி, ஆங்கிலம் பஞ்சாபி உருது சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். உள்ளம் உருகும் கவிதைகளை உருது மொழியில் படைத்தார். கல்வியைத் தாண்டி நாட்டு விடுதலையும் கம்யூனிச சிந்தனைகளும் அவரை முழுமையாக ஆட்கொண்டன.

சுகதேவ், பகவதி சரண் வோரா, யஷ்பால் ஆகியோ

ருடன் பகத்சிங், புரட்சிகரமான இயக்கங்களில் ஈடுபட்டு வந்தார். பகவதி சரண் வோரா இவர்கள் எல்லோரையும் விட செல்வம் படைத்தவர். அவருக்குச் சிறுவயதிலேயே துர்கா தேவியுடன் திருமணம் நடைபெற்றுவிட்டது.

. கல்லூரியில் பயிலுங்காலத்தில், பகத்சிங்கிற்கு திருமணம் செய்திட விரும்பி தந்தை, மகனுக்குத் கடிதம் எழுதினார். அதற்கு பகத்சிங் எனக்குத் திருமணம் செய்து கொள்ள விருப்பமில்லை. நாடு என்னை அழைக்கிறது. நாட்டின் விடுதலை வேண்டி என் உயிரையும் தியாகம் செய்ய உறுதி கொண்டுள்ளேன். திருமணம் செய்துகொண்டு ஒருபெண்ணின் வாழ்வை சீரழிக்க விரும்பவில்லை, என்று பதில் எழுதிவிட்டு, படிப்பையும் பாதியிலேயே நிறுத்தி விட்டு, கல்லூரியை விட்டு நீங்கி லாகூரிலிருந்து கான்பூர் சென்று அரசியல் பணிகளில் ஈடுபட்டார்.

அந்நிலையில், பாட்டி உடல் நலம் குன்றியுள்ளார் என்று அறிந்ததும், பாட்டியின் மீது மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்த பகத்சிங் உடன் வீடு திரும்பி பாட்டியுடனிருந்து பணிவிடை செய்தார். பாட்டி நலம் பெற்று எழுந்ததும், மீண்டும் கான்பூர் சென்று இயக்கப் பணிகளை மேற்கொண்டார். ஆயுதப்புரட்சிக்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தபோது, கான்பூர், கங்கை வெள்ளத்தால் சூழப்பட்டது. இயக்கப்பணிகளை நிறுத்தி விட்டு வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார், மனிதாபி மானங் கொண்ட பகத்சிங்.

கான்பூரில் பகத்சிங், கணேஷ் சங்கர் வித்தியார்த்தி என்ற நண்பரின் வீட்டில் தான் தங்கினார். புரட்சியாளர் கள் சந்திக்கும் இடமாக வித்தியார்த்தி வீடு அமைந் திருந்தது. சந்திரசேகர ஆசாத், சிவவர்மா, பாதுகேஸ்வர் தத், ஜோகேஷ் சந்திர சட்டர்ஜி ஆகிய புரட்சியாளர்களைப் பகத்சிங் இங்குதான் சந்தித்தார். இங்குதான் மார்க்ஸின் மூலதனத்தை வாசித்து முடித்தார்.

### இதழியல் பணிகள்

கான்பூரிலிருந்து புரட்சிகரமான துண்டு பிரசுரங்களை எழுதி மக்களிடையே வினியோகித்தார். கணேஷ் சங்கர் வித்தியார்த்தி நடத்திவந்த 'பிரதாப்' என்ற ஆங்கில வார இதழிலும் எழுத்துப் பணியாற்றினார். பாபா சோகன்சிங்க் ஜோஷ் இந்தியப் புரட்சியாளர்களின் தலைவர்களில் முக்கியமானவர். 23 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைவாசம் புரிந்தவர். அவர் கீர்த்தி என்ற பெயரில் ஓரிதழை நடத்தி னார். அதில் பகத்சிங் துணை ஆசிரியராகப் பணியாற்றி னார். தில்லியிலிருந்தபோது 'அர்ஜுன்' என்ற உருது இதழின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றினார்.

### இந்தியக் குடியரசுக் கழகம் (Hindustan Republic Association)

:- 1923ஆம் ஆண்டு, சுசீந்திரநாத் சன்யால், ராம் பிரசாத் பிஸ்மில் என்பவர்களால் தொடங்கப்பட்ட இந்தியக் குடியரசுக் கழகம் என்னும் அமைப்பில் பகத்சிங் இணைந்தார். இவ்வமைப்பின் கொள்கைகள் சுசீந்திரநாத் சன்யால் அவர்களால் வடிவமைக்கப்பட்டது. இந்திய விடுதலையை ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் பெற்று, சாதி மத பேதமற்ற இந்திய ஐக்கிய சோஷலிசக் குடியரசை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டது இவ்வமைப்பு. இந்த அமைப்பின் நோக்கங்கள் சந்திர சேகர ஆசாத்தை வெகுவாகக் கவர்ந்ததால் விளக்குத் தீயில் தன் கையை எரித்துத் தனது நாட்டுப்பற்றை வெளிப் படுத்திய பின் இணைந்தார். அதன்பின் அந்த அமைப்பை வளர்ப்பதற்காக 1925 இல் காகோரி இரயில் கொள்ளை யில் ஈடுபட்டார். இது போன்று பல வழக்குகளில் தேடப் பட்டவர். இறுதியில் 1931 இல் அலகாபாத்தில் காவலர் களோடு போராடி மரணம் அடைந்தார்.

### நவஜவான் பாரத சபை

கான்பூரிலிருந்து இலாகூருக்கு வந்து இந்தியக் குடியரசுக் கழகத்தின் கிளையைத் தொடங்கினார் பகத்சிங். பின் 1926 இல் நவஜவான் பாரத் சபா என்ற இளைஞர் அமைப்பை பகத்சிங் தன் தோழர்கள் பகவதிசரண் வோரா, சுகதேவ், ராம்கிஷன் ஆகியோரோடு இணைந்து தொடங்கினார். ராம்கிஷன் தலைவரகவும், பகத்சிங் செயலாளரகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்களிடையே மார்க்சியத்தை அறிமுகப்படுத்துவதும், அவர்களை நாட்டு விடுதலைக்கான ஆயுதப்புரட்சியில் ஈடுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றியது.

பகத்சிங் மதவாத அமைப்புகளுடன் எவ்விதத் தொடர்பும் கூடாதென உறுதியுடன் செயல்பட்டார். மதம் மனிதனின் தனிப்பட்ட நம்பிக்கை. அந்த நம்பிக்கையை அரசியல் இயக்கங்கள் தங்கள் சுய லாபத்திற்குப் பயன் படுத்துவதை மறுத்தார், எதிர்த்தார். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கம் ஆபத்தானது, எனில் அதைவிட மதவாதம் மோச மானது, ஆபத்தானது என்று விளக்கினார். இறுதிவரை மதச்சார்பின்மைக் கோட்பாட்டை பகத்சிங் கடைப்பிடித்தார். போராளிகள் ஒவ்வொருவரும் தனி மனித ஒழுக்கத்தில் இருந்து தவறக்கூடாது என்பதில் பகத்சிங் கண்டிப்பாக இருந்தார். ஒரு நாள் போராளி ஒருவர் குடித்து விட்டு வந்த போது அவரைக் கடுமையாகக் கடிந்து கொண்டார். அந்த இளைஞன் மன்னிப்புக் கேட்டு, குடிப்பழக்கத்தைக் கைவிட்ட பிறகே போராட்டச் செயல்பாடுகளில் ஈடுபட பகத்சிங் அனுமதித்தார்.

தீவிரவாத காங்கிசார் 1928 இல் இச் சங்கத்தில் இணைந் தனர். கீர்த்தி விவசாயிகள் கட்சியினர், கத்தார் கட்சியினர், பிரிட்டன் பொதுவுடைமை இயக்க ஊழியர் பிலிப் பராட் ஆகியோர் நவஜவான் பாரத சபையுடன் தொடர்பு கொண்டனர்.

நவஜவான் பாரத சபா சார்பில் இரஷ்ய நண்பர்கள் வாரம் எனக் கொண்டாடி இரஷ்யப் புரட்சியின் வரலாறு, அதனால் விளைந்த அரசியல் மாற்றங்கள், மக்கள் அடைந்த முன்னேற்றங்கள், மகத்துவங்கள் பற்றி நீண்ட உரையாற்றினார் பகத்சிங். அதற்குப் பின்னர் நவஜவான் பாரத சபா சார்பில் நடைபெற்ற கர்த்தார்சிங் சாரபா நினைவு

நாள் கூட்டம், பகத்சிங்கின் மீதும், அவரின் தோழர்கள் மீதும், அரசிற்கு சந்தேகத்தை உருவாக்கிற்று.

### சைமன் கமிஷன் எதிர்ப்பு

1927 நவம்பர் 8ஆம் நாள், இந்தியவிற்கு என்னென்ன சலுகைகள் தரலாம் என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை கொடுக்க சர். ஜான் சைமன் தலைமையில் குழுவினை அமைத்தது ஆங்கில அரசு. அக் குழுவில் இந்தியர் எவரும் இடம் பெறவில்லை. 2-2-1928 அன்று சைமன் கமிஷன் பம்பாய் வந்தது, அன்று இந்தியா முழுவதும் ஹர்த்தால். இந்தியாவில் அனைத்துக் கட்சிகளும் சைமன் கமிஷனை எதிர்த்தனர். முஸ்லீம் லீக்கின் ஒரு பகுதியினரும், இந்து மகா சபையில் (இன்றைய ஆர்.எஸ்.எஸ்) பெரும்பாலோரும் கமிஷனை ஆதரித் தார்கள். சென்னை, கல்கத்தா, டெல்லி, லக்னோ, பட்னா என்று சைமன் சென்ற வழியெங்கும் மக்கள் ''சைமனே திரும்பிப்போ'' என முழக்கமிட்டு ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலத்தைக் கலைக்க போலீஸார் தடியடி நடத்தி னார்கள். லக்னோவில் நேரு தாக்கப்பட்டார்.

30-10-1928 லாகூர் வீதிகளில் பழம்பெரும் தலை வரான லாலா லஜபதிராய் தலைமையில் ''சைமனே வெளியே போ'' என ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காவல் துறை ஆணையர் ஸ்காட், ஆணையிட்டதனால் காவல்துறை தடியடியில் ஈடுபட்டது. துனை ஆணையர் சாண்டர் லாலா லஜபதிராயை மூர்க்கமாக மார்பில் தடியால் தாக்கினார். மயக்கமடைந்த பஞ்சாப் சிங்கம் லாலா ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் ஆனால் அங்கே, சிகிச்சை பலனிளிக்காமல் 17-11-1928 இல் காலமானார். அது குறித்து எந்த விசாரணையும் நடைபெறவில்லை. **போலீசார் என் மீது அடித்த ஒவ்வொரு அடியும் பிரிட்டிஷ் ஆட்சியின் சவப்பெட்டியில் அடித்த ஆணியாகும், என்றார் பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய்.** சித்தரஞ்சன் தாஸின் மனைவி வீரவசந்தி தேவி பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராயின் கொலைக்குப் பழிக்கு பழி வாங்க வேண்டும் என்னும் உணர்வைத் தூண்டும் வகையில் இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

### இந்திய சமரசக் குடியரசு இராணுவம் தோற்றம்

அதன் விளைவாக, உத்தரப்பிரதேசத்திலிருந்து சந்திரசேகர ஆசாத் லாகூர் வந்தார். அவரை பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் முதலியோர் சந்தித்தனர். அனைவரும் இணைந்து 1928 டிசம்பரில் இந்திய சமரசக் குடியரசு இராணுவம் என்னும் அமைப்பினை உருவாக்கினர். அவ்வமைப்பின் மத்தியக் குழு உறுப்பினர்களில் ஒருவராக பகத்சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவ்வமைப்பின் குழுவினர் பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராயின் கொலைக்குப் பழிக்கு பழி வாங்க முடிவு செய்தனர். ஜெயகோபால் காவல் நிலையத்தைக் கண்காணித்துத் தகவல் கொடுக்க மறைவாக நின்று கொண்டிருந்த பகத்சிங், ராஜகுரு, ஆசாத் மூவரும், காவல் நிலையத்திலிருந்து துணையானையர் சாண்டர்ஸ், தன் வாகனத்தில் கிளம்பியதை அறிந்தனர். முதலில் ராஜகுரு சாண்டர்ஸை நோக்கிச் சுட்டார். அடுத்து பகத்சிங் சுட்டார். சாண்டர்ஸ் உயிர் இழந்தார். 17-12-1928இல் இந்நிகழ்வு நடந்தது.

பின் மூவரும் தேசியக் கல்லூரி நோக்கிச் சென்றனர். ஒரு காவலர் பின் தொடர்ந்தார். ஆசாத் அவரை எச்சரித் தும் கேட்காமல் தொடரவே அவரை ஆசாத் சுட்டுக் கொன்றார். பின் மூவரும் நிதானமாகக் கல்லூரி விடுதி நோக்கிச் சென்றனர். மறு நாள் செய்தித் தாள்களில், லாலா லஜபதி ராயின் மரணத்துக்கு பஞ்சாப் இளைஞர்கள் பழிக்குப் பழி வாங்கிவிட்டனர் என்று செய்தி வெளியிடப்பட்டது. இந்திய தேசிய இராணுவம் என்ற பெயரில் சுவரொட்டிகள் ஆங்காங்கே காணப்பட்டன.

லாகூரில் பல இளைஞர்களை காவல் துறை கைது செய்தது. எனினும் புரட்சியாளர்கள் மாறு வேடத்தில் ஊரைச்சுற்றி வந்தனர். இனியும் லாகூரில் தங்கியிருப்பது ஆபத்து என எண்ணி கல்கத்தா செல்ல நினைத்தனர்.

சந்திரசேகர ஆசாத் உ.பியைச் சேர்ந்தவர் என்பதால் அவரை லாகூர் காவலர்களுக்கு அடையாளம் தெரியாது; அவர் எளிதில் தப்பிவிடலாம். ஆனால் பகத்சிங் ஊரிலுள் ளோர்க்கு நன்கு அறிமுகமானவர். ஆகவே, அவரைத் தப்புவிக்க ஆலோசனை நடந்தது. சுகதேவ் பகவதிசரண் என்ற நண்பரைச் சந்தித்தார்; பகத்சிங் லாகூரிலிருந்து கல்கத்தா தப்பிச் செல்ல, பகவதிசரண் மனைவி துர்கா தேவியார், பகத்சிங்கின் மனைவியாக நடிக்க வேண்டும் என்று வேண்டினார். ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் பகவதிசரணும், துர்கா தேவியும் ஒப்புக்கொண்டனர்.

பகத்சிங் இருவரையும் வணங்கினார். மறு நாள் காலை 5 மணிக்கு, துர்காதேவி, பகத்சிங், ராஜகுரு, மூவரும் மாறு வேடத்தில் கல்கத்தா செல்லும் விரைவு தொடர்வண்டியில் கிளம்பிச் சென்றனர். ராஜகுரு லக்னோவில் இறங்கிக் கொண்டார். பகத்சிங், துர்காதேவி கல்கத்தா சென்றடைந் தனர். கல்கத்தாவில் பகவதிசரண் அவர்களை வரவேற் றார். கல்கத்தாவில் பகத்சிங் வெடிகுண்டு தயாரிப்பில் சிறந்த யதீந்திர நாத் என்பவரின் நட்பினைப் பெற்றார். பின்னர் இருவரும் ஆக்ரா சென்று ஒரு பாழடைந்த வீட்டிலிருந்து வெடிகுண்டுகள் செய்து எடுத்துக் கொண்டு 'பகத்சிங் டில்லி சென்றார். அங்கு பூதேஸ்வர'தத் என்பவருடன் சிலகாலம் கழித்தார்.

### நாடாளுமன்றத்தில் குண்டுவீச்சு

தொழிலாளர் இயக்கத்தை நசுக்கிடவும் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுத்திடவும் ஆங்கில அரசு இந்திய உள் நாட்டுப் பாதுகாப்புச் சட்டமும், தொழில் தகராறு சட்டமும் என்று இரு சட்டங்களைக் கொண்டு வந்தது. இவ்வேளை யில், முக்கிய பொதுவுடைமைத் தலைவர்களையும் மீரத் சதிவழக்கில் ஆங்கில அரசு கைது செய்தது. இவை களைக் கண்டித்து இந்திய சமரசக் குடியரசு இராணுவ அமைப்பு நாடளுமன்றத்தில் குண்டு வீசுவதென முடிவு

செய்தது. குண்டு வீச்சு எவரின் உயிரையும் பறிக்கக் கூடாது. குண்டு வீசியவர்கள் தப்பிக்க முயலக்கூடாது. கண்டிப்பாகக் கைதாவதை தவிர்க்கக் கூடாது. நீண்ட விவாதத்திற்குப்பின் பகத்சிங்கும், பாதுகேஷ்வர் தத்தாவும் இவ்வினையினை முடித்துக் கைதாவது என்று முடிவாகியது.

**8-4-1929 அன்று பகத்சிங்கும், பாதுகேஷ்வர் தத்தாவும் இரண்டு குண்டுகளுடன் நாடாளுமன்றத்தின் பார்வையாளர்கள் அமரும் இருக்கையில் அமர்ந்திருந் தனர். அன்று நாடாளுமன்றத்தில் மோதிலாலும். வித்தல்பாய் படேலும், மதன்மோகன் மாளவியாவும் இருந்தனர். வைஸ்ராய் லார்டு இர்வினும் சர். ஜான் சைமனும் அருகருகே அமர்ந்திருந்தனர். தொழில் தகராறு சட்டம் இயற்றப்பட்டவுடன் இருவரும் நாடாளு மன்றத்தில் குண்டுகளை வீசினர். நாடாளுமன்றத்தை புகை சூழ்ந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலை தெறிக்க ஓடினர். பகத்சிங்கும், பாதுகேஷ்வர் தத்தாவும் குண்டுகளை வீசிவிட்டு, 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று கோஷமிட்டுக் கையிலிருந்த துண்டுப் பிரசுரங்களையும் அவையில் வீசிவிட்டுத் தப்பிக்க முயற்சி செய்யாது நின்றனர், காவலர் அவர்களைக் கைது செய்தனர். அப்போது காவலர் ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டார். கேளாக் காதினர் காதில் எங்கள் குரல் ஒலிக்க வேண்டும் அல்லவா? அதற்காக, என்றனர். 8-4-1929 அன்று இந்நிகழ்ச்சி நடைபெற்றது. பிறகு 2 மாதங்கள் கழித்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். கோர்ட்டில் பகத் சிங் கொடுத்த வாக்குமூலத்தின் ஒரு பகுதி:**

காது கேளாதோருக்கு (ஆங்கிலேய அரசு) உணர்த்த உரத்த குரல் எழுப்புகிறோம். தொழிலாளர்களை நசுக்கு வதற்காக தொழில் தாவா சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளில் அதனை எதிர்த்து இத்தாக்குதலை நடத்தியுள் ளோம். நாடாளுமன்றத்தில் குண்டு வீசினோம். ஆனால் உறுப்பினர்களைக் கொல்ல வேண்டும் என்பது எங்கள் நோக்கமல்ல. நாங்கள் வீசிய குண்டுகள் மனிதர்களைக் கொல்லக் கூடியவை அல்ல. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கவனத்தைத் திருப்பி இந்தியர்களின் உணர்வுகளை அவர்களுக்கு உணர்த்தவே இந்த நடவடிக்கையில் ஈடு பட்டோம். அநீதியின் அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டுள்ள ஏகாதிபத்திய அமைப்பை உடைத்தெறிவதே எங்கள் புரட்சியின் நோக்கம். நாங்கள் இழிவான கொடூரச் செயல் புரிபவர்கள் அல்ல என்று கூறிவிட்டு, இன்குலாப் ஜிந்தா பாத்-புரட்சி ஓங்குக என்று முழக்கமிட்டனர். 12-6-1929 அன்று தீர்ப்பு வந்தது: குண்டு வீசிய குற்றத்துக்காக பகத் சிங்குக்கும், பாதுகேஸ்வர தத்துக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

**லாகூர் சதி வழக்கு:**

காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் சாண்டர்ஸ் கொலை வழக்கு 10-7-1929 அன்று லாகூரில் தொடங்கியது. 32 பேர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டி ருந்தது.

அவர்களில் பணிந்தர நாத்கோஷ், ஜெயகோபால், ஹன்ஸ்ராஜ் வோரா முதலிய எழுவர் அரசு தரப்பு சாட்சிகளாக மாறினர் (அப்ரூவர்).

ஆசாத், பகவதி சரண், யஷ்பால் முதலிய 9 பேரை காவல் துறையினரால் கைது செய்ய இயலவில்லை.

பகத்சிங், சுகதேவ், ராஜகுரு முதலிய 16 பேர் நீதி மன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

7-10-1030 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி பகத்சிங், சுகதேவ், ராஜகுரு மூவருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டது.

17-10-1930 அன்று தூக்குத் தணடனை நிறை வேற்றப்படவேண்டும் என்பது நீதிபதி ஆணை. ஆனால் காரணம் என்ன என்று அறியாமலேயே தண்டனை நிறை வேற்றப் படாமலேயே, தள்ளிப் போய்க்கொண்டிருந்தது.

**தந்தையின் பாசமும் தனயனின் சீற்றமும்**

தந்தை பாசத்தால், தன் மகன் குற்றம் புரிந்தவன் அல்லன் என்றும், சாண்டர்ஸ் கொலைச் செயலில் அவன் ஈடுபட்டவன் அல்லன் என்றும் அவன் விஷயத்தில் அரசு கருணை காட்டவேண்டுமென்றும் கோரி கடிதம் எழுதியிருந்தார்.

இதனை அறிந்த பகத்சிங் கோபத்துடன் தந்தைக்குக் கடிதம் எழுதினான். நான் சாவைக் கண்டு அஞ்சும் கோழை அல்லன். என்னை கோழையாக நீங்களும் வளர்க்க வில்லை. பின் ஏன் அரசுக்குக் கருணை மனு எழுதினீர் கள் நீங்கள் செய்த காரியம் காவலர் என்னை தடியால் தாக்கியதைவிடக் கொடுமையானது. என் முதுகில் குத்தியது போன்று உணர்கிறேன். தந்தை என்கிற பலவீனத்தில் நீங்கள் செய்த காரியத்தை வேறு யாராவது செய்திருந்தால் அதை நான் பச்சைத் துரோகம் என்றே கூறுவேன். என எழுதினார்.

சிறையில் இருந்தபோது, பகத்சிங், என்னைத் தூக்கிலிடாதீர்கள் என்று அரசுக்குக் கடிதம் எழுதினார். எதற்கு? உயிர் பிச்சை கேட்டா? இல்லை. நான் அரசின் அடக்குமுறைக்கு எதிராகப் படை சேர்த்து போரிட்டவன். அந்த வகையில் நான் போர்க் கைதி. மற்ற கைதிகளைத் தூக்கிலிடுவதைப் போல என்னையும் தூக்கிலிடாதீர்கள். என் உயிர் பிரியும் தருணத்தில், இந்த மண்ணுக்குச் சம்பந்தமில்லாமல் என் உடல் அந்தரத்தில் இருக்கக் கூடாது. எனவே, என்னை ஒரு போர் வீரனாகக் கருதி, உங்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுங்கள் என்ற பகத்சிங்கின் கோரிக்கை அரசை மிரட்டியது.

தூக்குத்தண்டனையை எதிர்கொள்ள தீரமுடன் காத்திருந்தனர் புரட்சியாளர்கள் பகத்சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ். ஆனால் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று இந்திய நாடே ஒருமித்த குரலில் கோரிக்கை எழுப்பியது. இலட்சக்கணக்கான கையெழுத்துக்கள் கொண்ட மனுக்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வந்து குவிந்தன. அநேகம் பேர் இரத்தத்தினாலும் கையெழுத் திட்டு அனுப்பியிருந்தனர்.

அப்போது காந்தியடிகளுக்கும் வைஸ்ராய் இர்வினுக்கும் இடையே எட்டப்படவிருந்த காந்தி - இர்வின் ஒப்பந்தம் குறித்து ஆலோசனைகள் நடந்து கொண்டிருந்தன. எனவே ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் ஒன்றாக மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை காங்கிரசுக்குள்ளேயே எழுந்தது. காந்தியடிகள் நினைத்தால் இந்த மூன்று இளைஞர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும் என்று நாடே நம்பியது.

**பகத்சிங்கின் உயிரைக் காப்பாற்றப்போகும் சமய சஞ்சீவியாக வருமென மக்களால் எதிர்பார்க்கப்பட்ட அந்த காந்தி - இர்வின் ஒப்பந்தமும் வந்தது. 1931 மார்ச் மாதம் 5ம் நாள் கையெழுத்திடப்பட்டது. ஆனால் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூன்று இளைஞர்களின் தூக்குத்தண்டனை பற்றி அந்த ஒப்பந்தத்தில் ஒரு வார்த்தை கூட இல்லை. வன்முறை சாராத குற்றங் களுக்காக சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று மட்டுமே அவ்வொப் பந்தம் கூறியது. எனவே, தாய் நாட்டின் விடுதலைக்காக தங்களது இன்னுயிரை விடவும் தயாராக இருக்கும் அந்த மூன்று இளைஞர்களின் உயிரைக் காப்பாற்ற காந்தியடிகள் தவறிவிட்டார் என்று மக்கள் கோபம் கொண்டனர். காங்கிரசில் இருந்த இளைஞர்கள் மட்டுமல்லாது பெரும்பான்மையானவர்கள் காந்தியடி களுக்கு எதிராக கொதித்தெழுந்தனர்.**

காந்தி - இர்வின் ஒப்பந்தம் அந்த மாதம் இறுதியில் 1931 மார்ச் 29-இல் நடைபெறவிருந்த கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டால்தான் அது செயலுக்கு வரும் என்ற நிலை இருந்தது. ஒருவேளை, பகத்சிங் உள்ளிட்ட மூன்று இளைஞர்களின் தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படவேண்டும் என்ற சரத்து ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டால்தான் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வோம் என்று ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவர்களை ஆட்கொண்டது. 1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் நாள் வரை தூக்குத் தண்டனை ஆணை வரவில்லை. ஆனால்அவசர அவசரமாக கராச்சி மாநாட்டிற்கு முன்னதாக மார்ச் 23 ஆம் நாள் தான் அம்மாவீரர்களைத் தூக்கிலிட ஆணை பிறப்பிக்கப்படுகிறது. தண்டனையை அன்று மாலையே நிறைவேற்ற வேண்டும் என்பது அந்த ஆணையின் இன்னொரு பகுதியாகும். அன்றைய நாள் முதன்மை சிறைக் காவலர் சர்தார்சிங் என்பவருக்குப் பகலில் ஆணை வருகிறது. ஒரு புனித நூலை எடுத்துக் கொண்டு அவர் பகத்சிங்கிடம் வருகிறார். அன்று மாலையே தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட இருப்பதால் புனித நூலைப் படித்து கடவுளிடம் பிரர்த்தனை செய்யுமாறு கூறினார். அதற்கு பகத்சிங், நான் விபரம் தெரிந்த நாள் முதல் நாத்திகனாகவே வாழ்ந்திருக்கிறேன். என் வாழ்வின் இறுதி நாளிலும் நான் நாத்திகனாகவே இருக்க விரும்புகிறேன். என்று அடக்கத்துடன் கூறி சிறைக் காவலரின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டார்.

**மரண தண்டனையை நிறைவேற்ற மாலை 7மணி அளவில் சிறைக் காவலதிகாரிகள் அழைத்தபோது, புரட்சியாளர் லெனின் எழுதிய அரசும் புரட்சியும் (State and Revolution) என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தார் பகத்சிங். ஒரு புரட்சியாளனை, இன்னொரு புரட்சியாளன் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கிறான். கொஞ்சம் பொறுங்கள். இன்னும் சில பக்கங்களேயுள்ளன. படித்துமுடித்துவிட்டு வந்துவிடுகின்றேன், என்றார். காவலதிகாரிகள் திகைத்துப் போயினர். உனக்கு மரணம் பற்றிய பயமே இல்லையா? என்று அவர்கள் கேட்டதும், அந்த மாவீரன், நான் வெளியே இருந்த போது இன்குலாப் ஜிந்தாபாத் என்று முழங்கினேன். சிறைக் கம்பிகளுக்குப் பின்னால், இதோ,என் மரணம் நெருங்கும் தறுவாயில் புரட்சி ஓங்குக என்று நாடே சொல்கிறது. 24 வயதில் இதை விட நிறைவான வாழ்க்கை வேறு யாருக்குக் கிடைக்கும் என்று பெருமிதத்துடன் கூறினார்.** காவலர்களுடன் தூக்கு மேடைக்குச் செல்லுமுன் மூவரும் சிறை நடுக்குற இன்குலாப் ஜிந்தாபாத் என்று முழங்கினர், அரிமா வென தூக்குமேடை நோக்கி நடந்தனர். அதிகாரிகள் மூவரையும் தூக்கு மேடையில் நிறுத்தினர். முகத்தை மறைக்க கட்ட வந்த கருப்பு துணியை நிராகரித்தனர். எங்கள் நாட்டு மண்ணைப் பார்த்துக் கொண்டே உயிர் விடுவோம் என்றனர். பின் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் உடலைப் பெற்றோரிடம் ஒப்படைக்காமல் அதிகாரிகள் தாங்களே கொண்டு போய் பெரோஸ்பூர் அருகில் சட்லெஜ் நதிக்கரையில் எரித்து மிச்சத்தை ஆற்றில் இழுத்து விட்டுவிட்டனர். மறுநாள் செய்தி தெரிந்து மக்கள் வெள்ளம் எனக்கூடி சட்லெஜ் நதிக்கரையில் மிச்சமிருந்த அவர்கள் சாம்பலை எடுத்து வந்து ஊர்வலம் சென்றனர். கொதிக்கும் உள்ளத்தோடு. காந்தியடிகள் மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை பொய்த்துப் போய்விட்டதால் மக்கள் அவருக்கு எதிராகப் போர்க் கோலம் பூண்டனர். அவர் கராச்சி மாநாட்டிற்குச் செல்லும் வழிநெடுகிலும் மக்கள் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களும், எதிர்ப்பு முழக்கங்களும் செய்து அவரை வரவேற்றனர். **இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் காந்தியடிகள் சந்தித்த முதல் மக்கள் எதிர்ப்பு இதுவாகும் இளம் வயதில் மரணத்திற்கு அஞ்சாத உறுதியே வரலாற்று நோக்கில் ஒருவருக்கு சிறப்பிடத்தை தந்து விடாது. ஏனெனில் காந்திஜியைச் சுட்டுக் கொன்று தூக்குமேடையேறிய கோட்சேயும் கூட மரணத்திற்கு அஞ்சாத இளைஞன்தான். உயிரை துறப்பதாலல்ல, உயிரைத் துறப்பதற்கான நோக்கத்திலே தான் வீரமும், தியாகமும் அடங்கியிருக்கிறது. பகத்சிங் கின் நோக்கமும், இலட்சியமும்தான் அவரது மரணத்தை வரலாறாக்கியது. இளைஞர்களை புரட்சிகர அரசியலுக் குக் கவர்ந்திழுத்தது; இன்றளவும் கவர்ந்திழுக்கிறது.**

“இதந்தரு மனைநீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டுமாறி
பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந்தரு கோடியின்னல்
விளைந்தெமை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி – நின்னை
தொழுதிடல் மறக்கிலேனே!” – பாரதி

**அவரின் நினைவாலயம்**

இந்திய அரசு பாகிஸ்தான் வசம் போய்விட்ட பெரோஸ் பூரில் அந்த இடத்தை வாங்கி அங்கோர் நினைவாலயம் 1950இல் எழுப்பினர்..

சிறையில் பகத்சிங். கடவுள், மதம் போன்ற தத்துவத் தளங்களிலும் பகத்சிங்கின் பக்குவம் போற்றத்தக்கது. நான் ஏன் நாத்திகன் ஆனேன்? என்ற பகத்சிங்கின் புத்தகம் அதை நிரூபிக்கும்

சிறையில் பகத்சிங் எழுதிய மற்ற நூல்கள்: சோசலிசத்தின் கோட்பாடு, சுயமரியாதை, ஆகியவை. மதமும் சுதந்திரப் போராட்டமும், மதக்கலவரங்களும் தீர்வும், தீண்டாமைப் பிரச்சினைகள் போன்ற கட்டுரைகள் மிகவும் புகழ் பெற்றவை.

## கௌரி அம்மாள் மறைவு



தென்னிந்திய பொதுப்பணித்துறையின் கட்டிடப் பொறியியல் ஒப்பந்த நிறுவனங்களுள் ஒன்றான பெயர் பெற்ற மாணிக்கம் & கோ நிறுவுநரும், உரிமையாளருமான மறைந்த பொ. மாணிக்க ஆச்சாரியின் துணைவியாரும், ஜெயவேல், பழனி, சுகுமார், பத்மநாபன், நாகராசன், மல்லிகா, உஷா ஆகியோரின் தாயாருமான கௌரி அம்மாள் தம் 88ஆம் வயதில் சென்னை பட்டாளம் அவருடைய இல்லத்தில் 19.09.2017 செவ்வாய்க்கிழமை பிற்பகல் மறைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். பொ. மாணிக்க ஆச்சாரியும் அவருடைய மக்களும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை உடையவர்கள். 1980களில் திருவல்லிக்கேணியில், வெங்கட்ரங்கம் பிள்ளை தெருவில் எங்களுடைய அமைப்பின் தோழர் வழக்குரைஞர் துரை. இராம கிருட்டிணன் ஏற்பாட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது நேரில் வந்து அறிமுகப்படுத்திக் கொண்ட அன்னாருடைய மகன் பழனி நன்கொடையும் அளித்துச் சென்றார். அதைத்தொடர்ந்து, சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளிவரவும் அதையொட்டி ஆண்டுதோறும் நடைபெறும் மாநாடுகளுக்கும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகின்றார். கௌரி அம்மாள் மறைவுக்குப் பேரவையின் பொதுச்செயலாளர் கலசம், பொறிஞர் க.ச. சோதி வெங்கடாசலம், சோதி தனலட்சுமி, திருவல்லிக்கேணி பஞ்ச சக்தி கோ. விசுவநாதன் ஆகியோர் நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

**- வே.ஆனைமுத்து**

## பெரியார் – நாகம்மை நூலகர் இரா. மதியழகன் துணைவியார்

## ம. பழனியம்மாள் படத்திறப்பு

**தோழரிடம் துக்கம் உசாவல்**




அம்பத்தூரில் இயங்கிவரும் பெரியார் - நாகம்மை நூலகர் தோழர் இரா. மதியழகன், அவருடைய அன்புத் துணைவியார் ம. பழனியம்மாள், மூத்த மகன் மருத்துவர் ம. சேரன் ஆகியோர் 14.8.2017 அன்று இரவு பயணித்த மகிழுந்து சென்னை - திருச்சி சாலையில், தொழுதூர் அருகில் நேர்ச்சியில் சிக்கியது. கணவன், மனைவி இருவரும் படுகாயமுற்றனர். விழுப்புரம் அரசு மருத்துவமனையில் பழனியம்மாள் மறைவுற்றார். அன்னாரின் உடல் 15.8.2017 அன்று சொந்த ஊரான இரும்புலிக் குறிச்சியில் எரியூட்டப்பட்டது.

உடல்நலம் தேறிவரும் தோழர் இரா. மதியழகன் அவர்களை, அன்னாரின் சென்னை, வில்லிவாக்கம் இல்லத்தில் மா.பெ.பொ.க தோழர்கள் வே. ஆனைமுத்து, தி. துரை சித்தார்த்தன், முனைவர் ஆ. முத்தமிழ்ச் செல்வன், இரா.பகுத்தறிவாளன், கு. தொல்காப்பியன், சு. முருகவேல் ஆகியோர் 24.9.2017 அன்று இரவு 7 மணிக்கு நேரில் கண்டு அவருடைய அன்புத் துணைவியாரின் மறைவுக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொண்டனர்.

இத்துன்பமான நிலையிலும், மறைந்த தம் துணைவியார் பழனியம்மாளின் படத்திறப்பு விழா 21.8.2017இல் இரும்புலிக்குறிச்சியில் நடைபெற்றதை நினைவுகூரும் தன்மையில், சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு உருவா 3000 வழங்கினார். நன்றி.

**வாழ்க ! ம. பழனியம்மாள் புகழ் !**

## பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வீரமணி மறைவு



குன்னம் த. வீரமணி, மாவட்ட வருவாய் ஆர்வலர் (ஓய்வு), 21.8.2017 திங்கள் அன்று மறைவுற்றார். அவரை இழந்து வாடும் துணை மலர்விழிக்கும் மகன்கள் வினோத்குமார், கௌதமன் ஆகியோருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு**

# ஆர்.எஸ்.எஸ். - பாரதிய சனதா வரிந்துகட்டுகின்றனர்!
# 2019 தேர்தலில் எல்லா மாநிலங்களையும் கைப்பற்றத் திட்டம்

தற்போது பாரதிய சனதா பதினொரு மாநிலங்களில் தனித்து ஆட்சியில் இருக்கிறது; ஏழு மாநிலங்களில் கூட்டணி ஆட்சியில் இருக்கிறது. இந்த பதினெட்டு மாநிலங்கள் அன்றியும், மீதியுள்ள மாநிலங்களில் நடைபெறப் போகும் சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற எல்லா முயற்சிகளையும் இப்போதே இவை செய்கின்றன.

இதற்காக ஆர்.எஸ்.எஸ். - பா.ச.க. இடையிலான மூன்று நாள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 1, 2, 3 செப்டம்பரில், உத்தரப்பிரதேசத்தில், பிருந்தாவன் நகரில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு மூன்று நாளும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் தலைமை ஏற்றார். ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ச.க.வின் நாற்பது துணை அமைப்புகளும் இக்கூட்டத்தில் மூன்று நாளும் பங்கேற்றன.

மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி, உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மூத்த நிர்வாகிகளான பையாஜி ஜோஷி, தத்தாத்ரேய ஹொசபோலே, கிருஷ்ண கோபால், உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், விஸ்வ இந்து பரிஷத் அமைப்பின் பிரவீண் தொகாடியா ஆகியோர் பங்கேற்றனர்.

**முதல் நாள் அமர்வில் - ஜம்மு காஷ்மீர் அமைதி நிலவரம் குறித்து விவாதித்தனர். அங்கு இராணுவத்தின் மீது கல் எறியும் முயற்சி குறைக்கப்பட வேண்டும்; அதற்காக இளைஞர்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என்று பேசப்பட்டது.**

அதாவது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சிறப்பு உரிமைகள் பெற்ற மாநிலமென்பதை மாற்றுவதற்குத் திட்டமிடுகிறார்கள். இந்திய அரசமைப்புச் சட்டத்தில், விதி எண். 370, ஜம்மு-காஷ்மீருக்குச் சிறப்புரிமையை வழங்குகிறது.

அத்துடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், 35A விதியின்படி, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சொத்து வைத்துக் கொள்ளும் உரிமையும், அரசு வேலை பெறும் உரிமையும், ஜம்மு-காஷ்மீர் பூர்வீகக்குடிகளின் வாரிசுகளுக்கே உண்டு என்ற பாதுகாப்பு இருக்கிறது. இந்த 35A-இன்கீழ் உள்ள பாதுகாப்பையும் அடியோடு நீக்க வேண்டுமென்று ஆர்.எஸ்.எஸ்., பா.ச.க. இவை கருதுகின்றன.

இந்தச் சூழ்நிலையில், இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், செப்டம்பர் 10, 11, 12, 13 நான்கு நாள்கள் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்குப் பயணம் சென்று, ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு இதுபற்றியுள்ள அச்சத்தைப் போக்க முயற்சித்திருக்கிறார். மேலும், “ஜம்மு-காஷ்மீர் மக்கள் ஒத்துழைத்தால், ஜம்மு-காஷ்மீரைத் தேவலோகம் போல் மாற்றுவோம்” என்றும் வாக்குறுதி அளித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் நிலைமை இப்படியிருக்க, மேற்கு வங்காளத்தையும் கர்நாடகத்தையும் தமிழ்நாட்டையும் கேரளாவையும் குறிவைத்து, இந்த எல்லா மாநிலங்களிலும் வாக்குச்சாவடிதோறும் இப்போதே வாக்குச் சேகரிக்கும் பணியாள்களை அமர்த்த பாரதிய சனதா தலைவர் அமித்ஷா திட்டமிடுகின்றார்.

அதாவது, எடுத்துக்காட்டாக, வங்காளத்தில் 77,000 வாக்குச்சாவடிகளிலும் வாக்குச் சேகரிப்புப் பணியாளர்களை அமர்த்திடத் தீவிர முயற்சி செய்கின்றனர். இதுவரை, மேற்குவங்க பா.ச.க. கிளை மூலம் 18,000 வாக்குச்சாவடிகளுக்கு மட்டுமே பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். அதனால், அமித்ஷா போதிய முயற்சியெடுக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்.

**அதாவது, ஆர்.எஸ்.எஸ்.-பாரதிய சனதா இரண்டும் இந்தியாவில் இராம ராஜ்ஜியத்தை 2019இல் நிறுவுவதற்கு இப்போதே திட்டமிடுகின்றனர்.**

இவற்றை திராவிடர் இயக்கங்கள், தமிழ்த்தேசிய இயக்கங்கள், பொதுவுடைமைக் கட்சிகள் மற்றும் மார்க்சியப் பெரியாரிய அம்பேத்கரிய இயக்கங்கள் தீவிரமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

**- வே. ஆனைமுத்து**

# புதுதில்லியில் ஜே.என்.யு. பல்கலைக்கழகத்தில் பெரியார் பிறந்தநாள் விழா



புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் (துசூரு) பெரியார் 139ஆவது பிறந்தநாள் விழா தேசிய இனங்கள் விடுதலைக் குறித்தும் கருத்தரங்கம் நடைபெற்றது. ஞான.அலோசியஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாணவர்களின் கேள்விக்குக் சிறப்பான முறையில் விடையளித்தார். நான்கு மணிநேரம் நிகழ்ச்சி நடைபெற்றது.

**கட்டுரைத் தொடர்-53**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1938இல் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக, தமிழக அரசியல் தளத்தில் மாபெரும் திருப்புமுனை ஏற்பட்டது. இனி இந்தியாவுடன் தொடர்ந்து இருக்கக்கூடாது என்பதே அது. அதை வலியுறுத்தி ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று விடுதலை ஏட்டில் அய்ந்து தொடர் கட்டுரைகள் எழுதப்பட்டன.

**தமிழ்நாடு தமிழருக்கே! - IV**

''தமிழ்நாடு தமிழருக்கே'' என்னும் தலைப்பில் இதற்குமுன் மூன்று தலையங்கங்கள் எழுதி இருப்பது டன், அடுத்தபடி ஆரிய திராவிட சமய சம்பந்தமாக எழுதப்படும் என்று நேற்றைய தலையங்க முடிவில் குறித்திருந்தோம்.

அந்தப்படி இன்றைய தலைங்கத்தின் கீழ் ஆரிய திராவிட சமயங்கள் என்ன? சமய ஆதாரங்கள் என்ன? என்பவைகளைப் பற்றி எழுதப்புகுகின்றோம். இப்படி எழுதுவதில் நாம் பெரிதும் தற்காலம் பிரத்தியட்ச அனு பவத்தில் உள்ளனவற்றையே பெரிதும் ஆதாரமாய்க் கொண்டு எழுதுகிறோமே ஒழிய, நூல் ஆராய்ச்சியை அடிப்படையாய்க் கொண்டே எழுதப்புக வில்லை. அவ்வாராய்ச்சி விஷயங்களைப் பண்டிதர் களுக்கு விட்டு விடுவோம். இன்றையப் பிரத்தியட்ச காட்சிக்கும் கருத் துக்கும் ஆதாரங்களோ ஆராய்ச்சிகளோ விரோதமாய் இருக்குமானால் அதற்கேற்றபடியாகிலும் அனுபவத்தை மாற்றிக்கொள்ளவாவது நாம் எழுதுவது பயன் பட்டும் என்று கருதியே இதில் தலையிடுகிறோம்.

**இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் சமயத் துறையில் ஏற்பட்ட கேடுகள்தான் பெரிதும் ஆரியர்களுக்கு இந்நாட்டில் ஆதிக்கம் வளர்ந்து நிலைத்திருப்பதற்குக் காரணம் என்றும், அதுவே தான் திராவிடர் வீழ்ச்சிக்கும் காரணம் என்றும் நாம் கருதுகிறோம். ஆதலால் ஆரிய, திராவிட சமய சம்பந்தமான காரணங்கள் மக்களுக்கு விளங்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.**

**திராவிட சமயம்**

திராவிடர்க்கு ஆதியில் என்ன சமயம் என்பது திட்டமாய் விவகாரத்திற்கு இடமில்லாமல் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாய் இருந்தாலும், திராவிடருக்கு முன் பின் பிறவியோ, பிறவியின் பயனாக மேல்-கீழ் சாதியோ, சாதிக்கேற்ற உலகமோ, விக்கிரக உருவமோ, பல கடவுள்களோ, அக்கடவுள்களின் முகத்திலோ, காலிலோ மக்கள் தோன்றியதோ முதலான கோட்பாடுகள் இருந் தாகத் தெரியவில்லை. ஆகவே, அவற்றைப் பொறுத்த வரை அவை சம்பந்தமான சமயமும் கடவுள்களும் சமய நூல்களும் திராவிடருக்கு உடன்பாடானவை அல்ல என்பதும் உறுதியான உண்மையாகும்.



**இந்த உறுதியை வைத்துக் கொண்டு பார்த்தால் பெரியார் முகம்மது நபி பெருமான் அவர்கள் கடவுளைப் பற்றியும், சமுதாயத் தைப் பற்றியும் கூறியுள்ள கருத்து களே தமிழர் கடவுளுக்கும் சமு தாயத்துக்கும் பொருத்தமான தென நினைக்கலாம். நபி அவர் கள் கடவுளுக்கு உருவம் இல்லை, பெயர் இல்லை என்று சொன்னதோடு (நாணயம் இல்லையென்றும் இணையே வைக்கக்கூடாது என்றும் நிர்ப்பந்தமான திட்டம் செய்திருப்பதோடு அப்படி யாராவது உருவம், இணை முதலியவை கற்பித்தால் அப்படிப் பட்டவர்கள் கடவுள் கொள்கைக்கு மாறானவர்களாவர்கள் என்றும், இஸ்லாமானவர்களாக மாட்டார்களென்றும் கண்டித்துக் கூறியிருக்கிறார்கள்.**

**ஆகையால், திராவிடர்கள் கடவுளுக்கு உருவம் இல்லை; இணை இல்லை என்ற அளவாவது ஒப்புக் கொள்வார்களே ஆனால், இன்று பெரும்பாகமான திராவிடர்கள் அனுஷ்டிக்கும் கடவுள் கொள்கைகள் தப்பானதென்றே உணருவார்கள். தப்பானதென்று சொல்லுவது மாத்திரமல்லாமல் திராவிடர்கள் இந்தத் தப்பான கொள்கையாலேயே ஆரியர்களுக்கு சர்வத்திலும் அடிமைப்பட நேர்ந்தது என்றும் சுலபத்தில் உணருவார்கள்.**

ஏனெனில், இன்று திராவிடர்கள்மீது சுமத்தப்பட்டிருப்பதும், பெரும்பான்மை திராவிட மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஆரிய மதமாகிய இந்துமதம் என்று சொல்லப்படுவ தேயாகும். அதுபோலவே திராவிடர்கள் கடவுள்களும் இந்துமதக் கடவுள்களேயாகும். சமுதாயத்துறையிலும் திராவிடர்கள் பின்பற்றுவது இந்துசமய முறையேயாகும்.

**இந்துமதம்**

உண்மையில் வெளிப்படையாக மனம் திறந்து பேசவேண்டுமானால் இந்துமதம் என்பதாக ஒரு மதமே இருந்ததில்லை என்பதோடு இருக்கிறதாகச் சொல்லுவ தற்கும் வகை இல்லை. ஆனால், பின் எப்படி இந்துமதம் என்று ஒரு சொல் இருந்து வருகிறது என்றால் ஆரியர்களு டைய மேன்மைக்கு ஆகவும், அவர்கள் மற்ற மக்களை அந்தகாரத்தில் வைத்துத் தங்களுக்கு அனுகூலமாக ஆண்டு கொள்வதற்கு ஆகவும், மற்றும் திராவிடர்களை சமயம்போல்-சௌகரியம்போல் பயன்படுத்திக் கொள் வதற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட சில சூழ்ச்சி முறை களே இன்று இந்துமதமாய் இருக்கிறது.

ஏனெனில் இந்துமதம் என்கின்ற வார்த்தையே ஆரியர்களுக்குள்ளாகவாவது எப்போதாவது இருந்து

வந்ததாகச் சொல்வதற்கு இல்லை. ஆரிய சம்பந்தமான எந்தப் பழைய ஆதாரங்களிலும், அவர்கள் சமயாதாரமாக சமீபகாலம் வரை ஏற்படுத்திக்கொண்ட எந்த ஆதாரங் களிலும் கூட இந்துமதம் என்கின்ற வார்த்தை இருந்தாகத் தெரியவில்லை.

அன்றியும் இந்துமதம் என்றால் என்ன? அதன் கொள்கை என்ன? என்று நிர்ணயித்துச் சொல்லக் கூடியதாகவும் ஒன்றும் இல்லை. எப்படிப்பட்டவன் இந்து? எப்படிப்பட்டவன் இந்து அல்லாவதன்? என்று சொல்லு வதற்கும் ஒரு நியதி இல்லை. இந்தியாவில் உள்ள முகமதியனையோ, ஒரு கிறிஸ்தவனையோ, ஒரு பார்சியையோ, சீக்கியனையோ, ஒரு பிரமசமாஜக் காரனையோ, ஒரு மதமும் ஒரு கடவுளும் இல்லாத பகுத்தறிவு வாதியையோ இந்து அல்லாதவன் என்று சொல்ல ஒரு ஆதாரமும் இல்லை. இந்துமதம் என்று சொல்ல இன்று ஒரே ஒரு ஆதாரம்தான் அனுபவத்தில் பயன்பட்டு வருகிறது. அதாவது, ஆரியர்கள் மேன்மைக் கும் அவர்களது நலனுக்கும் மாறாகப் பேசுவதும் இருப்பதும் எல்லாம்தான் இன்று இந்து மதமல்லாததாய் இருக்கிறதே தவிர, இந்துமதம் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட கொள்கையும் திட்டமும் இல்லை. ஆரியர்களின் மேன் மையையும் அவர்களது மேன்மைக்கு ஆதரவான ஆதாரங்களையும் குறித்து வாதம்புரியாமல் ஒருவன் கடவுளே இல்லை; வேதங்கள் பொய்; சாஸ்திரங்கள் பொய்; புராணங்கள் பொய் என்று சொன்னாலும் கூட "அவர் ஒரு பெரிய வேதாந்தி அல்லது ஒரு துறவி" என்று சொல்லப் பட்டு விடுவான்.

ஆனால், சாதி ஏது, பார்ப்பான் ஏது, பறையன் ஏது, எல்லாம் பித்தலாட்டம் என்றும், கடவுள் பேரால் மதத்தின் பேரால் ஆரியர்கள் மக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள் என்றும் சொல்லிவிட்டால், அவன் எப்படிப்பட்ட பக்திமானா னாலும் நாத்திகனாய் விடுவான்.

### ஆராய்ச்சி முடிவு

பொதுவாகவே, இந்துமதம் என்பது பற்றிய பல ஆராய்ச்சிக்காரர்கள் அப்படி ஒரு மதமே இல்லை என்று முடிவு கட்டி மெய்ப்பித்து இருக்கிறார்கள். இந்துமதம் என்பதாக ஒருமதம் இல்லை என்ற ஐரோப்பியர் களாலும், இந்நாட்டுப் பெரும் புலவர்களாலும் எழுதப்பட்ட ஆராய்ச்சிப் புத்தகங்கள் எத்தனையோ இன்றும் இருக்கின்றன.

இந்து என்கின்ற வார்த்தையே திருடன், அயோக்கியன், தொல்லை கொடுப்பவன், நம்பிக்கைத் துரோகக்காரன், அடிமை-கூலிக் காட்டுமிராண்டிகள் என்கிறதான கருத்து களைக் கொடுப்பது என்று பல பாஷைகளில் பரிச்சயமுள்ள அநேகர் எழுதி இருப்பதோடு இதை மெய்ப்பிக்க இன்னும் பல இங்கிலீஷ் அகராதிகள் இருக்கின்றன.

பொதுவாகவே, இந்துமதம் என்றால் ஆரியர் கொள்கை என்றும் புரோகித சமயம் என்றும் பார்ப்பனர்களை உயர்வாய்க் கொண்டதென்றும்; இந்து என்றால் பார்ப்ப னர்களைப் பின்பற்றுகிறவன் என்றும்; விந்தியமலைக்கு வடக்கே உள்ள மக்களைக் குறிப்பதென்றும்; ஆதிகால மனிதத் தன்மையைக் குறிப்பிடுவதென்றும்; அதிராதி களிலும் சகல கலாநிதி என்னும் பழங்காலம் முதல் நாளது வரையில் ஆராய்ச்சி செய்த அறிவு நூல்களிலும் பார்க்கக் காணலாம்.

### திராவிடர் இந்துக்களா?

அவை எப்படியோ இருக்கட்டும். நாம் இன்று அம்மாதிரியான ஆராய்ச்சியில் புகவில்லை. ஆனால் திராவிட மக்கள் பிறவியில் சாதி பேதத்தையும், பல கடவுள் களையும், உருவ வழிபாட்டையும் கொண்ட 'இந்து' மதத்தில் சேர்ந்தவர்கள் ஆவார்களா என்பதே நமது பிரச்சினையாகும்.

திராவிட நாட்டில் உள்ள வைணவர்கள் "நாங்கள் ஆரியக்கடவுளை வணங்குகிறவர்கள் அல்ல, திராவிடக் கடவுளாகிய திருமாலை வணங்குகிறவர்கள் என்றும், திராவிடக்கடவுளாகிய சிவனை வணங்குகிறவர்கள்" என்றும் மற்றும் சிலர் "நாங்கள் சிவனையும் திருமா லையும் கூட வணங்குகிறவர்கள் அல்ல, முருகன் என்கின்ற இயற்கை அழகையும் இளமையையும் வலிவையும் குணமாகக் கொண்ட இயற்கையை வணங்கு கிறவர்கள் என்றும், சிலர் "எந்த குணத்தையும் குறியாய்க் கொண்டு வணங்குகிறவர் அல்ல 'கந்தழி' என்கின்ற உருவகம் குணம் இல்லாத தூய்மையின் தன்மையை வணங்குகிறவர்கள்" என்றும் பல மாதிரி நம்மால் புரிந்து கொள்ள முடியாத விஷயங்களை, ஏன் அவர்களுக்குமே சிலருக்குப் புரிந்திராத விஷயங்களை அந்தந்தச் சமயத்தவர்களிலேயே ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமாக வாயில் சொல்லலாம்:

ஆனால், திராவிடத்தில் உள்ள மக்களில் கடவுள் வழிபாடுடையவர்களான பெரும்பான்மையோரும் தங்கள் வழிபாட்டை எப்படி நடத்துகிறார்கள் என்பதி லிருந்துதான் திராவிடர்கள் திராவிட சமயத்தவராய், திராவிடத் தத்துவ கடவுள் வழிபாடுடையவர்களாய், அதற்கு ஏற்ற ஆதார நூல்களுடையவர்களாய் இருக்கிறார்களா என்று பார்க்க ஆசைப்படுகிறோம். இன்று பிரத்தியட்சத்தில் வைணவர்கள், சைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் பெரும்பாலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கின்ற மும்மூர்த்திகளையும் அவைகளுக்கு ஆரியக் கற்பனைப்படி உருவமும் குணமும், பெண்டு பிள்ளை வாழ்க்கைத் தன்மைகளுடன்தான் வணங்கி வருகிறார்கள். ஆனால், விவகாரம் வரும்போது காந்தியார் பேசுவதுபோல் - அதாவது, எப்படி "என் வருணாச்சிரமம் வேறு" "என் இராமன் வேறு" "என் இந்து மதம் வேறு" என்று சொல்லி தப்பித்துக் கொண்டு காரியத்தில் மனுதர்ம வருணாச்சிரமத்தையும், இராமாயண இராமனையும், ஆரிய மேன்மைக்கு உரித்தான இந்து மதத்தையும் நிலைநிறுத்தத்தக்க வண்ணமே நடந்து வருகிறாரோ அது போல், ஆரியக் கற்பனையான பிரமா, விஷ்ணு சிவன்களைத் தான் திராவிடர்கள் சேர்ந்தோ தனித்தோ வணங்கி வருகிறார்கள். திராவிடர்களை ஆரியர்களுக்கு அடிமை யாக ஆக்கி அவர்களிடமிருந்து தப்பித்து

வரமுடியாதபடி திராவிடர்களைப் பிணைத்திருப்பது இந்து மதத்தைவிட இந்துமத ஆரியக் கடவுள்களேயாகும்.

**நம் பண்டிதர்கள்**

நம் பண்டிதர்கள் பெரும்பாலும் கடவுள் சமயம் ஆகியவற்றில் பண்டிதர்களாக இருக்கிறார்களே ஒழிய பொது அறிவியல், இயற்கை அறிவில், இயற்கை சக்தியில் பாண்டித்யம் பெற்ற பண்டிதர்கள் வெகு அருமையாய் இருக்கிறார்கள். ஆரியக் கடவுள்களுக்கும் சமயத்திற்கும் ஆக்கம் அளித்து திராவிடர்களை ஆரியர்க்கடிமையாக்கியவர்கள் நம் சைவ, வைணவ சமயப் பண்டிதர்கள்தான் என்றால் அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது என்றுதான் கேட்டுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஏனெனில் ஆரியக் கடவுள்கள் சம்பந்தமான திராவிட பாஷை நூல்கள் எல்லாம் உண்டாக்கியவர்கள். பரப்பினவர்கள், பிரசாரம் செய்தவர்கள், இன்றும் செய்பவர்கள் நம் பண்டிதர்களேயாவார்கள்.

திராவிட மக்கள் 100க்கு 95 பேர்கள் கல்வி அறிவில்லாதவர்கள்-எழுத்து வாசனை அற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களிடம் சமயத்தையும் கடவுளையும் பற்றிப் பேசும்போதும் இவர்கள் அறியும்படி சமயக்கதைகள், சமயப் பெரியார்கள் கதைகள், கடவுள் கதைகள் எழுதிப் பிரசங்கம் செய்தால்தான் - கடவுளுக்கு பெண்டு பிள்ளை வைப்பாட்டி கற்பித்து சாதம் நகை படைத்து கல்யாணம் உற்சவம், பூசை, அபிஷேகம் ஆகியவைகள் செய்தும் காட்டினால்தான் புரியும் என்று சொன்னால், இது அறிவுள்ள அல்லது திராவிட இரத்தக் கலப்பில்லாத, தனித் தமிழ் மகன் கூற்று என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கவேண்டி இருக்கிறது.

முஸ்லிம்களுக்கு ஒரு சமயம் இருக்கிறது கடவுளும் இருக்கிறது. அந்த முஸ்லிம்களும் 100-க்கு சுமார் 90 பேர்கள் எழுத்து வாசனை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு சமய உணர்ச்சியும் கடவுளுணர்ச்சியும் வருவதற்கு இப்படித்தான் செய்கிறார்களா? அப்படிச் செய்யாததால் அவர்களுக்கு கடவுள் உணர்ச்சியும் மத உணர்ச்சியும், மனிதத்தன்மை உணர்ச்சியும் இல்லை என்று யாராவது சொல்லக்கூடுமா? இப்போதைய உணர்ச்சி முஸ்லிம்கள் பெற்றதற்குக் கடவுளுக்கு பெண்டுபிள்ளை, வைப்பாட்டி, சோறு, சாறு, அபிஷேகம், கல்யாணம், உற்சவம் செய்தும் அது சம்பந்தமான கதைகள் எழுதிப்படிக்கச் செய்தும்தான் அவர்கள் உணர்ச்சி பெற்றார்களா? என்பதை யோசித்தால் அப்படிச் சொல்லுகிறவர்கள் எண்ணம் சுத்தமானதா? அசுத்தமானதா? என்பது விளங்காமல் போகாது.

**ஆரியர்களிடமிருந்தும், அவர்களுக்கு அனுகூலமானதும் நமக்குக் கேடானதுமான அவர்களுடைய சமயம், கடவுள்கள் ஆகியவைகளிடமிருந்தும் திராவிட மக்கள் பிரிக்கப்பட்டால் ஒழிய ஆரியர்களுக்கு அடிமைப்பட்ட திராவிடர்களது மானமும் அறிவும் ஆத்மார்த்தப் போலி உணர்ச்சியும் விடுபடாதென்ற காரணத்திற்காகவே இவைகளைக் கூறுகிறோம்.**

ஆகையால்தான் சைவ வைணவப் பண்டிதர்கள் தங்கள் சுயநலத்தையே பிரதானமாகப் பாராமல் மக்கள் நலத்தைச் சிறிதாவது கருதிப் பாமர மக்களின் அறிவின்மையையும் மூடப்பக்தியையும் போக்க முயலவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். தங்களின் குரங்குப்பிடியான, 'சமயம் போனால் பண்டிதத் தன்மையே போய்விடும்' என்றும் வாழ்க்கை போய்விடும் என்றும் சிலர் பயப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

இது இப்பண்டிதர்களின் பாமரத் தன்மையேயாகும். ஷேக்ஸ்பியரும், ஷெல்லியும், பர்னாட்ஷாவும், வெல்சும், வில்சனும் புராணங்களுக்குப் பொழிப்புரையும் கருத்துரையும் புதுஉரையும் எழுதித்தானா வாழ்ந்தார்கள் - வாழ்கிறார்கள்-உலகில் விளம்பரமானார்கள்- என்பதையே சிந்தித்துப் பார்க்க இப்பண்டிதர்களை வேண்டுகிறோம். ஏன் நாம் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் திராவிடர்களை ஆரியருக்கு அடிமையாக்கினதில் நம் பண்டிதர்களுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. இப்போது அவர்களை மீட்க வேண்டிய பொறுப்பும் சக்தியும் நம் பண்டிதர்களிடம் தான் இருக்கிறது என்பதை நாம் உணருவதாலேயாகும். மற்றொருபுறம் அது முடியவில்லையானால் ஆரியர்களுடனும் அவர்களது ஆயுதங்களுடனும் போராடுவது போலவே இப்பண்டிதர்களுடனும், போராட வேண்டிய தொல்லையும் ஏற்பட்டுவிடுமே என்கிற பயத்தினாலேயுமாகும்.

ஆகவே, பண்டிதர்கள் திராவிடர்களுடைய சமயம் இன்னது, அவர்களுடைய கடவுள் இன்னது, அவற்றின் கோட்பாடு இன்னது என்று துலக்கமாக வரையறுத்துவிட வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம். அதற்கு ஏற்ற கலைகளையே உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம். இது விஷயமாகப் பல திராவிடப் பண்டிதர்கள் நம் கருத்துக்கு அனுகூலமாகச் சொல்லி இருக்கும் பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன என்றாலும் அவைகளைச் சமயம் வரும்போது வெளிப்படுத்திக்கொள்ளுகிறோம். இன்றைய சமய ஆசையெல்லாம் நாம் பரிசுத்தமாக ஆரியர்கள் சமய கடவுள்கள் அவற்றின் கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து பிரிந்து கொள்ளவேண்டும் என்பதே அல்லாமல் வேறொன்றும் இல்லை என்பதைப் பண்டிதர்கள் நம்பவேண்டுமென்று மறுபடியும் வேண்டிக் கொள்கிறோம்.

**அரசியலில் நமது நாடு ஆரியர்களிடமிருந்து பிரிந்து கொள்ள பிரிட்டிஷார் தயவு எப்படி வேண்டி இருக்கிறதோ அப்படியே சமயம், கடவுள், சமுதாயம் ஆகியவைகளிலும் நமது நாடு ஆரியர்களிடம் இருந்து பிரிந்துகொள்ள நம் பண்டிதர்களுடைய தயவு வேண்டி இருக்கிறது.**

நிற்க, திராவிடர் பூரண விடுதலை அடைகிறவரை மானமே மதமாகவும், அறிவே கடவுளாகவும், அதற்கு ஆன ஆராய்ச்சியே பிரார்த்தனையாகவும் இருக்க வேண்டும்.

பிறகு, எந்தச் சமயமானாலும் எந்தக் கடவுளானாலும் எப்படிப்பட்ட பிரார்த்தனையானாலும் வைத்துக் கொள்ளலாம்; அவை திராவிடனை ஒன்றும் செய்துவிடாது.

வியாதியஸ்தனாக, ஜெயில்கைதியாக, கவிழப் போகும் இரயிலில் பிரயாணக்காரனாக, முழுகப்போகும்

கப்பலில் பயணக்காரனாக, சண்டையில் போர் வீரனாக இருக்கிற காலங்களில் எப்படிச் சிற்சில நித்தியவாடிக் கைகளையும் பற்றுக்கோடான எண்ணங்களையும், சில ஆச்சார அனுஷ்டானங்களையும் இலட்சியம் செய்யா மலும் ஒத்திவைத்தும் நடந்து கொள்கிறோமோ அதுபோல் திராவிடமும் திராவிடரும் விடுதலை பெறுகிறவரை அவைகளில் சிலவற்றை ஒத்திவைத்து அல்லது சிறிது தளர்த்தி விட்டு விடுதலையில் கவலை கொள்ள வேண்டு மென்று முஸ்லிம், கிறிஸ்தவர்கள் உள்பட எல்லா திராவிட மக்களையும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

**மற்ற சமயக்காரர்**

கிறித்தவ சமய உணர்ச்சியையும் முஸ்லிம்கள் சமய உணர்ச்சியையும் பார்த்தாவது திராவிடர்கள் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ சமய உணர்ச்சி கிறித்தவர்களை இன்று உலகப் பார்வை யில் எவ்வளவு உயர்நிலையை அடையச் செய்திருக் கிறது! அதுபோலவே இஸ்லாமியர்களை அவர்களது சமய உணர்ச்சி உலகத்திற்கு முன்பு எவ்வளவு மேன்மை நிலையை அடையச் செய்திருக்கிறது! ஜப்பானியர்களின் சமய உணர்ச்சி உலகத்தின் முன்பு அவர்களை எவ்வளவு மேல் நிலையை அடையச் செய்திருக்கிறது என்பவைகளை திராவிட மக்களில் பண்டிதர்களும் பாமரர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்களது சமயங்களை இச்சமூகத்தார் எழுத்து, கமா, புள்ளி தவறாமல் பின்பற்றி இருந்தால் இவர்களும் திராவிடர் களைவிட மிகக் கேவலமான நிலையில்தான் இருந்திருப் பார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நாட்டார் - சமூகத்தார் மானத்தோடும் மேன்மையாயும் மற்றவர்க்கு எவ்விதத்திலும் அடிமைகளாய், எத்துறையி லும் தாழ்மையாய் இல்லாமலும் வாழவேண்டும் என்பதையே சமயமாய்க் கொண்டு மற்றதையெல்லாம் கொஞ்சம் தியாகம் செய்து முயற்சித்து வந்திருக்கிறார்கள். அதனாலேயே இன்று அவர்கள் தனித் தனி மானமுள்ள சமூகமாக சுதந்திரர்களாக வாழுகிறார்கள்.

எல்லோரும் கிறிஸ்தவர்களாகவே வாழும் மேல் நாட்டில் பைபிளுக்கு கருத்துரையும் புது வியாக்கியானமும் எழுதிக்கொண்டு அதன்படியேதான் நடந்துதீர வேண்டும் என்று கிறிஸ்தவப் பண்டிதர்களோ பாதிரிமார்களோ செய்து வந்திருப்பார்களேயானால் இன்று கிறிஸ்தவர் களில் ஒருவருக்காவது வாயில் பற்களே இருந்திருக்காது. இடுப்பில் துணியே இருந்திருக்காது. ஏனெனில் அவர் களது சமயம் ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தை யும் திருப்பிக் காட்டச் சொல்லுகிறது. மேல் வேஷ்டியை கேட்டால் இடுப்பு வேஷ்டியையும் அவிழ்த்துக் கொடுக்கச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட சமயக்காரர்கள் இன்று அவரவர்கள் நாட்டையும் அன்னியர் நாட்டையும் ஆளு கிறார்கள். உலக நாகரிகத்துக்கும் அற்புதங்களைக் கண்டுபிடிப் பதற்கும் வழிகாட்டிகளாய், வாத்தியார்களாய் இருக்கிறார்கள். மேல்நாட்டில் நித்திய வாழ்க்கையில், வாழ்க்கை நடவடிக்கையில் சிறிதுகூட சங்கடமோ தாட்சணியமோ மனக்கசப்போ ஏற்படுவதற்கு இல்லாத மாதிரியில் திட்டங்கள் வகுத்துக்கொண்டு சுதந்தர வாழ்க்கை வாழ்கின்றார்கள். வாழ்க்கையின் சகல படிகளுக்கும் திட்டம் வகுத்து கடிகாரம் நடப்பதுபோல் நடந்து கொள்ளுகிறார்கள்.

அதுபோலவே இஸ்லாமியரும் குரானுக்கு வியாக்கி யானம் செய்து கொண்டு தாடி எத்தனை அங்குலம், தலைமயிர் எப்படி, குல்லா எப்படி, சட்டை எப்படி என்பதைத் துருவிக் கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு எப்பிடியிருந்தால் மனிதனாக வாழலாம் என்பதில் கவலைகொண்டு துருக்கி, ஆப்கானிஸ்தானம், பர்ஷியா ஈஜிப்ட் முதலிய நாடுகள் மற்ற சமூகத்திற்கு அடிமையாகாமல் நாடு வாரியாய்ச் சுதந்தரத்தோடு வாழுகிறார்கள். இந்தியா விலும் ஒரு "தாடி இல்லாத இஸ்லாமே" தலைவராய் இருந்து தாங்கள் மைனாரிட்டியென்று சொல்லிக் கொள்ளக் கூடிய பயம் இல்லாமல் சுதந்தரத்தோடு தன் மானத்தோடு வாழ நிபந்தனை விதிக்க மற்றவர்கள் திகைக்கச் செய்ய வசதியோடு இருக்கிறார்கள்.

அதுபோலவே ஜப்பான்காரரும் திராவிடத்தைவிட சிறிய நாடாயும் திராவிடர்களைவிடக் குறைந்த ஜனத் தொகை கொண்ட சமூகமாகயும் இருந்தும் இன்று தனி அரசாங்க உலக வல்லரசுகளில் ஒன்றாக இருந்து கொண்டு தனக்கு நாற்புறமும் அதைவிட 3 பங்கு 4 பங்கு விஸ்தீரணமும் ஜனத்தொகையும் கொண்டதாக உள்ள நாடுகளை விரட்டி நடுக்கிக்கொண்டு சகல துறைகளிலும் முன்னேறிக் கொண்டு வருகிறது. ஒருபுறம் 18 கோடி ஜனமும், 81 லட்சம் மைல் விஸ்தீரணமும் கொண்ட ரஷியாவும், மற்றொருபுறம் 12 கோடி ஜனத்தொகை கொண்டு இரண்டு அமெரிக்கா கண்டமும், மற்றொருபுறம் 45 கோடி மக்களுக்கும் பல தேசத்துக்கும் கண்டத்துக்கும் சக்கரவர்த்தியாய் இருக்கும் பிரிட்டனும், தன்னை அடுத்தாற்போல் 45 கோடி ஜனத்தொகையும் பரந்த நாடும் கொண்ட சைனாவும் எதிரிகளாக இருக்க சிறிதும் பயமில்லாமல் தலை நிமிர்ந்து நடக்கிறது; தற்காப்பில் வல்லரசாய் இருக்கிறது. இப்படிப்பட்ட இந்த நாடு தங்கள் சமயமாகிய புத்தர் சொன்ன அஹிம்சையைப் பிடித்துக் கொண்டு ஜாதகக் கதைகளுக்குப் புது உரை எழுதிக் கொண்டு சின்னத்தோடு இருந்திருக்குமானால் அதன் கதி என்னவாயிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. அப்படி இருக்க திராவிடம் இவைகளைப் பார்த்துப் படிக்க வேண்டியவைகளைப் படித்துக்கொள்ள வேண்டாமா என்று யோசித்துப் பார்க்கும்படி மறுபடியும் பண்டிதர்களையும் பாமர மக்களையும் வேண்டிக் கொள்ளுகிறோம். இம்மாதிரியான ஒரு திராவிடர், ஆரியர் உணர்ச்சி என்று ஒன்று ஏற்பட்டிருக்கவில்லையானால் இப் பண்டிதர்கள் கதிதான் என்னாகி இருக்கும் என்பதையும் தயவு செய்து சிறிது சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொண்டு இதை முடிக்கிறோம்.

இனி அடுத்த தலையகத்தில் ஆரியர் சமயம் என்பது பற்றி விளக்குவோம்.

**(விடுதலை : 24-11-1939)**

**- தொடரும்**

# செல்வி அனிதா

**சி. பெரியசாமி,** து.பொ.செ., மா.பெ.பொ.க.

**தா**ய் இல்லாப் பெண்ணும், வேலி இல்லாப் பயிரும் விளங்குவது அரிது எனக் கூறுவர். செல்வி அனிதாவின் தாய் அருகில் இருந்திருந்தால் அனிதாவின் உயிருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இராமநாதபுரத்திற்கு அடுத்து வளமற்ற மாவட்டம் அரியலூர். இந்த அரிய லூரில் செந்துறை வட்டத்தில் உள்ள குழுமூர் என்ற சிற்றூரில் பிறந்து வளர்ந்த செல்வி அனிதா இந்துமதச் சமுதாயச் சேற்றில் மலர்ந்த செந்தாமரை!

17ஆம் வயதிலேயே "புகழெனின் உயிரும் கொடுக்குவர்" என்பதற்காகவா நீ உயிரை மாய்த்தாய்! அல்லது உன் உயிரைக் கொடுத்தாவது இனி வருங் காலங்களில் இந்த 'நீட்' தேர்வும், அதற்குக் காரண மானவர்களும் ஒழிக்கப்பட வேண்டும். அதற்கு இந்தத் தமிழ் மக்கள் பாடுபடுவார்கள் என எண்ணி உன் உயிரை மாய்த்தாயோ?

இந்தப் படிப்பு இல்லை என்றால், வேறொரு படிப்பு. இந்த நாட்டில் இல்லை என்றால் இங்கிலாந்தில், அமெரிக் காவில் என்று செல்லும் சமுதாய, அரசியல், பொருளாதார வாய்ப்பும், வசதியும் பெற்ற வீட்டில் பிறக்கவில்லையே என்ற ஏக்கத்தில் உயிரை மாய்த்துக் கொண்டாயா?

கல்வி மாநில அதிகாரத்தில் இருந்ததை இந்திரா காந்தி என்ற 'சர்வாதிகாரி' பறித்து 42 ஆண்டுகள் ஆகியும், தமிழர் எவரும் எதிர்த்து மூச்சுவிடவில்லை - போராடித் திரும்பப் பெறவில்லை. அனிதா நீ உயிரையே மாய்த்துக் கொண்டபின் ஊளைச் சத்தம் கேட்கிறது! எதற்காக? ஓட்டுக்காக! ஓட்டுக்காக மட்டுமே! ஓட்டுப் பெற்றுப் பதவி பெற்றுக் கோடி, கோடியாய் பணத்தைக் குவிக்கவே இந்த ஊளைச்சத்தம்! அனிதா இந்தச் சத்தம் உனக்காக அல்ல! உன் இறுதி ஊர்வலத்தில், உன் உடல் மீதில் பூசப்பட்ட கட்சிச் சாயம் நீயே ஏற்றுக் கொண்டதுதானா?

இந்த 'நீட்' தேர்வுக்கு முன்பு மருத்துவம் படித்த மருத்துவர்கள் எல்லாம் மண்ணாங்கட்டிகளா? அவர் கள் நல்ல மருத்துவர்கள் இல்லையா? இந்த 'நீட்' தேர்வு மட்டுமே தகுதி என்றால் +2 வரை படித்த படிப்புக்கு என்ன மதிப்பு? ஏன் படிக்க வேண்டும்? சரஸ்வதி கடாட்சத்தாலோ அல்லது சில இலட்சங்களை அள்ளி வீசினாலோ இந்த +2 தேர்வில் வெற்றி பெறத் தகுதி, திறமை இல்லாதவர்களையா இந்தப் பாரத மாதா பெற்றிருக்கிறாள்?

இந்து மதத்தில் உள்ள அடுக்குமுறை சாதி போல
படிப்பிலும் பல அடுக்குமுறை ஏன்?
பலவிதப் பாடத் திட்டங்கள் ஏன்?
இவைகள் ஒரே நாளில் ஒழிக்கப்பட வேண்டாமா?

மொழிப்பாடம், மாநில வரலாற்றுப் பாடம் தவிர பிற பாடங்களான கணக்கு, அறிவியல் பாடங்கள் உலகுக்கே ஒன்றுதானே! பிறகு ஏன் அப்படி உலகத் தரம் வாய்ந்த பாடத்திட்டத்தை நம் நாடு முழுவதும் வைக்கவில்லை? அப்படி இருந்திருந்தால் அதிலும் நீ முதல் மாணவியாக வந்திருப்பாயே!



**அய்ரோப்பிய நாடுகளில், அமெரிக்காவில் மிகப் பெரும்பாலான பள்ளிகள் அரசுப் பள்ளிகளே! ஒரே தரம், வசதி கொண்ட பள்ளிகளே! தாய் மொழியிலேயே கட்டாயக் கல்வியாம் - பிள்ளை களைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்களுக்குத் தண்டனையாம்-பள்ளிக்கல்வி முழுவதும் அனை வர்க்கும் இலவசமாம்! இந்த நாடுகளில் தானே நம் தாத்தா காந்தியும், மாமா நேருவும், இந்திரா காந்தியும், இராஜீவ்-சோனியாவும், மன்மோகன் சிங்கும், ப. சிதம்பரமும், சுப்பிரமணிய சாமியும் படித்தார்கள். இவர்களுக்கு அணுவளவும் உண்மை யான மானிடப் பற்றும், நாட்டுப் பற்றும் இருந் திருந்தால் நம் 'புண்ணிய' பாரத பூமியிலும் மேலை நாட்டுப் பள்ளிக் கல்வி முறையை கடந்த 70 ஆண்டுகளாக ஏன் நடைமுறைப்படுத்தவில்லை? அவ்வளவு வஞ்சகம்! பிரித்தாளும் கொள்கை!**

அவர்கள்தான் வஞ்சகர்கள் என்றால், நம் சாதிச் சங்கங்கள், நம்மை வைத்து வியாபாரம் செய்யும் அரசியல் கட்சிகள்-ஓட்டு வேட்டைக்காரர்கள் அனை வரும்; மாநில அரசிடமிருந்து கல்வி பறிபோன கடந்த 42 ஆண்டுகளாக என்ன செய்து சாதித்தார்கள்?

ஒன்றல்ல, ஓராயிரம் அனிதாக்கள் உன்னைப் போல அல்லது உன்னையும்விட 1199/1200 மதிப்பெண் பெற்றாலும்-அதுவும் தகுதி இல்லை-1200/1200 பெற் றால்தான் தகுதி என்று தில்லி ஏகாதிபத்தியம் கூறி நம்மை அடிமையாக்கி ஆளும்!

இந்தத் தகுதி, 'நீட்' தகுதி கூறும் சட்டமன்ற - பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக் கும், ஏன் உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற அ'நீதி' அரசர் களுக்கும் 'நீட்' தேர்வு அவசியம் என்பதை நாம் வலியுறுத்தினால் 'நீட்' என்ற பேச்சே நாட்டில் இருக்காது! இந்த நாட்டில் சட்டம் செய்கிறவர்கள் கைநாட்டாகக்கூட

இருக்கலாம்! அ'நீதி'யரசர்கள் ஏதோ சட்டப் படிப்புச் சான்று வைத்திருந்தால் போதும். 'நீட்'டும் வேண்டாம் - 'குட்டை'யும் வேண்டாம்.

ஒரே நாடு-ஒரே சட்டம்-ஒரே குடியுரிமை-என்று கூறும் அறிவாளிக்கு-அரசியல்வாதிகளுக்கு-அ'நீதி' பதிகளுக்கு-ஒரே தரமான கல்வியை-பாடத் திட்டத்தை நாடு முழுவதும் அமுல்படுத்தும் போது மட்டுமே ஒரே 'நீட்' தேர்வை நீட்டலாம் என்ற குறைந்தபட்ச அறிவு கூட ஏன் இல்லை?

**இந்திய மக்களாட்சியில் 100க்கு 85 விழுக் காடாக உள்ள இதர பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பு மக்கள், மதச்சிறுபான்மையினர் ஆகிய நாம் ஒன்றாக இணைந்து, எல்லா அதிகாரங்களும் குவிந்து கிடக்கும் தில்லி ஆட்சியை கைப்பற்றி னால் மட்டுமே நமக்கு உள்ள அனைத்துப் பிரச்ச னைகளையும் நீக்கமுடியும் என்று கூறிய மேதை அம்பேத்கரின் அரசியல் தீர்வை நாம் வென்றாக வேண்டும். இந்தத் தீர்வை நோக்கி நடக்காத எந்தச் சாதிச் சங்கமும் - அரசியல் கட்சிகளும் நம் துரோகிகளே! எதிரிகளைவிட இந்தத் துரோகிகள் யாரேனும் இருந்தால் அவர்களை முதலில் ஒழிக்க வேண்டும்! அப்போதுதான் தந்தை பெரியாரும், மாமேதை அம்பேத்கரும் கண்ட கனவுகள் நனவாகும்.**

தகுதி - திறமை - படிப்பு - பட்டம் - பதவி எல்லாம் ஒரு சிறு கும்பலுக்கே என்ற சூதுக்கோட்டையை உடைத்துத் தூள் தூளாக்கும் அனிதாக்களின் அணி வகுப்பு நடக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை. இனி அனிதாக்கள் சாகமாட்டார்கள் - சாகடிப்பார்கள்.

"கல்லாரைக் காணுங்கால்
கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம்
அங்கே உண்டாம்"

– கனக சுப்புரத்தினம்

**தமிழ்வழிக் கல்வி இயக்கம் சார்பில்**
**சென்னை பொது மருத்துவமனை அருகில் நடைபெற்ற**

## கண்டன ஆர்ப்பாட்டம்




மாணவி அனிதா படுக்கொலைக்குக் காரணமான மோடி - எடப்பாடி அரசைக் கண்டித்து தமிழ்நாட்டு உரிமைகளுக்கும் சமூக நீதிக்கும் எதிரான நீட் தேர்வை நீக்கக் கோரி பொது மருத்துவமனை முன்பு 04.09.2017, காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது.

# யாருக்கு விடுதலை ?

ஏற்றி ஆகிவிட்டது எழுபத்தோ ராண்டின்
ஏகாதி பத்திய எடுபிடி ஆட்சியில்
போலி விடுதலைநாள் கொடி யேற்றம்
மக்களின் வாழ்வோ கழு வேற்றம்

படி நிலையில் சாதியை வைத்து
படைத்தான் இறைவன் கதைபல இட்டு
மானுட சமநிலை மறுக்கும் நாட்டில்
விடுதலை? திருநாள் இந்தி யாவில்

காதலர்களின் ஆடை களைந்தது வன்கொடுமையே
ஆக்சிசன்மறுத்து மடிந்தமழலை அரசின் கொலையே
மக்களின் நலனைக் காக்கத் தவறுது
வந்தேமாதரம்! இந்தியத்தேசியம் எங்கே வாழுது

மனுவின் பேதம் மீண்டும் வருது
சூத்திர ருக்குக் கல்வி மறுக்குது
மத்தியமாநில அரசுகள் நீட்டி(ய)ன கயிறில்
மாட்டிக் கொண்டாள் அனிதா உயிரை

சமூகநீதி சமவுரிமைக்குப் பெருங் கேடிது
உழைக்கும் மக்களின் வாழ்வைப் பறிக்குது
பெரியாரையும் அம்பேத்கரையும் ஏந்து வோம்
விகிதாச்சாரப் பங்கீட்டை வென் றெடுப்போம்

அணுவுலை நியூட்ரினோ மணல் கொள்ளை
உரிமைப் பறிப்பை எதிர்த்தால் கடுஞ்சிறை
உழவன் வாழ்வில் அன்றாடம் தற்கொலை
இந்திய நாட்டில் யாருக்கு விடுதலை?

யாருக்கு இங்கே விடுதலையின் குடிஅரசு
மோ(ச)டிச் சட்டத்தின் சனநாயக(?) அரசு
இந்திய – (இந்து)த் தேசியத்தைமறுப்போம்
தேசியஇன உரிமைகளை வென்றெடுப்போம்!

– நா. மதனகவி

# நவோதயா இன்னொரு ஏமாற்று!

மோடியின் ஆட்சியில்
தடிஎடுத்தவன் எல்லாம்
தண்டல்காரன்
கொலைகாரன் எல்லாம்
குடியாளும் அரசன்

நாட்டுமொழி எல்லாம்
நலிந்து சாகும் வாடி!
இந்திக்கும் வடமொழிக்கும்
இறைப்பதுவோ பலகோடி!

1986–
ஈழமக்களைக் கொன்றுகுவித்த
இராசீவ் காந்தி அந்நாளில்
கல்விநிலையில்
இந்திய இளஞ்சிறார்களைக்
கொன்று குவிக்கக்
கொண்டுவந்த திட்டம்தான்
'புதிய கல்விக்கொள்கை'
அதன் நச்சு வடிவமே
நவோதயா

மாவட்டத்திற்கு
ஒருபள்ளியாம்
80 பேர்கள்
அதில் இருப்பார்களாம்

சி.பி.எஸ்.இ
நவோதயா
கேந்திரவித்யாலயா
எல்லாமே
மண்ணில் ஒட்டாதா
கிளைகள்
மண்ணை மலடாக்கும்
விதைகள்

ஏகஇந்தியாவுக்கும்
ஒற்றைப்பாடத்திட்டம்
என்பதே
தேசியவாதிகளின் ஓலம்

மாநிலங்கள் என்பவை
மந்தைகள் அல்ல
தனித்தனி தேசிய இனங்கள்!

இதை அங்கீகரிக்க மறுத்து
அன்று காங்கிரசு செய்தது
அடாவடித்தனம்
இன்று காவி செய்வது
அரம்பத்தனம்

அனைவர்க்கும் கல்வி என்பதே
அறிவுடைமை
தேர்ந்தெடுக்கப்பட்ட
சிலருக்கு மட்டுமே என்பது
சீழ்பிடித்த மடமை
அந்தக் கல்வியும்
ஆங்கிலத்தில் தானாம்!

புதுமணப் பெண்ணாய்
எப்போதும் இந்தி!
தட்டுக் கழுவ மட்டும்
தாய்மொழி!

தேசிய ஒருமைப்பாடு எனும்பெயரில்
இடையில் 'தேவபாடை'!

புழுத்த ரேசன் அரிசிக்கே
போராட்டம்!
இங்கே
கொழுத்த கல்வி என்பது
கொஞ்சம் பேருக்கே!

ஆக
நரிகளின் திட்டம்
நவோதயா–தமிழ்
நாட்டில் இத்திட்டம்
செல்லாதய்யா!

அகில இந்தியா
என்பதே திருட்டு!
ஆகாது இந்தப்
புரட்டு!
இதை அடியோடு அடித்து
விரட்டு!

– **தமிழேந்தி**



# தமிழைப் பரப்ப, உலக அளவில் ஏற்பாடு
# தமிழக அரசின் மோசடியான திட்டம்!

# 2057இல் பேசப்படும் மொழியாகத் தமிழ் இருக்குமா?

“தமிழ்நாட்டில் இந்தியைப் பரப்ப இந்திப் பிரச்சார சபை இருப்பதைப் போல், உலக அளவில் தமிழ் பேசும் மக்கள் உள்ள நாடுகளில் தமிழ் பேசப்படும் மொழியாகப் பரப்பப்பட எல்லா முயற்சிகளையும் இன்றையத் தமிழக அரசு செய்ய உள்ளதாக, தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் கே. பாண்டியராசன் அண்மையில் தெரிவித்துள்ளார்” (தினமணி, 9.9.2017).

இன்று உலக நாடுகளிலும் தமிழ்நாட்டிலும் 9 கோடி பேர் தமிழ் பேசுகின்றனர். உலகில் அதிகம் பேர் பேசும் ஒரு மொழியாக 20ஆவது இடத்தில் இன்று தமிழ்மொழி இருக்கிறது. இதை 10ஆம் இடத்துக்குக் கொண்டுவருவது தமிழக அரசின் தொலைநோக்குத் திட்டமாம்.

இதுபற்றித் தமிழ்மக்கள் கவலையோடு சிந்திக்க வேண்டும்.

தமிழ்ப்பேசும் தனி மாநிலம் 01.11.1956இல் அமைக்கப்பட்டது. 1956 முதல் 5.3.1967 வரையில் தமிழ் நாட்டில் காங்கிரசு ஆட்சி நடந்தது.

6.3.1967 முதல் தொடர்ந்து 31.12.1976 முடிய தமிழ்நாட்டை தி.மு.க. ஆண்டது.

1977 முதல் கடந்த 40 ஆண்டுகளாக-அ.இ.அ.தி.மு.க.வும்-தி.மு.க.வும் தமிழகத்தை மாறி, மாறி ஆண்டன.

இவ்வளவு நெடிய ஆட்சிக்காலத்தில், தமிழகத்தில்,

1. எல்லா நிலைக் கல்வியையும் தமிழ்மொழி வழியில் தமிழக அரசு தர, ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு துறையிலும் அறிவு வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றக் கருத்துகளைத் தருவதற்கு ஏற்ற தமிழ்க்கருவி நூல்களை உருவாக்கியிருக்க வேண்டும். இது நடைபெறவில்லை.

தாய்மொழி வழியில்தான் எல்லா நிலைப் படிப்புகளும் கற்றுத்தரப்பட வேண்டும் என்ற கருத்து, இந்திய மொழிகளைப் பேசுவோரிடையே, வலிவாக ஊன்றப்படவில்லை. எவ்வளவு உயர்ந்த அறிவையும், அப்போதுதான், ஒருமொழி பேசும் மக்கள் உண்மையில் பெறமுடியும்.

இந்தப் பேருண்மையை 1983 முதல் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

திராவிடக் கட்சி ஆட்சிகள் ஒருபோதும் இந்த நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

3. தமிழகச் சிற்றூர் ஆட்சி முதல் தலைமைச் செயலகம் வரை எல்லா நிலையிலும் தமிழ் மட்டுமே நிருவாக மொழியாக-ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை.
4. கீழமை நீதிமன்றம் முதல் தமிழ்நாட்டு உயர் நீதிமன்றம் வரையில் வழக்காடும் மொழியாக - தீர்ப்புகள் எழுதும் மொழியாகத் தமிழே ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.
5. பேசப்படும் மொழியாக, ஆங்கிலம் கலவாத, வட மொழி கலவாத தமிழ், தமிழ் மக்களின் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பயன்படுத்த ஏற்ற கருவிச் சொற்களை உருவாக்கி, அவற்றைத் தொடக்கப் பள்ளி முதல் பல்கலைப் படிப்பு வரையில் கற்றுத் தந்திருக்க வேண்டும்.

இன்றைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலும், நேற்றைய தி.மு.க. ஆட்சியிலும், உயர்கல்வி ஆங்கில மொழி வழியே தரப்பட்டது; ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருந்தது.

இன்றைய ஆட்சியில் அரசுத் தொடக்கப் பள்ளி முதல் எல்லாப் பாடங்களும் பல பள்ளிகளில் ஆங்கில மொழி வழியில் கற்பிக்கப்படுகின்றன.

**இந்த ஈனத்தனமான வழக்கத்தைத் தமிழ்நாட்டு மக்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும். 2017இல் தமிழர்கள் இதில் திருந்தத் தவறினால், கி.பி. 2057இல், தமிழ்நாட்டில் தமிழ் பேசப்படும் ஒரு மொழியாக இருக்குமா என்பது ஒரு பெரிய கேள்விக் குறியே ஆகும். இது உறுதி.**

**- வே. ஆனைமுத்து**

## ‘வெண்பா’ - பெண் குழந்தை தோற்றம்



தனித் தமிழ் ஆர்வலரும், சிந்தனையாளன் இதழ் ஆதர வாளரும், தோழர் வே. ஆனை முத்து அவர்கள் மீது அளவிலாப் பற்றுக் கொண்டவருமான புதுச்சேரி, சண்முகாபுரம், சீனு. தமிழ்மணி - சு. இராசேசுவரி இணையரின் இளைய மகள் த. அன்புமதி செந்தில்குமார், புதுச் சேரி, கதிர்காமம், அ. நடேசன் - ந.கோவிந்தம்மாள் இணை யரின் மகன் ந. செந்தில் குமார் இணையருக்கு 12-6-2017 திங்கள் இரவு பெண் குழந்தை பிறந்தாள். அக் குழந்தைக்கு **வெண்பா** எனப் பெயரிட்டதன் மகிழ் வாக சிந்தனையாளன் இதழ் வளர்ச்சிக்கு உருவா 1000 வழங்கி மகிழ்ந்தனர்.

நூல் மதிப்புரை

# பட்டினிப் புரட்சி

## மனித குலத்தைப் பட்டினியில் இருந்து மீட்கும் வழிகாட்டி நூல்

நான் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஓராண்டுக்கு முன், தமிழ் (சிறிதும்) தெரியாத தமிழர் ஒருவர் அவருடைய பணி நிமித்தமாக என்னைச் சந்தித்தார். அவர் மேலை நாட்டில் வசிக்கும் ஒரு பன்னாட்டு முதலாளி. ஆண்டுக்கு ஒரு முறையோ இரு முறையோதான் அவருடைய தொழில் நிமித்தமாக இந்தியாவுக்கு வருவார். என்னுடைய அலுவலகச் செயல்பாடு அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. இன்னும் ஓராண்டில் நான் பணி நிறைவு செய்து ஓய்வு பெறப் போகிறேன் என்று தெரிந்து கொண்டவுடன் ஓய்வு பெற்ற பிறகு அவருடைய நிறுவனத்தில் வேலைக்குச் சேருமாறு அழைப்பு விடுத்தார்.

ஓய்வு காலத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கதை, செய்யுள், கட்டுரைகளை எழுத வேண்டும் என்பது என்னுடைய எதிர்காலத் திட்டமாக இருந்தது. (இப்பொழுது அப்படியே தான் செய்து வருகிறேன்.) ஓய்வு காலத்தில் வேலை வாய்ப்புக்கான அழைப்பைக் கேட்டவுடன் நான் சிறிது நேரம் அமைதியானேன். நான் அமைதியாக இருப்பதைக் கண்ட அவர் உலகில் நான் விரும்பும் எந்த நாட்டிலும் வேலை போட்டுத் தர ஆயத்தமாக இருப்பதாகக் கூறினார். வெளி நாட்டுக்குப் போக விருப்பம் இல்லை என்றால் சென்னையிலேயே வேலை போட்டுத் தர முடியும் என்றும் கூறினார்.

என் அமைதியை உதறிவிட்டு, நான் ஒரு பெரியாரியவாதி என்றும் ஓய்வு காலத்தில் பெரியாரைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உண்டாக்கும் பணியைச் செய்ய உத்தேசித்து இருப்பதாகவும் கூறினேன். நான் பெரியாரியவாதி என்று தெரிந்ததும் அவருடைய (அவர் பார்ப்பனர் அல்லர்; கிறித்துவர்) முகம் சுருங்கியது. ஆனால் சில நொடிகளுக்குள்ளேயே சுதாரித்துக் கொண்டு, அதனால் பரவாயில்லை என்றும் அவருடைய நிறுவனத்தில் பணி செய்து கொண்டே என்னுடைய சொந்த வேலைகளையும் பார்க்கலாம் என்றும் கூறினார்.

உடனே நான் பெரியாரியவாதி மட்டும் அல்லன் என்றும் பொதுவுடைமைத் தத்துவத்தின் பால் கவரப் பட்டவன் என்றும் கூறினேன். இதைக் கேட்டவுடன் அவர் அதிர்ச்சி அடைந்துவிட்டார். சிறிது நேர அமைதிக்குப் பின் தன்னால் இந்தச் செய்தியைச் செரிக்க முடியவில்லை என்றார். பின் நான் பொதுவுடைமையாளனாக இருப்பதற்கான காரணத்தைக் கேட்டார்.

இதை விளக்கவேண்டும் என்றால் ஒரு பேருரையே தேவைப்படும். அலுவலக நேரத்தில் அதற்கெல்லாம் நேரம் இருக்காது. ஆகவே மிகச் சுருக்கமாக, உலகில் நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் என்றும், அதைவிட அதிகமான மக்கள் போதுமான ஊட்டச் சத்து உள்ள உணவைப் பெறுவதில்லை என்றும் கூறினேன். இதைப் போல் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் மிகப் பல உள்ளன என்றும் அவற்றுக்கெல்லாம் ஒப்புரவு அமைப்பில்தான் (Sociliat System) தீர்வு காண முடியும் என்றும் கூறினேன்.




உடனே அவர் "உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் தேவைப் படும் உணவை விட அதிக அளவு உற்பத்தி ஆகிறது" என்று கூறினார். அவற்றை முறைப் படி விநியோகித்தால் அனைவருக்கும் உணவு அளிக்க முடியும்" என்றும் "உணவு உற்பத்தியை அதிகரிக்கத் தேவை இல்லை" என்றும் கூறினார்.

போதுமான அளவுக்கு மேல் உணவு தானியங்கள் உற்பத்தியான போதும் அவை ஏன் அனைத்து மக்களுக்கும் போய்ச் சேரவில்லை? என்று கேட்டேன்.

யாரும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை" என்று அவர் கூறினார்.

ஏன் யாரும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை" என்று கேட்டேன்.

அதற்கு அவர் தனக்குத் தெரியவில்லை என்றும், மற்ற மனிதர்களைப் பற்றி அக்கறை கொள்ளும் பண்பு மனிதர்களிடம் இல்லாமல் இருப்பது காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

உடனே நான் அவர் செய்யும் தொழில்களை எல்லாம் குறிப்பிட்டு, அதன் மூலம் உற்பத்தியாகும் திண் பொருள்களையும் மென் பொருள்களையும் குறிப்பிட்டு, அவற்றை எல்லாம் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் தன்னுடைய ஆர்வம், தன்னுடைய திறமை என்று சுற்றி வளைத்து விடை கூற, நான் அவரை மேலும் மேலும் வினாக்களைத் தொடுத்து, இலாபம் கிடைப்பதால் தான் அத்தொழில்களைச் செய்வதாக அவர் வாயில் இருந்தே வரவழைத்தேன்.

பின், மக்களின் தேவைக்கும் அதிகமாக விளைந்த உணவு தானியங்களை அனைத்து மக்களிடமும் கொண்டு போய்ச் சேர்க்கும் வேலையில் முதலீடு செய்தால் இலாபம் கிடைக்காததால், அல்லது குறைந்த இலாபமே கிடைப்பதால் தான் அத்தொழிலில் யாரும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்பதை அவராகவே ஒப்புக் கொள்ள நேர்ந்தது. அப்படி என்றால் அனைத்து மக்களுக்கும் உணவு கிடைக்காமல் போவதற்கு மனிதர்களின் அடிப்படைப் பண்பு காரணம் அல்ல என்பதையும் சமூக

அமைப்பு தான் காரணம் என்பதையும் ஒப்புக் கொள் கிறீர்களா என்று அவரிடம் கேட்டேன். உடனே அவர் ‘‘உங்கள் கொள்கையை என்னிடம் திணிக்கப் பார்க்க வேண்டாம்’’ என்று சிரித்துக் கொண்டே கூறி விட்டு விடை பெற்றுக் கொண்டார்.

அன்று அவரிடம் பேசும் போது உணவுப் பிரச்சினை பற்றிய என் அறிவு உணவு விநியோகத்தில் கோளாறு; அந்தக் கோளாறுக்குக் காரணம் முதலாளித்துவ அமைப்பு என்ற அளவில் மட்டுமே இருந்தது. ஆனால் இந்நூலைப் படிக்கும் போது அதன் ஆழமும் விரிவும் புரிந்தது. புரிந்தது என்பதை விடப் புரிந்து கொண்டு இருக்கிறது என்பதே சரியாக இருக்கும். ஏனெனில், இந்நூலில் உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் பற்றிய செய்திகள் அனைத்தும் ஆழமாகவும் விரிவாகவும் விவாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமையாகப் புரிந்து கொள்ள இன்னும் நேரம் தேவைப்படுகிறது.

பசுமைப் புரட்சியின் உருவாக்கம் பற்றிய செய்தி உண்மையில் திடுக்கிட வைக்கிறது. பசுமைப் புரட்சி என்ற எண்ணம் உருவாகும் முன்னரே உலக மக்கள் அனைவருக்கும் தேவையான அளவை விட அதிகமான தானியங்கள் விளைந்து கொண்டு தான் இருந்தன. இரண்டாம் உலகப் போருக்காக அமைக்கப்பட்ட வேதிப் பொருள் தொழிற்சாலைகளை, போர் முடிந்த பின் என்ன செய்வது என்று யோசித்த போது, அதில் செய்யப்பட்ட முதலீடு இலாபம் ஈட்டாமல் இருந்து விடக் கூடாது என்பதற் காக, அதை வேளாண்மையில் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் உதித்திருக்கிறது. அதைப் பசுமைப் புரட்சி என்று அழைத்திருக்கிறார்கள். இதனால் மண் வளம் பாதிக்கப்படும் என்பதைப் பற்றிய எந்தவிதமான கவலையும்படாமல், பட்டினி கிடக்கும் மக்கள் மேல் அக்கறை உள்ளவர்கள் போல் நடித்து அவர்களைக் காட்டி, தானிய உற்பத்தியை அதிகரித்து அவர்களுடைய பட்டினி யைப் போக்குவதற்குத் தான் பசுமைப் புரட்சி என்று கதை சொல்லியிருக்கிறார்கள். இது மனித குலத்துக்கு எதிரான மன்னிக்க முடியாத குற்றம். ஆனால் இந்தக் குற்றத்தைப் புரிந்தவர்கள், அதைத் தொடர்பவர்கள் பட்டம் பதவி களைப் பெற்று மிகவும் சொகுசாக வாழ்கிறார்கள்.

பசுமைப் புரட்சியை அறிமுகப்படுத்திய போது, அது தவறானது என்றும், சுற்றுப்புறத்தை மாசுபடுத்தும் என்றும் கூறியவர்களை (காந்தி மற்றும் பொதுவுடைமை யாளர்களை) உதாசீனம் செய்து விட்டுத் தங்கள் வழியே தொடர்ந்தவர்கள், இன்று நடந்துள்ள கேடான தாக்கங் களைக் கண்ட பிறகும் மனம் வருந்துவது போலத் தெரிய வில்லை. இச்செய்திகள் முதலாளித்துவ அறிஞர்கள் அளித் துள்ள புள்ளி விவரங்களைக் கொண்டே இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக மனித உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்தை அளிக்காத, ஒவ்வாத ஆற்றலை அளிக்கும் உணவு வகைகள் பெருகி வருவது ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்கு மட்டும் அல்ல; வளர்ப்பு மிருகங்களுக்கும் அதே கதி தான். அதன் தொடர் விளைவாக அவற்றின் இறைச்சியைச் சாப்பிடும் மனிதர்களுக்குக் கூடுதல் கெடுதல்கள் விளைகின்றன. இந்நூலில் கூறப்பட்டுள்ள இச்செய்திகளை இந்நூலாசிரியர் கொடுத்திருக்கும் ஆதாரங்களில் இருந்து மட்டுமல்ல; நம் சொந்த அனுபவத்தில் இருந்தும் தெரிந்து கொள்ள முடியும். இயற்கை உணவுகளை உண்டு கொண்டு இருந்த காலத்தில் நீரிழிவு, இரத்த அழுத்தம், இரத்தக் கொழுப்பு போன்ற நோய்கள் மிகச் சிலருக்கே இருந்தன. செயற்கை உரங்களினால் விளைந்த உணவை உண்டு கொண்டு இருக்கும் இக்காலத்தில் மிகப் பலரை, அதுவும் இளம் வயதிலேயே பாதிக்கின்றன. மேலும், இயற்கை உணவுகள் (இயற்கை உணவுகளை உண்ட மிருகங்களின் இறைச்சி உட்பட) உண்பதற்குச் சுவையாக இருந்தன. இப்பொழுது அவை சுவையாக இல்லை. இளைய தலை முறையினர் இதை அறியாமல் இருக்கலாம். ஆனால் முதியவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இச்செய்தி இந்நூலில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

இவை மட்டுமா? பசுமைப் புரட்சியினால் வேளாண் மைக்கு நன்மை செய்யும் பல உயிரினங்கள் அழிந்து கொண்டு இருப்பதும் இந்நூலில் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது. இது தடையின்றித் தொடர்ந்தால் எதிர்காலத்தில் தானிய உற்பத்தி பாதிக்கப்படும் என்பதை மனித இனம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், இந்தப் பசுமைப் புரட்சி தானியங்களின்/உணவுப் பொருள்களின் தரத்தைக் குறைத்து, மனிதர்களிடையே நோய்களைப் பரப்புவது அல்லாமல், உழவர்களது வாழ் நிலையை மோசமாக்கி மிகப் பலரைத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுவதும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வளவு அழிவு வேலைகளையும் செய்து விட்டு, அதைப் பற்றிச் சிறிதும் கவலையோ, வெட்கமோ கொள்ளாமல், இரண்டாம் பசுமைப் புரட்சி என்ற பெயரில் **மரபு மாற்றப் பயிர் என்ற மலட்டு வேளாண் முறையை முதலாளித்துவ அறிஞர்கள் அறிமுகப்படுத்த முனைந் துள்ளனர்.** இம்மலட்டு வேளாண் முறையினால் என்னென்ன கேடுகள் விளையும் என்பதைப் பற்றி அரைகுறையாக ஆராய்ச்சி செய்து விட்டு, இதனால் விளைச்சல் அதிகரிக்கும் என்று மட்டும் கூறி இன்னொரு பேரழிவைச் செயல்படுத்த அவர்கள் துடித்துக் கொண்டு இருக்கின்றனர். இவை யாவற்றுக்கும் நம்முடைய பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் அரசியல்வாதிகள் கட்சி வேறுபாடு இன்றி, போட்டி போட்டுக் கொண்டு துணை போகின்றனர். இந்நிலையில் இருந்து மக்களை மீட்டு அனைவரும் நன்றாக வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்? நூலாசிரியர் அருமையாக விடை பகர்கின்றார்.

**பாதிக்கப்படும் உழைக்கும் மக்கள் அனைவரும் இணைந்து வேதியுரங்களின் அடிப்படையிலான பசுமைப் புரட்சியையும், மலட்டு வேளாண்மையையும் எதிர்க்க வேண்டும். மேல்தட்டு மக்களில் மாந்த நேயம்**

**உள்ளவர்கள் இப்போராட்டத்தில் உழைக்கும் மக்களுக்கு ஆதரவாக இணைய வேண்டும். அவ்வாறு செய்தால் மக்களின் உணவுப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்பதை இந்நூலாசிரியர் தெளிவாக விளக்குகிறார்.**

அது மட்டும் அல்ல; இவ்வாறு செய்தால் பசுமைப் புரட்சி ஏற்படுத்தி வைத்திருக்கும் மண் வளச் சீர்கேடு களையும், பிற சூழ்நிலைக் கேடுகளையும், காலப் போக்கில் குணப்படுத்த முடியும் என்பதையும் விளக்கியிருக்கிறார்.

மேலும், இன்றைய உலகில் உணவுப் பிரச்சினை பற்றிய அனைத்துக் கூறுகளையும் அலசி ஆராய்ந்து, அவை அனைத்துக்கும் பசுமைப் புரட்சியே காரணம் என்பதையும், மரபு மாற்று வேளாண்மை அவற்றை மேலும் மோசமாக்கத் துடித்துக் கொண்டு இருக்கிறது என்பதையும் ஆதாரங்களுடன் விளக்கி இருக்கிறார்.

அதுவும் ஆற்றொழுக்கு நடையில் அவர் விளக்கி யிருக்கும் விதம், நூலைக் கீழே வைக்கத் தோன்றாமல் தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது.

இந்நூலின் முதற் பதிப்பு சூன் 2017இல் வெளி வந்துள்ளது. இதை முற்பேக்கு நூல்களை வெளியிடு வதை நேக்கமாகக் கெண்ட விடியல் பதிப்பகத்தார் வெளியிட்டு உள்ளனர். இந்நூலின் விலை ரூ.450/.ஆக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. 556 பக்கங்கள் கெண்ட இந்நூலின் பெருண்மையைக் கணக்கில் கெண்டு பார்க்கும் போது இப்பதிப்பகத்தார் வணிக உத்தியை மனதில் கொள்ளாமல் மக்களுக்கு நல்ல கருத்துகள் போய்ச் சேர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே வெளியிட்டு இருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்நூலைப் படைக்க இதன் ஆசிரியர் பரிதி எடுத்துள்ள சிரமங்களை வேறு இலாபம் தரும் தொழில்களில் எடுத்து இருந்தால் கோடிக் கணக்கில் பணத்தை ஈட்டி இருப்பார். ஆனால் மாந்த இனத்தின் மீதும், இயற்கை வேளாண்மையின் மீதும் உள்ள பற்றினால் மிகப் பெரும் அளவு சிரமத்தை ஏற்றுக் கொண்டு மிகச் சிறந்த முறையில் மட்டும் அல்லாமல், மிக எளிதாகப் புரிந்து கெள்ளும் முறையிலும் இந்நூலைப் படைத்திருக்கிறார்.

இந்நூலில் உள்ள செய்திகள் இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியம் தேவைப்படுபவை. ஆகவே இந்நூலைப் படிக்கும் வாசகர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நண்பர் களுக்கும் உறவினர்களுக்கும் பரிந்துரை செய்தால் அவர்கள் மனித குலத்துக்குச் சேவை செய்தவர்கள் ஆவார்கள்.

- **இராமியா**

கிடைக்குமிடம் : **விடியல் பதிப்பகம்**
எண்.23/5, ஏ.கே.ஜி.நகர், 3வது தெரு,
உப்பிலிபாளையம் அஞ்சல், கோயம்புத்தூர் - 641 015.
கைப்பேசி : 94434 68758, ☎ : 0422-2576772

## தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய முப்பெரும் விழா



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 139ஆவது பிறந்த நாள் விழா, திராவிடர் 100 - நூறு புத்தகங்கள் அறிமுக விழா, தமிழனை இழிவு படுத்தும் ஆரியப் பண்பாட்டு பூணூல் போடும் ஆவணி அவிட்டத்தில் பன்றிக்கு பூணூல் போடும் போராட்டம் நடத்திச் சிறை சென்ற தோழர்களுக்குப் பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழா, 24.9.2017, ஞாயிறு மாலை 4.00 மணிக்கு ஆவடி H.V.F. ஜெகஜீவன்ராம் சிலை அருகில் உள்ள முத்தமிழ் மன்றத்தில் தந்தை பெரி யார் திராவிடர் கழகம் நடத்தியது.

மாவட்டத் தலைவர் நா.க. தமிழ்ச்சிற்பி தலைமை தாங்கினார். ஆவடி நகரச் செயலாளர் பரசுராமன் முன்னிலையும், மாவட்டச் செயலாளர் ஆவடி நாக ராசன் வரவேற்புரையும் ஆற்றினர். தலைமை நிலையச் செயலாளர் வழக்கறிஞர் வை. இளங்கோவன் தொடக்கவுரையாற்றினார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் நூல்களை அறிமுகம் செய்து தோழர்களைப் பாராட்டிச் சிறப்புரையாற்றினார். மற்றும் பல தோழர்கள் கருத்துரை வழங்கினார்கள். இறுதியாக அம்பத்தூர் நகரச் செயலாளர் ஸ்ரீபதி நன்றியுரையாற்ற விழா இனிதே முடிவுற்றது.

## தோழர் பா.சுந்தர்ராசன் 5ஆம் ஆண்டு நினைவேந்தல்



மார்க்சியக் கொள்கை ஏற்று-தீண்டாமை-சாதி வேற்றுமை ஒழிந்த-தமிழ்த்தேச உரிமை மீட்க உழைத்த தோழர் பா.சுந்தர்ராசன் தலைமை ஆசிரியர் ஓய்வு 5-ஆம் ஆண்டு நினைவு நாள் 17.10.2017. சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூபாய் 1000 வழக்கப்பட்டது.

- தமிழக இளைஞர் எழுச்சி இயக்கம்
காஞ்சிக்கலைக் குழு 94452 69610

# தேர்தல் கொந்தளிப்பு முடிந்துவிட்டது : சுயமரியாதை இயக்கம், அனைத்திந்திய இயக்கம் ஆக வேண்டும்

- ஈ.வெ.ரா.

சாகப்போகும் காயலாக்காரனுக்குக் கோமாரி ஜன்னி கண்டால் பத்துப்பேர்கள் போட்டு அமிழ்த்தினாலும் திமிரிக்கொண்டு எழுந்திருக்கும் படியான பலம் ஏற்படுவதுண்டு. அதுபோல காங்கிரசு கூப்பாட்டுக்கும், காலித்தனங்களுக்கும், பொய் பித்தலாட்டங்களுக்கும், போலி ஆணவங்களுக்கும் சாவுகாலம் நெருங்கிவிட்டது. இன்னும் சில நாளில் பிணமாகிச் சுட்டுக் கொளுத்தப்பட்டுச் சாம்பலாக்கி கரைத்துவிடப் படக்கூடிய நிலை காங்கிரசுக்கு எய்திவிட்டது. காங்கிரசுக்காரர்கள் தங்களால் ஆன சகல காரியங்களையும் செய்து பார்த்துவிட்டார்கள். காங்கிரசு தேர்தல் கொந்தளிப்பு அடங்கி முடிவு தெரிவதற்கு முன்னாலேயே, காங்கிரசு கொள்கையும் சவடால் வீரமும் செத்து அரசாங்கத்தின் காலுக்குள் நுழைந்து, ‘‘வார்த்த அளவுக்குக் கஞ்சி வாருங்கள்’’ என்று இருகை நீட்டிக்கெஞ்சும் நிலையைக் கொண்டுவந்துவிட்டது என்பதில் யாரும் இனிச்சிறிதும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

**இது ஆரம்ப காலத்திலிருந்தே நாம் எதிர்பார்த்ததே ஒழிய, இந்த நிலை நாம் திடீரென்று மகிழ்ச்சி அடையத்தக்க சேதியல்ல. பட்டம் விடுதல், சட்டசபை விடுதல், சீர்திருத்தத்தைத் தகர்த்தல், அரசியலை உடைத்தல், ஏகாதிபத்தியத்தை ஒழித்தல் என்கின்ற தான பகட்டுப் போர்வைகள் பறந்துவிட்டன. காங்கிரசின் உண்மையான யோக்கியதை நிர்வாணமாய் விளங்கிவிட்டது.**

‘‘மந்திரி வேலை ஏற்றால் அரசாங்கத்திற்கு அடிமை முறிச்சீட்டு எழுதிக்கொடுத்தது போல ஆகும்; தேசத்தைக் காட்டிக்கொடுத்த தேசத் துரோகத்துக்கு ஒப்பாகும்’’ என்றும். ‘‘காங்கிரசுக்காரர் மந்திரிப் பதவிக்காக எக்கட்சியுடனாவது சமாதானம் செய்துகொள்வது என்பது காங்கிரசின் வீழ்ச்சிக்கு அறிகுறி’’ என்றும், 2, 3 மாதத்திற்குமுன் தமிழ்நாட்டில் - ஏன்? இந்தியாவெங்கணும் சுற்றிச் சுற்றிக் ‘‘கர்ஜித்து’’ப் போன காங்கிரசு தலைவர் ‘‘ஒப்பற்ற வீரர்’’, ‘‘சமதர்ம சாஸ்திரி’’, ‘‘பொதுவுடைமை கனபாடி’’ பண்டிட் ஜவஹர் பார்ப்பனர், தன் மாகாணத்திலேயே இன்று மந்திரி வேலைக்குத் தன் தங்கையை நிறுத்தி, காங்கிரசு விரோதிகளான முசுலீம்களிடம் அவர்களுக்கும் 2 மந்திரி வேலை கொடுப்பதாகக் கூறி உறவுகொள்ளச் சரண்புகுந்து, சர்க்கார்முன் மண்டியிட்டுப் பிரார்த்திப்பதைப் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே பரக்கக் காண்கின்றோம்.

ஆகவே, ‘‘ஐயோ மானங்கெட்ட காங்கிரசே! பார்ப்பனரை நம்பி பரதேசியான காங்கிரசே! உன்நிலை இப்படியா ஆகவேண்டும்! உன் ஆரவாரம் எங்கே? ஆட்டம் பாட்டம் எங்கே? ஆணவமெங்கே? ஆங்கிலேயரின் அரை இடுக்கில் புகுந்து போட்டிப் போடுகிறாயே, வெட்கமில்லையா’’ என்று உலகோர் பரிகசிக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

எனவே, காங்கிரசின் வீரம் ஏமாற்று வீரம் என்பதையும், அதன் பகிஷ்காரக் கொள்கைகள் என்பவைகள் பதவிகள் கிடைக்காத காரணத்தால் போடும் போலிக் கூச்சல் என்பதையும், காங்கிரசில் சேர்ந்தால் ஒரு மனிதனாவது யோக்கியதையாகவோ, நாணயமுடையவனாகவோ இருக்க முடியாது என்பதையும், நமது 1937ஆம் வருட சீர்திருத்தமும். அதன் தேர்தலும் கல்லின்மேல் எழுத்துப்போல் எழுதிக் காட்டிவிட்டன.

**என்றாலும் இதுவரை நடந்த 8, 9 மாகாணத் தேர்தல்களில் காங்கிரசுக்கு 5, 6 மாகாணங்களில் படுதோல்வி ஏற்பட்டுவிட்டது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.**

ஐக்கிய மாகாணத்திற்குத் தேர்தல் நடந்து முடிவு வெளியாகத் தொடங்கிய முதல் தினத்திலேயே, ‘‘காங்கிரசு நிறுத்திய 120 ஸ்தானங்களில் இதுவரை 8 ஸ்தானங்களில் தோல்வி அடைந்துவிட்டது’’ என்று வெளியாக்கிய பார்ப்பனப் பத்திரிகைகள், 17ஆம் தேதியில் 113 ஸ்தானம் காங்கிரசுக்குக் கிடைத்தது என்று ‘‘மெயில்’’, ‘‘ஜஸ்டிஸ்’’ முதலிய பத்திரிகைகளில் சேதி வந்திருக்கும் போது, ‘‘அசோசியேட் பிரஸ்’’ 116 ஸ்தானங்கள் காங்கிசுக்கு வெற்றி என்று எழுதினால், காங்கிரசின் நாணயத்துக்கும் அக்கட்சியின் பத்திரிகைகளின் யோக்கியதைக்கும் வேறு உதாரணம் என்ன வேண்டும் என்பதை வாசகர்களே ஒருவாறு உணரலாம்.

அன்றியும், ஐக்கிய மாகாணத்தில் மொத்தம் 228 ஸ்தானத்துக்கு மேல் குறிப்பிட்டபடி, காங்கிரசு கட்சி நிறுத்தியதே 120 ஸ்தானம் என்று ‘‘இந்து’’ முதல் எல்லாப் பத்திரிகைகளும் 26.1.1937ஆம் தேதியில் புள்ளிவிபரங்கள் காட்டியிருக்க, இன்று அதற்கு மாறாக 131 ஸ்தானம் - அதாவது காங்கிரசால் நிறுத்தப்பட்ட 120 ஆள்களுக்குமேல் 11 ஸ்தானங்கள் எப்படிக் கிடைத்தன என்று யோசித்தால், மந்திரி வேலை ஒப்புக் கொள்ளப் போவதாகவும் வேறு கட்சியின் பேரால் நின்றவர்களுக்கும் மந்திரி வேலை கொடுக்கப் போவதாகவும், அதுவும் காங்கிரசுக்கு எதிரிகளாய் நின்ற

முஸ்லீம்களுக்கு 2 மந்திரி ஸ்தானம் கொடுப்பதாகவும், அப்படிப்பட்ட மந்திரிகளைத் தாங்கள் ஆதரித்துக் கடைசி வரை காப்பாற்றிக் கொடுத்து வருவதாகவும் பேரம் பேசிச் சேர்த்துக் கொண்டிருக்கிறது என்பதல்லாமல், வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்று கேட்கின்றோம்.

நாளைக்குத் தோழர் இராஜகோபாலாச்சாரியார் என்கின்ற அய்யங்கார் பார்ப்பனரும் காங்கிரசு எண்ணிக்கை மெஜாரிட்டியாய் இல்லாமல் தோற்கடிக்கப்பட்டுப் போனால், மத்திய மாகாண வீரர் தோழர் ஜவஹர்லால் என்ற பார்ப்பனரைப் போலவே மற்ற கட்சியாரை - அதாவது காங்கிரசை எதிர்த்து நின்ற கட்சியாரைக் கெஞ்சிக் கூத்தாடி, அவர்களுக்கும் மந்திரி வேலை கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து ஆள் சேர்த்து "காங்கிரசுக்கு ஜெயம்" என்று கணக்குக்காட்ட முயற்சிக்கலாம்.

ஆனால், சென்னை கவர்னர் பிரபு அவ்வளவு சுலபத்தில் ஏமாறக்கூடிய பேர்வழியல்ல.

காங்கிரசுக்காரர் அடியோடு நிபந்தனை இல்லாத அடிமைமுறிச் சீட்டு - அதாவது காந்தியார், இர்வின் பிரபுவுக்கு, "இனிமேல் சட்டம் மீறுவதில்லை; சத்தியாக்கிரகம் செய்வதில்லை; சர்க்கார் உத்தரவுகளை மீறுவதில்லை; மறியல் செய்வதில்லை; வட்டமேசை மகாநாட்டுக்கு மரியாதையாய்ப் போய் வருகிறேன்" என்று சரணாகதி (காந்தி-இர்வின் ஒப்பந்த)ப் பத்திரம் எழுதிக் கொடுத்ததுபோல், தோழர் இராஜாகோபாலாச்சாரியாரும் தன் கைப்பட எழுதிக்கொடுத்துத் தலைவணங்கிக் கெஞ்சி, பிரிட்டிஷ் அரசருக்கும், அவர் சந்ததிக்கும் அடிபணிந்து பக்தி விசுவாசம் செலுத்தி அவரது சட்டத்துக்கும் கட்டுப்பட்டு அடிமையாய் இருந்து, "பிரிட்டிஷ் அரசாங்கத்தை, சீர்திருத்தச் சட்டத்துக்கு அடக்கி நடத்திக் கொடுக்கிறேன்" என்று பூணூலையும், கீதை உபநிடதத்தையும் தொட்டுச் சத்தியம் செய்து கொடுத்தாலொழிய, போர்ட் செண்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் விடப்படமாட்டார் என்பதை ஒவ்வொரு ஓட்டரும், சமதர்ம சூரர்களும், வயிற்றுப் பிழைப்பு வீரர்களும் உணர்ந்திருக்க வேண்டும் என்று நாம் இப்போதே முரசடிப்போம். **கொள்கையும், நாணயமும், உண்மையும் இல்லாவிட்டாலும், காங்கிரசுக்குப் பிரச்சார பலமும், பார்ப்பனர்கள் ஒற்றுமை முயற்சியும் இருந்தால் காங்கிரசு எண்ணிக்கையில் வெற்றி பெற்றால் அதில் ஆச்சரியப்பட இடமில்லை.**

**ஜஸ்டிஸ் கட்சியோ சரியான பிரச்சாரமில்லாமல் - பத்திரிகை இல்லாமல்-தங்களில் ஒற்றுமை இல்லாமல் ஒருவரையொருவர் தாழ்த்தச் செய்துகொண்ட முயற்சியால், அது எண்ணிக்கையில் தோல்வி அடைந்தால் அதிலும் ஆச்சரியப்பட இடமில்லை. எப்படியானாலும் சரி, ஒரு விதத்தில் "குந்தினாயே குரங்கே உன் கொட்டம் அடங்க" என்பதுபோல், காங்கிரசு காலித்தனமும் தொல்லையும் ஒழிய நல்ல வசதி ஏற்பட்டது என்பதோடு, நாம் மகிழ்ச்சி அடைய வேண்டிய நிலை சந்தேகமற ஏற்பட்டு இருக்கிறது.**

**நிற்க, இனி நம் காரியமென்ன என்பதை நாம் யோசிக்க வேண்டியதற்கு நாம் எதிர்பார்த்தபடியே தக்க தருணம் வந்துவிட்டது. இனி அரை விநாடியும் வீண் செலவழிப்பதற்கு இல்லாத அவ்வளவு சிக்கனத்தில் நேரத்தைக் கையாள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.**

**இனி, நாம் நமது சுயமரியாதைப் போர் முழக்கத்தை முன்னிலும் பன்மடங்கு அதிக வேகத்துடனும் ஊக்கத்துடனும் தொடங்க வேண்டியதுதான் நாம் இனிச் செய்ய வேண்டிய வேலையாகும்.**

**இனி, காங்கிரசுக்கு - பார்ப்பனருக்கு மேடையில்லாமல் எங்கும் சுயமரியாதைச்சுடர், எங்கும் மனித சமூக சமத்துவச் சுதந்தரம் என்கின்ற ஒளிகொண்டு, பட்டணம் தோறும், கிராமம்தோறும், தெருக்கள்தோறும் சுயமரியாதை மேடையையும் மண்டபத்தையும் ஏற்படுத்த வேண்டியதே முக்கியக் காரியமாகும். கூடிய சீக்கிரம் தமிழ்நாட்டில் சவுகரியமுள்ள இடத்தில் ஓர் ஆரம்ப முஸ்தீபுக் கூட்டமும், சமீப காலத்தில் ஒரு தமிழ், ஆந்திரா, மலையாளம் ஆகிய பிரதிநிதிகள் கொண்ட சென்னை மாகாண 4ஆவது சுயமரியாதை மகாநாடும் கூட்டப்பட்டு, இந்தியா முழுமைக்கும் நம் இயக்கம் பரவி ஸ்தாபனங்கள் ஏற்படும்படியான காரியங்களையும் செய்ய வேண்டியது கடமையாகும்.**

**தயாராகுங்கள் வாலிபர்களே! போருக்குத் தயாராகுங்கள்!!**

**("குடிஅரசு" தலையங்கம், 21.2.1937)**

## ஆசிரியருக்கு மடல்

அன்புடையீர், வணக்கம்.


"சிந்தனையாளன்" செப்டம்பர் 2017, பெரியார் 139ஆவது பிறந்த நாள் சிறப்பிதழாக வெளிவந்ததைப் படித்து மிகவும் மகிழ்ந்தேன். "தந்தை பெரியார் 139ஆம் பிறந்த நாள் : பிறவியில் ஏற்றத்தாழ்வு இன்றும் இருக்கிறதா? தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதா? மதச்சார்பின்மை கல்வியில் அரசில் வந்துவிட்டதா?" என்னும் தலைப்பில் வெளியான தலையங்கம் உரத்த சிந்தனைக்கு உரமாக அமைந்திருந்தது.

"ஆர்.எஸ்.எஸ்., பாரதிய சனதா பிடியில் இந்தியத் துணைக் கண்ட ஆட்சி! மாநிலக் கட்சிகள் செல்வாக்கை இழக்கும்! எல்லோரும் சிந்தியுங்கள்" என்னும் அறிஞர் வே.ஆனைமுத்துவின் எழுத்தோவியத்தைப் புகழ்ந் துரைக்க வார்த்தைகள் இல்லை. சிந்தனையாளனின் இதழியல் தொண்டுகள் வெற்றி பெறுவதாக. வாழ்த்துகள்.

தன்மானப் புலவர் **தங்க. சங்கரபாண்டியன்,**
மணலி புதுநகர்

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்

### கா. புரட்சிமாறன் - அ. அருள்மொழி



தமிழ்மறவர் கீ.வை. பொன்னம்பலனார் மகள் மறைந்த பொன்முடியார் - வே. திருஞானம் பேரனும், சோழன்குடிகாடு கோ. காசிநாதன் - நீலா மகனுமாகிய கா. புரட்சிமாறன், நாகப்பட்டினம், வேதாரண்யம் வட்டம், பிரிஞ்சிமூலை மறைந்த புலவர் வை. தட்சிணாமூர்த்தி - வேதவள்ளி மகன்வழி பேத்தியும், சென்னை மடிப்பாக்கம் த. அறவாழி - தனலட்சுமி மகளுமாகிய அ. அருள்மொழி, இவர்களது திருமணம், செயங்கொண்டம், மங்களம் திருமண மகாலில் 10.9.2017 ஞாயிறன்று செம்மொழி தமிழ் ஆய்வு மைய முன்னாள் இயக்குநர் முனைவர் க. இராமசாமி தலைமை யில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அனைவரும் வாழ்த்துரை வழங்கினர். திருமண நாள் நிகழ்வாக சிந்தனையாளன் இதழுக்கு ரூ.1000/- நன்கொடை அளிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### வெ. அஞ்சலி - வி. ஸ்ரீதர்

தமிழ் இதழ்களின் தலைசிறந்த எழுத்தாளர் தமிழ்மகன் என்கிற பா. வெங்கடேசன் - திலகவதி இணையரின் மகள் அஞ்சலி; விவேகானந்தன் - சாந்தி இணையரின் மகன் ஸ்ரீதர் ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, சென்னை காரனோடையை அடுத்த ஜனப்பன் சத்திரம் கூட்டுச் சாலையில் அமைந்துள்ள, யுவஸ்ரீ திருமண மண்டபத்தில் 03.09.2017 ஞாயிறு காலை 7.30 மணிக்கு மிகவும் சிறப்புற நடந்தது.

இவ்விழைவை ஒட்டி, மேற்படி மண்டபத்தில், 2.9.2017 சனி இரவு நடைபெற்ற பெண் அழைப்பு விழாவில், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து, தாம்பரத்தைச் சார்ந்த ஆனை. பன்னீர்செல்வம், செண்ட் ரிங்க் இரா.ப. கோவிந்தன், கரிபால்டி, தாம்பரம் நகராட்சி (முன்னாள்) உறுப்பினர் சம்பத் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### சு. தென்னரசு - ரெ. துர்காதேவி

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஊரணித்தாங்கல் டாக்டர் சுடரொளி ந. சுந்தரம் - ஞானாம்பாள் இணையரின் மகன் தென்னரசு, அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், தூப்பாபுரம் வே.ரெங்கநாதன் - கமலா இணையரின் மகள் துர்காதேவி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, செஞ்சியில், காந்தி கடைவீதியில் வீராசாமி நயினார் திருமண மண்டபத்தில், 10.9.2017 ஞாயிறு காலை 8 மணிக்கு, மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து தலைமையில், சிறப்புற நடைபெற்றது.

தி.மு.க. செயல்வீரர் துரை. திருநாவுக்கரசு முன்மொழிய, மணமகன் தந்தை சுடரொளி ந. சுந்தரம் வழிமொழிய, வே. ஆனைமுத்து தலைமையேற்று வாழ்க்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றி வைத்தார்.

இவ்விழாவில் கலச. இராமலிங்கம், கவிஞர் வையவன், திருவண்ணாமலை மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் பொ. சுப்பிரமணியன், துணைச் செயலாளர் கோ. கோதண்டராமன், கி. இராமநாதன், ப. வடிவேலு, க. ஆதிமூலம் மற்றும் தி.க., தி.மு.க., அ.தி.மு.க. தோழர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மணமக்கள் "சிந்தனையாளன்" புரவலர் கட்டணமாக ரூ.5,000/- (அய்யாயிரம்) வழங்கினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### கி.சு.இ. அருள் - வே. மானசை

கர்நாடக மாநிலம் பெங்களூர் வாழ் பெரியார் பெருந் தொண்டரும், திருவள்ளுவர் சங்கத் தலைவரும், தமிழறிஞரு மான புலவர் கி.சு. இளங்கோவன் - அன்னம் இணையரின் மகன் நாட்டியப் பேராசிரியர் அருள்; பெங்களூர் வேங்கடரங்கன் -சுதா இணையரின் மகள் மானசை ஆகியோரின் தமிழ் நெறித் திருமணத்தை கடலூர் கதிர் முத்தையன் வாழ்க்கை ஒப்பந்த விழா, பெங்களூரில் 9ஆம் பெரும் பகுதியில், ஜே.பி. நகரில், கனகபுரா சாலை, அவல அள்ளி 88ஆம் எண்ணில் உள்ள புளிய மரப்புல் வனத்தில், 15.9.2017 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது.

கி.சு.இளங்கோவன் இத்திருமண நிகழ்ச்சியில் மா.பெ.பொ.க. துணைப்பொதுச் செயலாளர் சி.பெரியசாமி கலந்து கொண்டு மணமக்களை வாழத்தினார். இத்திருமண விழாவில் திராவிடர் கழக, தி.மு.க., அ.தி.மு.க. தோழர்களும் பெங்களூர் தமிழ்ச் சங்கத்தினரும் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர். சிந்தனையாளர் ஆசிரியர் குழுவின் சார்பில் நாமும் வாழ்த்து கிறோம். இந்தத் திருமண நிகழ்வின் மகிழ்வாகச் சிந்தனை யாளன் வளர்ச்சிக்கு ரூ.4000/- வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### தீபக் - நிரஞ்சனா

பெரம்பலூர் முத்துக்கோனார் ரெங்கநாயகி திருமண மண்டபத்தில் பி.தா. தீபக் - கு.சி. நிரஞ்சனா வாழ்க்கை ஒப்பந்த விழா, 31.8.2017 அன்று காலை 8.30 மணிக்கு சு. குமணராசன் தலைமையில் நடைபெற்றது. புலவர் இரா. கூத்தரசன் வரவேற்புரையாற்றினார். நங்கை குமணராசன், குணகோமதி, ந. ஆறுமுகம், அ. பெருநற்கிள்ளி, கி. முகுந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.இராசா சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். இரா. சிவாராஜா நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

தமிழறிஞர்

## புலவர் முத்து. எத்திராசன் மறைந்தார்



புலவர் முத்து. எத்திராசன் செஞ்சி வட்டம் அவியூரில் 25.09.1934ல் திமுத்துசாமி-முத்தம்மாள் இணையரின் நான்காவது மகனாகப் பிறந்தவர். பள்ளி இறுதி வகுப்பை முடித்தவுடன் ஓவியம் பயின்றார். பின் தமிழில் புலவர் பட்டம் பெற்றார். அரசுப் பள்ளியில் தமிழாசிரியராகப் பல காலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

அவர் படிக்கும் காலத்தில் பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றினார். அவர் வாழும் காலத்தில் தமிழ் தமிழர் தமிழ்நாடு ஆகியவற்றில் பல தமிழ் இயக்கங்கள் நடத்திய போராட்டங்களில் கலந்துகொண்டுள்ளார். இலக்கியம் கல்வெட்டு வரலாறு சார்ந்த 35க்கும் மேற்பட்ட நூல்களை அவர் எழுதியுள்ளார். சொல்லும் பொருளும் குருவி தந்த - பரிசு தாத்தா சொன்ன வரலாற்றுக் கதைகள், நீதிக் கதைகள், கம்பர் தரும் பழமொழிகள், இலக்கி யங்களும் சிற்பங்களும் கல்வெட்டுகள் சொல்லும் வரலாறு குந்தவையின் கலைக் கோயில்கள் முத்து எத்திராசன் கவிதை கள் ஆகிய நூல்கள் இவர் எழுதிய நூல்களில் சில. தாம் வாழ்ந்த காமராசர் குடியிருப்பில் தேன்மலர் இலக்கிய வட்டம் 1999 முதற் கொண்டு தொடங்கி குழந்தைகளுக்கும் மாணவ. மாணவியர்க் கும் இலக்கியத் திறன் வளரத் தொடர்ந்து பல்வேறு போட்டிகள் நடத்தித் தமிழ்த் தொண்டாற்றினார்.

தமிழ்நாடு தொன்மையியல் நிறுவனம் நடத்திவரும் தடயம் என்ற அமைப்பின் பொருளாளராகப் பணியாற்றியவர். இவருடைய கல்வெட்டு மற்றும் தொல்லியல் பணியைப் பாராட்டித் தமிழ்நாடு தொல்லியல் நிறுவனத்தின் சார்பாக இவருக்கு 2015ல் செப்புப் பட்டயமும் திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் தடயம் அமைப்பு விழாவில் 2011ல் முதுபெரும் அறிஞர் என்ற பட்டத்தையும் வழங்கப் பெற்றுச் சிறப்பிக்கப்பட்டார்.

எல்லாவற்றுக்கும் மேலாக திருவள்ளுவரின் திருவுருவச் சிலையினை தான் வாழ்ந்த குடியிருப்பில் நிறுவும் பணியில் பெரும் பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துணைச் சிறப்புகளையும் பெற்று இப்புவுலகில் தம் வாழ்க்கைத் துணைவியார் ஆசிரியையாகப் பணியாற்றிய திருமதி ஆண்டாள் அம்மையாரோடு வாழ்ந்து மும்மணிகளாக மூன்று மகன்களை ஈன்று புகழ் படைத்தவர். இவர்கள் எல்லா ருக்கும் தமிழறிஞர் தலைமையில் சீர்திருத்தத் திருமணத்தைச் செய்து வைத்தவர். அவரைப் போன்றே அவரின் மகன்கள் அருள்மணி, மணிவண்ணன், தமிழ்மணி அவர்களும் புகழ்பட வாழ்வதோடு மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல் என்ற குறளுக்கு இலக்கண மாகத் திகழ்கின்றனர். இவருடைய 75வது பிறந்த நாள் மருத்துவர் இராமதாசு அய்யா தலைமையில் 2009ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வயது முதிர்வு மற்றும் நோயின் காரணமாக சென்னை தியாகராய நகரில் 17.09.2017ல் இயற்கை எய்தினார். அன்னாருடைய இழப்பு தமிழ் தமிழர் தமிழ்நாட்டுக்குப் பேரிழப் பாகும்.

**வாழ்க புலவர் முத்து எத்திராசனாரின் புகழ்!**

- செய்தி : முனைவர் **ப. வெங்கடேசன்**

## மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | : **G. விவேக்** |
| பிறந்தநாள் | : 26-07-1992 |
| பிறந்த நேரம் | : காலை 6.00 மணி |
| பிறந்த கிழமை | : ஞாயிற்றுக்கிழமை |
| பிறந்த இடம் | : வேலூர் |
| பிறந்த வரிசை | : முதல் |
| நிறம் | : மாநிறம் |
| உயரம் | : 175 cm. |
| கல்வித் தகுதி | : B.E., P.G.D.B.F. |
| பணி விவரம் | : மத்திய அரசு வங்கிப் பணி Andhra Bank - P.O. (Probationary Officer) |
| தந்தை பெயர் | : தீ. கோபாலகிருஷ்ணன் (இன்ஜினியரிங் ஒர்க்ஸ், உரிமையாளர்) |
| தாயார் பெயர் | : வே.ஆ. செந்தாமரை (அரசுப் பள்ளி, P.G. ஆசிரியை) |
| சாதி | : அகமுடைய முதலியார் |
| உடன் பிறந்தவர் | : ----- |
| சொந்தங்கள் வாழும் ஊர் | : காஞ்சிபுரம், வேலூர், சென்னை |
| முகவரி | : எண்.14, நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம் - 631 502. |
| தொடர்புக்கு | : 77085 57474, 94448 22007 |
| மின்னஞ்சல் | : vivekgopal92@gmail.com |
| எதிர்பார்ப்பு | : நல்ல படித்த / பெண் வேலை (அ) இல்லாமல் தமிழர் முறை திருமணம் |

## அய்க்கூ 500

இது ஒரு சர்வதேச கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு. நீங்களும் பங்கு பெறலாமே!

**நிறைவு நாள் : 31.10.2017**

முகவரி :

ஆசிரியர், **ஏழைதாசன்**

26, அடப்பன் வயல் 8ஆம் தெரு,

புதுக்கோட்டை - 622 002.

**செல் : 9790407068**

## தோழர் தமிழரசன் உள்ளிட்ட செப்டம்பர் ஈகியர்களின் நினைவு நாளை முன்னிட்டு நெருக்கடிகளால் முற்றுகைக்குள்ளாகும் தமிழ்நாட்டைக் காப்போம்!




த.ஒ.வி.இயக்கத்தின் ஆவணத்தை நல்லக்கண்ணு வெளியிட இறைபொற்கொடி பெற்றுக்கொண்டார்.

தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் சார்பில் எழுக தமிழகம் மாநாடு சாந்தோம் அருகில் சி.எஸ்.ஐ. காதுகேளாதோர், வாய் பேசாதோர் பள்ளி யில் 24-9-2017 முழுநாள் நிகழ்வாக நடைபெற்றது.

காலை 10 மணிக்கு தோழர் செம்மணி தலை மையில் அமைப்பு மாநாடு நடைபெற்றது. நில வழகன் விளக்க உரையாற்றினார். த.ஒ.வி.இ. பொறுப்பாளர்கள் உரையாற்றினர்.

பிற்பகல் நடைபெற்ற தோழமை அரங்கத்தில் தமிழகத்தின் மீதான இந்தியத்தின் முற்றாளுமை யை இணைந்து முறியடிப்போம் என்ற தலைப் பில் கருத்தரங்கம் நடைபெற்றது. செவ்வேள் தலை மை தாங்கினார். மங்கையர் செல்வன், தெய்வமணி, செந்தமிழ்வாணன், வாலாசாவல்லவன், பிரவீன் இரவிச்சந்திரன், துரை சிங்காரவேலர் நல்லரசன், காசா. இராசன், திருமலை தமிழரசன், சிவகாளிதாசன் உள்ளிட்ட தோழர்கள் உரை யாற்றினர். மாலை 6 மணிக்கு நடைபெற்ற பொது அரங்கத்தில் தமிழ்நாட்டைக் காப்போம் என்றத் தலைப்பில், நிலவழகன் தலை மையில் இரா.நல்லக்கண்ணு, அருளியார், பொழிலன், தப.உதயகுமாரன், மு.களஞ்சியம் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

---


# மருத்துவப் பழப்புக்குத் தேர்வு முறை

**- இராமியா**

1. இடஒதுக்கீடு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட வகுப்பு மருத்துவர்கள் நிறைந்து உள்ள தமிழ்நாடு, பொதுப் போட்டி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு உயர்சாதி மருத்துவர்கள் நிரம்பி வழியும் வடமாநிலங்களைவிட மருத்துவச் சேவையில் முன்னணியில் உள்ளது.
2. உலகெங்கிலும் இருந்து சிகிச்சை பெற, மக்கள் தமிழ்நாட்டிற்கு வருகின்றனர்.
3. இது தேசியப் பொதுப் போட்டி முறை திறமைசாலிகளைத் தேர்ந்தெடுக்கச் சற்றும் திறனற்றது என்று மெய்ப்பிக்கிறது.
4. இந்நிலையில் இடஒதுக்கீட்டு முறையை விரிவுபடுத்தி விகிதாச்சாரப் பங்கீட்டு முறையை அமல்படுத்துவது தான் மருத்துவச் சேவையின் தரத்தை உயர்த்தும்.
5. தேசியத் தகுதி நுழைவுத் தேர்வு (NEET) மருத்துவக் கல்வியின் / சேவையின் தரத்தைக் குறைக்கவே செய்யும்.

**- மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

# காஞ்சியில் சுயமரியாதைச் சுடரொளி செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம். அண்ணாமலை மூத்தமகன் சி.வி.எம்.அ. பொன்மொழி மறைவு



காஞ்சியில் மூத்த சுயமரியாதைக் காரர் முன்னாள் அமைச்சர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களது மூத்த மகனும், பெரியார் பெருந்தொண்டர் அரங்க ஜானகிராமன் மைத்துனருமான சி.வி.எம்.அ. பொன்மொழி தனது 69ஆம் வயதில் சிறுநீரகக் கோளாறினால் பாதிக் கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 31.8.2017 அன்று காலை மறைவுற்றார்.

இவருடன் பிறந்தவர்கள் சி.வி.எம்.அ. சேகரன் மற்றும் சி.வி.எம்.அ. இளஞ் செழியன். சி.வி.எம்.அ. வில்வம் (அரங்க ஜானகிராமன் மருமகன்), சி.வி.எம்.அ. அன்பரசு, சி.வி.எம்.அ. முல்லை (இவருக்கு ஆவடியில் பேரறிஞர் அண்ணா தலைமையில் திருமணம் நடைபெற்றது). சி.வி.எம்.அ. மணிமேகலை (முனைவர் பட்டம் பெற்று காஞ்சி பச்சையப்பன் மகளிர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்). கீழம்பி கொடிமலர் (வழக்கறிஞர் சமதர்ம அரசுவின் துணைவி).

தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராக இருந்த இவருக்கு 26.4.1970 அன்று காஞ்சியில் நாவலர் நெடுஞ் செழியன் தலைமையில் திருமணம் நடைபெற்றது. தி.மு.க. நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு குடும்பத்துடன் சிறை சென்றுள்ளார்.

இவரது மூத்தமகன் வழக்கறிஞர் சி.வி.எம்.அ.பொ. **எழிலரசன்** காஞ்சித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக உள்ளார். இளைய மகள் தமிழ்ச்செல்வி, காஞ்சிபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி, சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்து வருகிறார். இளைய மகன் பார்வேந்தன் சட்டக் கல்வி B.L. பயின்று பணியாற்றி வருகிறார்.

சி.வி.எம்.அ. பொன்மொழி அண்ணாவின் நாட கங்களான நீதிதேவன் மயக்கம், சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் ஆகிய நாடகங்களில் சிறப்பாக நடித்து அண்ணாவின் பாராட்டைப் பெற்றவர். காஞ்சியில் தி.மு.க. வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றினார்.

அன்னாரது மறைவுச் செய்தியைக் கேள்வியுற்ற தும் தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் துரைமுருகன், சட்டமன்ற உறுப்பினர் சுந்தர் மற்றும் கழக முன்னணியினருடன் வருகை புரிந்து மறைந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் ஆனைமுத்து செய்தியறிந்து தொலைப்பேசியில் இரங்கல் தெரிவித் தார். முற்போக்குச் சமூக நீதி பேரவைத் தோழர்கள் டாக்டர் விமுனா மூர்த்தி, க.கோதண்டன், ம.பெ.பொ.க. தோழர்கள் சி.நடராசன், மு.செயப்பிரகாசு, தீ.கோபாலகிருட்டி ணன் குறள் அமிழ்தன், வ.வேதகிரி, தமிழக இளைஞர் எழுச்சி இயக்கத் தோழர் காஞ்சி அமுதன் உள்ளிட்ட தோழர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

1.9.2017 அன்று சர்வதீர்த்தம் இடுகாட்டில் உடலுக்கு எரியூட்டப்பட்டது. பின்னர் நடந்த இரங்கற் கூட்டத்தில் தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின், துரை முருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, பொதுவுடைமைக் கட்சி மற்றும் அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டு இரங்கலுரை ஆற்றினர். மா.பெ.பொ.க. சார்பில் அரங்க ஜானகிராமன் உரை ஆற்றினர்.

## தமிழக மக்கள் முன்னணி சார்பில் கல்வியை மாநில பட்டியலுக்கு வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்



தமிழக மக்கள் முன்னனி சார்பில் 6.9.2017 புதன் மாலை 5 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் பொழிலன் தலைமையில் ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. அரங்க குணசேகரன் தொங்கி வைத்தார். புலவர் இரத்தினவேலன், இறை.பொற்கொடி கோ.பாவேந்தன் முன்னிலை வகித்தனர். குணங்குடி அனீபா, தியாகு, இரவீந்தரநாத் பிரின்ஸ் கஜேந்திரபாபு, வாலாசா வல்லவன், துரை சிங்கவேல், வழக்கறிஞர் சங்கரசுப்பு, நிலவழகன் பாவெல், திருமலை தமிழ ரசன் காஞ்சீ அமுதன், அ.சி.சின்னப்பா தமிழர், தபசி குமரன் இயக்குநர் களஞ்சியம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் நீட் தேர்வில் பாதிக்கப்பட்டு இயற்கையெய்திய அனிதாவின் படத் திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

# நூல் அறிமுகம்

**திருவண்ணாமலை**




திருவண்ணாமலையை அடுத்த தேவிகாபுரத்தில், 25.09.17 ஞாயிறு காலை, அர.விவேகானந்தனின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா பாவலர் வையவன் தலைமையில் நடைபெற்றது. சி.சி.துரை, திவ்யா செல்வராஜ், மரபுமாமணி வரதராசன், இரா.ப.அண்ணாத் துரை, ஜெ.ராதாகிருஷ்ணன், செஞ்சி தமிழினியன், செந்தில் பாலா, ஆ.ஏகாம்பரம், ஓவியர் ராமச்சந்திரன் ஆகியோர் நிகழ்வில் பன்கேற்றுச் சிறப்பித்தனர். முதன்மைக் கல்வி அலுவலர் வெ.ஜெயக்குமார் வாழ்த் துரை வழங்கினார். கவிஞர் இராகுலன் தொகுத்து வழங்கினார். ராசாபாபு வரவேற்க சுசித்ரா நன்றி கூறினார்.

---

### தந்தை பெரியார் மற்றும் கல்வித் தந்தை காமராசர் பிறந்த நாள் விழா, சிரி சிந்தி நூல் வெளியீட்டு விழா

## முப்பெரும் விழா




கற்க கல்வி அறக்கட்டளை மிக சிறப்பான முறையில் தந்தை பெரியார் மற்றும் கல்வித் தந்தை காமராசர் பிறந்த நாள் விழா, சிரி சிந்தி நூல் வெளியீட்டு விழா உள்ளிட்ட முப்பெரும் விழா 06-09-2017 அன்று கரு.அண்ணாமலை தலைமையில் வீ.பொற்கோவன், இ.குமணன், க.சுப்பிரமணி, மாசிலா விநாயகமூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சிகளை வழக்கறிஞர் ப.அமர்நாத் தொகுத்து வழங்கினார். விழாவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் பெரியார் மணிமொழியான் வரவேற்று உரை நிகழ்த்தினார். விழாத் துவக்கத்தில் சுடரேற்றி அனிதாவுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. விழாவில் பேரா.சுப.வீ, தி.வேல்முருகன், வாலாசா வல்லவன், இனமானக் கவிஞர் செ.வை.ர.சிகாமணி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் வியாபாரிகள் சங்கத் தலைவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில் எம்.ஜி.ஆர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் சென்னை மேல்நிலைப்பள்ளியில் தமிழ்வழிக் கல்வியில் பயிலும் 10ம் வகுப்பு மாணவ மாணவிகள் 181 பேர்களுக்கும், 11ம் வகுப்பு மாணவ மாணவிகள் 239 பேர்களுக்கும், 12ம் வகுப்பு மாணவ மாணவிகள் 219 பேர்களுக்குமாக மொத்தம் 639 மாணவர்களுக்கு ஆங்கில தமிழ் அகராதி, நோட்டுப் புத்தகங்கள், பள்ளிப்பைகள் உட்பட்ட கல்வி உதவிகள் வழங்கப்பட்டன.

---

## புதுவையில் அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயகரின் நூல்கள் ஆய்வு

புதுவைத் தமிழ் இலக்கிய ஆய்வுக் கழகம் சார்பில், அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயகரின் நூல்கள் ஆய்வரங்கம் 5.8.2017 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு செகா கலைக்கூடத்தில் நடைபெற்றது. இரா. தமிழ்வாணன் மொழி வாழ்த்துப் பாடினார். மு,மா. சச்சிதானந்தம் வரவேற்புரையாற்றினார். பெ.பாராங்குசம் தலைமை தாங்கினார். மு. பாலகிருட்டிணன் முன் னிலை வகித்தார். அரங்க விசயரங்கம் ஓவியர் வீர சந்தானம் படத்தைத் திறந்து வைத்தார். பாவலர் கோ. கலியபெருமாள், பேரா. அரங்க. முருகையன் ஆகியோர் இரங்கற்பா பாடினர்.

அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயகர் நூல்கள் ஆய்வு அமர்விற்கு சீனு. வேணுகோபால் இந்து மத ஆசார ஆபாச தரிசினி நூலுக்கு ஆய்வுரை வழங்கினார். தி. கோவிந்தராசு பாயக்காரிகளுக்கும் மிராசுதார் களுக்கும் உண்டாயிருக்கிற விவாதம் என்ற நூலுக்கு ஆய்வுரை வழங்கினார். கே.ஜி.ஆர். கதிரேசன் நன்றியுரையாற்றினார்.

## சொன்னது சொன்னபடி நடந்தது

1. தந்தை பெரியார் அவர்கள் ஒரு திருமணத்தில் உணவு உண்ட பிறகு கையை கழுவ அருகில் இருந்தவரிடம் தண்ணீரை ஊற்றக் கேட்டுள்ளார். அவரும் ஒரு குவளைத் தண்ணீரை ஒரே தடவையில் ஊற்றிவிட்டார். பெரியார் சிறிதும் தாமதிக்காமல் தண்ணீரை ஊற்றியவரை கன்னத்தில் அறைந்து விட்டார். அறைவாங்கியவரும் என்ன தவறு நடந்து விட்டது என்பதை அறிய அமர்ந்திருந்த அய்யாவிடம் பயந்து, பயந்து "அய்யா நான் என்ன தவறு செய்துவிட்டேன்" என்று கேட்டார். பெரியாரும் "நெய் கிடைக்கும்; தண்ணீர் கிடைக்காது; சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறினார். பால் தடையின்றிக் கிடைக்கிறது; தண்ணீர் கிடைப்பது சிரமமாக உள்ளது. இச்செய்தியை பெரியாரின் உறவினர் காலம்சென்ற சேலம் எம். இராசு என்னிடம் கூறினார்.

2. 1967இல் காமராசர் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த பொழுது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. மக்கள் எழுந்து அடுத்த தெருவுக்கு ஓடினர். காமராசர் கூட்ட ஏற்பட்டாளரிடம் கேட்டார் : "ஏன் சனங்க ஓடுறாங்க? என்ன விசயம்னு?" கேட்டார். "பக்கத்து தெருவுக்கு எம்.ஜி.ஆர். வராராம். அதான் ஓடுறாங்க." அதற்கு காமராசர் கூட்ட ஏற்பாட்டாளரிடம் சிரிச்சுக்கிட்டே "ஓடுறாங்க, ஓடுறாங்க, கூத்தாடி பின்னாடி ஓடினா அவன் கூத்தியாகிட்ட நாட்டை கொடுத்துட்டுப் போவான்" என்று 1967இல் சொன்னது 1987இல் பலித்தது.

3. நேருவின் பேரன் ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்கு செய்த துரோகங்களைக் கண்டித்துத் தன்னுடைய ஆதங்கத்தைத் தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ராஜீவ் காந்தியை கவிதையில் "நீ சின்னாபின்னமாக உடல் சிதறி இறப்பாய்; எம் தமிழர்களுக்குத் துரோகம் செய்து விட்டாய்" என்று சொன்னதும், ராஜீவ் காந்தி இறந்ததும் சரிதானே. இச்செய்தியை 15.9.2017இல் ஒரு தமிழர் கூறியதைக் கேட்டதாகும்.

**- உழுவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி அக்டோபர்-2017

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **துரை திருநாவுக்கரசு** | செஞ்சி | 1000/- |
| **கோ. காசிநாதன்** | இல்லத் திருமணம் | 1000/- |
| **ம. சரவணக்குமார்-இராஜலட்சுமி,** சூலூர் | | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - அக்டோபர்-2017

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளியிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Community Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.2B/85, K.S.R.Nagar, M.W.P. 2nd Cross Street, Ambattur, Chennai-53. Editor : **V. ANAIMUTHU**